In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சைவாகம சார தேன்துளித் திரட்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

M. N. கந்தசுவாமி(?)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சைவாகம சார தேன்துளித் திரட்டு



திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், தென்னாங்கூரில்,
ஸ்ரீ ஹரிதாஸ் சுவாமிகள் மடம் ஸ்ரீ பாண்டுரங்க ஆலய வளாகத்தில்,
திருவண்ணாமலை வடக்கு மாவட்ட அர்ச்சக சமுதாயத்தினரைக் கொண்டு,
தமிழ்நாடு அர்ச்சகர் சங்கத்தின் **ஆகம வித்வத் ஸ்தஸ் குழு**
தாரண ஆடி மீ 20, 21 [4:8:2004, 5:8:2004] தேதிகளில் நிகழ்த்திய
சிவாகம வைகானஸாகம வித்வத் ஸதஸ்-ஸில்
ஆற்றப்பட்ட சிறப்புரைகளின் தொகுப்பு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சைவாகம சார தேன்துளித் திரட்டு

கட்டுரைகள்:

1. சிவதீக்ஷா	17
2. பூதசுத்தி	41
3. ஆத்மார்த்த சிவபூஜை	54
4. மஹோத்ஸவம் அல்லது ப்ரஹ்மோத்ஸவம்	59
5. சிவாலயங்களில் ஜீர்ணோத்தாரணம்	67
6. கும்பாலங்காரம்	85
7. தத்வார்ச்சனை - ஸ்பர்சாஹுதி	92

கட்டுரை ஆசிரியர்கள்:

1. டாக்டர் டி. சோமசுந்தர சிவாசார்யார், முதல்வர் ஸ்ரீ லோகாம்பிகா வேதசிவாகம வித்யாலயம், திருப்பாலவனம், திருவள்ளூர் மாவட்டம்.

2. சிவாகம வித்வான், வ்யாகரண சிரோமணி B.கனகஷண்முக சிவாசார்யார், தலைமை அர்ச்சகர், ஸ்ரீ ஜலகண்டேச்வரர் தேவஸ்தானம், வேலூர்.

3. சிவாகமஞான சாகரம், சாக்த ரத்னம், கபிலை மாமணி, திருக்கோலக்கா இராமநாத சிவாச்சாரியார். தலைமை ஆசிரியர், வேதசிவாகம பாடசாலை, சீர்காழி.

4. சிவாகமஞானபாநு, ஸாஹித்ய சிரோமணி பால. ஸர்வேச்வர குருக்கள், முதல்வர், ஸ்ரீமத் ஸ்ரீகண்ட சிவாசார்ய வேதசிவாகம வித்யா பீடம், காரைக்கால்.

5. வ்யாகரண சிரோமணி, S.அருணசுந்தரம், பேராசிரியர், ஸம்ஸ்க்ருதக் கல்லூரி, மயிலாப்பூர், சென்னை.

6. வ்யாகரண விசாரத, G.கோடீச்வர குருக்கள், முதன்மை பரம்பரை பூஜா ஸ்தாநிகர், ஸ்ரீ சநீச்வரர் ஆலயம், திருநள்ளாறு.

7. சிவாகமச்செல்வர், சாவவ K.ராஜப்பா சிவாச்சாரியார், ஸ்ரீ கைலாஸநாதர், ஸ்ரீ ஏகாம்ரநாதர் தேவஸ்தான பரம்பரை ஸ்தாநீகர், பூஜா மிராசுதார், காஞ்சீபுரம்.

EDITED BY: Saiva Sidhāntha Āgama Sāgaram, Sivāgama Gnāna Bhānu, Sivāgama Selvar,
Sri K.Rājappā Sivāchāriār, 45, Ekāmreswarar Sannidhi St., Kāncheepuram-631502. ☎ 4112-223948.

PUBLISHED BY: Tamilnadu Archakar Association, Tiruvannāmalai North District.
[*Contact Address:* (1) Sri V.D.Sammanda Sivāchāriār, Sri Subramania Swamy Devasthananm, ARNI-632301. Tiruvannamalai Dt. ☎ (4173)-229496.
(2) Sri V.Hālāsyanātha Sivāchāriār, Thellaru-604406. Tiruvannamalai District. ☎ (4183)-244278]

Edition 1 | Price: Rs. 40.[00] | 12:12:2004

TO GET COPIES OF THIS BOOK, PLEASE CONTACT PUBLISHERS OR PRINTER.

DESIGNED & PRINTED BY: R.SRIDHARAN, "SWARNAPURI", PLOT # T-7, I CROSS, 46TH ST., NANGANALLUR, CHENNAI-600061. ☎ 22321616 Email: sridharbooks@hotmail.com ❖ WebSite: www.swarnapuri.org

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உச்சரிப்பு விளக்கம்

இந்த நூலில் உள்ள கட்டுரைகளில் ஸம்ஸ்க்ருத ச்லோகங்கள் வரும் இடங்களில், அவை சிறப்பாக வடிவமைக்கப்பட்ட தமிழ் எழுத்துக்களில் தரப்பட்டுள்ளன. அது குறித்த விளக்கம்:

Quick Reference:

1. त த தனிமை சாதாரண எழுத்து.
2. थ த ரதம் தடித்த எழுத்து
3. द த பாதம் முடிச்சு உள்ள அலங்கார எழுத்து
4. ध த தநம் வளைவான, தடித்த எழுத்து.

ஸம்ஸ்க்ருத எழுத்து - தமிழ் எழுத்து - உச்சரிப்பு விளங்க ஒரு உவமை

ऋ	ரு	ருஷி (முனிவர்)
		(உதடுகளைக் குவிக்காமல் 'உ' என்று உரைக்க வேண்டிய இந்த அக்ஷரம் (ர்+உ=) 'உ'-விலிருந்து மாறுபட்டது என்று காட்ட, மேலே ~ குறி இடப்பட்டுள்ளது).
अं	அம்	அம்பா
अः	அ:	நம:
क	க	கடல்
ख	க	முகம்
ग	க	ராகம்
घ	க	ராகவன்
च	ச	எச்சம்
छ	ச	சாயா (நிழல்)
ज	ஜ	ஜலம் (நீர்)
झ	ஜ	ஜங்காரஶ்ருதி
ट	ட	இஷ்டம்
ठ	ட	கடினம்
ड	ட	குடம்
ढ	ட	ஏமடன்
त	த	தனிமை
थ	த	ஸித்தார்த்தன்
द	த	ஸித்தார்த்தன்
ध	த	ஸித்தார்த்தன்

प	ப	பழம்
फ	ப	பலன்
ब	ப	இன்பம்
भ	ப	பயம்
श	ஶ	பாஶ(ச)ம், (ச)ஶங்கு
स	ஸ	ஸரஸ்வதி
श्री	ஸ்ரீ	ஸ்ரீவித்யா
ऽ	ऽ	(அவக்ரஹம்) 'அ' தொக்கி நிற்பது
ऽऽ	ऽऽ	'ஆ' தொக்கி நிற்பது
गूं	ॢ	(ப்லுதம்) 'க்ம்' ரிதॢ ஸத்யம்
ॐ	ॐ	க்க்
यँ	யँ	*அநுநாஸிகம்*- Nasal Twang
यँ	யँ	*அநுநாஸிகம்*- Nasal Twang

("*ய்ய*" என்ற சப்தம் மூக்கினால் உச்சரிக்கப்படவேண்டியபோது, ய-வின் மேலே உள்ள புள்ளி, *பிறையின் மேல் புள்ளியாக* (யँ என்று) மாறும். ய-வைப் போலவே, வ, ல - ஆகிய அக்ஷரங்களுக்கும் அநுநாஸிக ப்ரயோகம் உண்டு).

* * *

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

பதிப்புரை

திருவண்ணாமலை (வடக்கு) மாவட்ட அர்ச்சகர் சங்கம் தென்னாங்கூரில் நடத்திய சைவ வைகானஸ ஆகமங்களின் வித்வத் ஸதஸ் (கருத்தரங்கம்) ஒரு கண்கொள்ளாக் காட்சி. அரங்கத்தின் அமைப்புகளும், அடுத்துள்ள வளாகங்களில் பலவித புராண மூர்த்தங்களை அலங்காரம் செய்து வைத்திருந்த அழகும் அர்ச்சகர்களின் திறமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கிற்று.

இந்த ஸதஸ்ஸுக்காக மிகுந்த ப்ரயத்னம் எடுத்துக்கொண்ட ஆரணி V.D. சம்மந்த சிவாச்சாரியார், தெள்ளாறு V. ஹாலாஸ்யநாத சிவாச்சாரியார், ஷ தென்னாங்கூரில் ப்ரத்யேகமாக உள்ள ஸ்ரீ ஹரிதாஸ் சுவாமிகள் மடத்தில் ப்ரதிஷ்டை செய்யப்பட்டுள்ள மிக அழகான பாலாஜி மூர்த்திக்கு சிறப்பாக அலங்காரம் செய்து அத் திருமேனிக்கு மேலும் அழகூட்டும் திறமை பெற்ற R. பாலாஜி பட்டாச்சாரியார், இவர்கள் அனைவருக்கும் துணை நின்ற M. யக்ஞேச்வர சிவாச்சாரியார், M. சங்கர சிவாச்சாரியார், V.S. சரவண சிவாச்சாரியார், M. ஷண்முக குருக்கள், D. ஜகதீச குருக்கள், A. க்ருஷ்ணமூர்த்தி சிவாச்சாரியார், H. சக்திதர குருக்கள், M. ஈச்வர சிவாச்சாரியார், M. சம்பத் குமார பட்டாச்சார்யார், வேங்கடவரத பட்டாச்சார்யார், மற்றும் அவர்களைச் சார்ந்தவர்கள் அனைவரும் பாராட்டுதற்குரியவர்கள்.

கருத்தரங்க மேடையின் ஒரு பக்கம் சைவாகம வித்வான்களும், மறுபக்கம் வைகானஸாகம வித்வான்களும் அவரவர்களது ஆகமங்களிலுள்ள பற்பல அரிய விஷயங்களைக் குறித்துத் தெளிவாகப் பேசினார்கள். பல

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விஷயங்களில், இரு வகை ஆகமங்களிலும் உள்ள சட்டதிட்டங்கள் ஏறக்குறைய ஒரேமாதிரியாகத்தான் உள்ளதென்பது வெளிப்பட்டது. ஆங்காங்கே காணப்படும் சிறுச்சிறு வேறுபாடுகள் சிறப்புரை ஆற்றிய வித்வான்களால் சுட்டிக் காட்டப்பட்டன.

இக் கருத்தரங்கில், சைவாகமங்கள் சம்மந்தமாக ஆற்றப்பட்ட சிறப்புரைகளின் வரிவடிவங்களைத் திரட்டிப் புத்தக வடிவில் வெளிக்கொணரத் திருவுளங்கொண்ட தெள்ளாறு மற்றும் ஆரணி சிவாச்சாரியார்கள், அப்பணியை அடியேனிடம் ஒப்படைத்து வேண்டிக்கொண்டதற்கிணங்க, ஆதிசைவ இளைஞர் சமுதாயம் பயனடைய வேண்டி, இந்தக் கார்யத்தை ஏற்றுக்கொண்டு ஓரளவுக்கு நிறைவும் செய்துள்ளேன். அனைவரது எதிர்பார்ப்புகளும் எந்த அளவிற்கு நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை இனி வரும் பக்கங்கள் தீர்மானிக்கும்; அவர்தம் விமர்சனங்கள் இதுபோன்ற பணிகளில் என் அனுபவம் முதிர்ந்திட உதவும்.

முதலாவதாக, *சிவதீக்ஷை* பற்றி, திருப்பாலவனம் ஸ்ரீ லோகாம்பிகா வேதசிவாகம வித்யாலயத்தில் முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள வித்வான் டாக்டர் சோமசுந்தர சிவாச்சாரியார் அவர்கள், அவருக்கே உரிய, சொல்லாற்றல் நிரம்பியதும் எதுகை மோனை கூடியதுமான, தமிழ்ப் புலமையை ஆங்காங்கே வெளிச்சம் போட்டுக் காட்டி, அழகுடன் எழுதி உள்ளார். அவர் ஆற்றிய சிறப்புரையும் அவ்வாறே இருந்தது. தீக்ஷையின் தன்மை, பலன், குருபக்தி முதலியவைகளை மிக அழுத்தமாகவும், விவரமாகவும் கூறி உள்ளார். ஆயினும், சமயதீக்ஷை வைபவத்தைக் கூறும்போது, ஒரு இடத்தில், "சிஷ்யனை ... அஸ்த்ர மந்த்ரத்தால், (விசேஷ) அர்க்யத்தால் மந்த்ர ஸ்நாநம் செய்து..." என்று கூறியுள்ளார். இதனால், சிஷ்யனை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விசேஷார்க்யத்தால் ப்ரோக்ஷணம் செய்வதாகப் பொருள்பட ஏதுவாகிறது. சிஷ்யனுக்குச் செய்யும் ஸம்ஸ்காரத்தின்போது, *பஶ்வர்க்யம்* எனத் தனியே ஸம்ஹிதா மந்திரத்தால் அர்க்யம் தயார் செய்து, அந்த அர்க்ய ஜலத்தால்தான் சிஷ்யனுக்கு ப்ரோக்ஷணம் முதலானவைகளைச் செய்யவேண்டும். விசேஷார்க்யம் ஸ்வாமிக்கு மாத்திரமே உரியது. சமயதீக்ஷைக்குப் பின் செய்யப்படும் ஹிதோபதேசத்தில், "சிவன், அக்னி, குரு ஆகிய மூன்றையும் ஆயுள் பர்யந்தம் பூஜித்துப் பயனடைய வேண்டும்" என்று கூறியுள்ள இடத்தில், விசேஷ தீக்ஷையில் கூறப்பட வேண்டிய சில நியமங்களை சமயதீக்ஷையிலேயே கூறிவிட்டது போல் தோன்றுகிறது. சமயதீக்ஷைக்குப் பின், பொதுவாக அனைவருக்கும், சிவாகம ச்ரவணத்திற்கும், குருவுக்குப் பணிவிடை செய்வதற்கும், சமயானுஷ்டானம் செய்வதற்கும் மாத்திரமே அதிகாரம் உண்டு. சிவபூஜைக்கும், அக்னி கார்யங்களுக்கும் விசேஷதீக்ஷைக்குப் பிறகே அதிகாரம். "மேலும், ஆசார்ய அபிஷேகத்தில் அத்வசுத்தி ஆறும் செய்யப்படும்" என்று கட்டுரையாசிரியர் கூறியுள்ளது இன்றைய ஆசார்யாபிஷேகத்தைக் கருத்தில் கொண்டே! ஏனெனில், 'அத்வசுத்தி' நிர்வாணதீக்ஷையில் அல்லவா இடம்பெறும்! மற்றபடி, அனைத்து விஷயங்களையும் விஸ்தாரமாகக் கூறி, சிஷ்யர்களுக்கு குருபக்தியினால்தான் ஞானம் கிடைக்கும் என்பதைக் கட்டுரையாசிரியர் மிகத் தெளிவாகத் தெரிவித்துள்ளார். தீக்ஷை பெறவேண்டும் என்ற ஆவலுள்ளவர்கள், அவரது கட்டுரையைப் படித்தாலே தீக்ஷையின் தன்மை, கருத்து, உபதேசம் யாவும் பெற்ற பலனை அடைவார்கள்.

இரண்டாவது கட்டுரையாசிரியர் வேலூர் கனக ஷண்முக சிவாச்சாரியார், கருத்தரங்கில் *பூதசுத்தி*யின் பலவித

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிலைகளைப் பற்றித் தெளிவாகப் பேசியதோடு, கட்டுரையிலும் தெளிவாகச் சொல்லி, யாவர்க்கும் புரியும்படி செயல்முறை விளக்கம் தந்துள்ளார். இவ்வாறான பெரிய விஷயங்களை விளக்க அவருக்குக் கருத்தரங்கில் அவகாசம் அதிகமாக இல்லாமையால் ஓரளவே ரத்னச் சுருக்கமாகப் பேசிய அவர், இந்தக் கட்டுரையில் தம் கருத்துக்களை வடித்தனுப்பி, அவை அனைத்தையும் மிக ஆழமாகச் சிந்தித்து, தெளிந்து, கடைப்பிடிக்க வேண்டியவைகளாகச் செய்துள்ளார்.

மூன்றாவதாக, திருக்கோலக்கா ராமநாத சிவாச்சாரியார் அவர்கள் *ஆத்மார்த்த பூஜையைப்* பற்றி மிக அழகாக, உதாரணங்களுடன், உபதேச க்ரமத்தில் இறைவன் சீடர்களுக்கு உபதேசித்ததுபோல் சொல்லியுள்ளார். பலவிதமான க்ஷணிக-லிங்க பூஜைகள், சல-லிங்க பூஜைகள், இவைகளின் பலன்கள் யாவும் அந்தந்த ஆகமங்களின் ஆதார நுணுக்கங்களுடன் கூறியுள்ளார். எல்லோரும் ஆத்மார்த்த பூஜைக்கு அதிகாரம் உள்ளவர்கள், ஆனால் பரார்த்த பூஜை ஆதிசைவர்களுக்கே உரியதாகையால் பூரண ஞானம் அடைந்து ஆலயங்களில் லோகக்ஷேமத்திற்காக பரார்த்தபூஜை செய்ய, ஈசன் கொடுத்த அதிகாரத்தை நன்முறையில் பயன்படுத்தி, உலக நன்மைகளை பெருக்கச் செய்ய வேண்டியது ஆதிசைவரது கடமை எனத் தெளிவாகக் கூறியுள்ளார். பாடசாலையில் மாணவர்க்கு போதிக்கும் முறையாக, கேள்வி-பதில் வடிவில் இக் கட்டுரை இருப்பதால், அனைத்து மாணவர்களும் ஆகமங்களின் உட்கருத்துக்களுடன் கூடிய ஆத்மார்த்த பூஜையின் பலனை அறிந்து செயல்பட்டு, தாங்களும் லோகமும் க்ஷேமமாக வாழ வகை செய்வதாக உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நான்காவதாக, காரைக்கால் ஸ்ரீமத் ஸ்ரீகண்ட சிவாசார்ய வேதசிவாகம பாடசாலையின் முதல்வர் ஸர்வேச்வர சிவாச்சாரியார் *உத்ஸவம்* என்பதின் பல விதங்கள் பற்றியும், "சாம்பவீ தீக்ஷையே உத்ஸவம் ஆகும்" என்பது பற்றியும், த்வஜாரோஹணத்தில் கொடிச்சீலை, ஆன்ம லக்ஷணம், பதி லக்ஷணம் பற்றியும், விவரமாக தத்துவங்களுடன் விளக்கியுள்ளார். திருஞானசம்பந்தர் தேவாரத்தின் தொகுப்புடன் ஆரம்பித்துத் தெளிவாக விளக்கி, பிறகு உத்ஸவத்தின் ச்ருஷ்டியாதி பஞ்ச-க்ருத்யங்களின் லக்ஷணங்களைத் தொகுத்து அளித்தது அனைவரும் உத்ஸவத்தைக் கண்ட பேரானந்தத்தினை அடையும் வண்ணம் இருந்தது. சூர்ணோத்ஸவம், மௌனோத்ஸவம் முதலிய விஷயங்களைத் தெளிவாகக் கூறியுள்ளது மட்டுமல்லாது, ஆங்காங்கே தாயுமானவர் போன்ற ஞானகுருவின் சொற்களையும் ஒப்பிட்டுக் காண்பித்துள்ளார்.

ஐந்தாவதாக, *சிவாலயங்களில் ஜீர்ணோத்தாரணம்* குறித்து மயிலாப்பூர் (சென்னை) ஸம்ஸ்க்ருதக் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றி வரும் திரு அருணசுந்தரம் அவர்கள் அளித்துள்ள கட்டுரை இடம் பெறுகின்றது. ஜீர்ணோத்தாரணத்தில் தொடங்கி, அதைப் பற்றி மட்டும் பேசி முடிக்காமல், லிங்கம், ப்ரதிஷ்டா போன்ற அடிப்படைப் பதங்களுக்கான விவரங்களோடு தொடங்கி, பல்வகை ப்ரதிஷ்டா முறைகளை விவரிக்கும் ஆசிரியர், நிகமக்ஞான சிவாச்சாரியாரின் ஜீர்ணோத்தாரண தசகத்தின் அடிப்படையில், ஜீர்ணோத்தாரண முறைகளைத் தெள்ளத் தெளிவாக விவரித்துள்ளார். மூலவரை பாலாலயம் செய்யாமல் விமானத்திற்குத் திருப்பணி செய்வது தவறு என்பதை ப்ரமாணங்களுடன் விளக்கியுள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்வாயம்புவாதி லிங்கங்களுக்கு பாலாலயம் கலாகர்ஷணம் ஆகியவை கிடையாது என்றும், உண்டு என்றும் இரு வகையான ஆகம வசனங்கள் உள்ளன. அவற்றை ஆராய்ந்து பல விளக்கங்களைத் தந்துள்ளார். அவற்றிற்கும் மானுஷ ப்ரதிஷ்டா லிங்கங்களுக்கும் ஜீர்ணோத்தாரண விஷயத்திலே உள்ள வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டி உள்ளார். கலாகர்ஷணம் செய்த பிறகும் கூட, ஸ்வாயம்புவாதி லிங்கங்களில் ப்ரகாசம் இருந்துகொண்டு இருக்குமாதலால், அதற்கு நித்யமும் ரஹஸ்ய பூஜை செய்துவர வேண்டியதின் அவச்யத்தையும், அவற்றின் புனிதம் குன்றாமல் பாதுகாக்கப்படவேண்டியதின் அவச்யத்தையும் விளக்கியுள்ளார். தேவி-தேவர்கள்-ரிஷிகள் போன்றவர்களால் பூஜிக்கப்பட்டதாலும், அவர்கள் தங்களது தபோ-பலத்தை அங்கு அர்ப்பணித்திருப்பதாலும் ஸ்வாயம்புவாதி லிங்கங்களில் ஏற்பட்டிருக்கும் மூல சக்தியினைச் சேர்த்து நம்மால் கலாகர்ஷணம் செய்ய இயலாது என்பதனாலேயே, சில ஆகமங்கள் ஸ்வாயம்புவாதி லிங்கங்களுக்கு கலாகர்ஷணம் வேண்டாம் என்கின்றன. அந்த மூல சக்தியைப் போற்றிப் பாதுகாக்கவே மேற்சொன்ன ரஹஸ்ய பூஜை செய்து வர வேண்டும். ஆனால், நம் போன்றோரால், இதற்கு முன் ப்ரதி தினம் பூஜா காலங்களில் செய்யப்பட்ட க்ரியைகளாலும், இதற்கு முன் நடந்த கும்பாபிஷேகங்களில் செய்யப்பட்ட அத்வ ந்யாஸம் முதலான விசேஷ ந்யாஸாதிகளாலும், மற்ற விசேஷ பூஜைகளாலும், நிறைந்துள்ள ஸாந்நித்யத்தை நம்மால் கலா கர்ஷணம் செய்ய இயலும். அதை மட்டுமாவது கலாகர்ஷணம் செய்யாமல் அப்படியே விட்டு விட்டு, விமானத்தில் ஏறி உத்தாரம் செய்வது தவறு. எனவே, சித்தர்களால் பூஜிக்கப்பட்டதும் கலாகர்ஷணத்திற்கு அப்பாற்பட்டதும் ஆன மூல சக்தி தவிர, நமது பூஜைகளால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பகவானின் அனுக்ரஹத்துடன் உண்டான மந்த்ர ஸாந்நித்யத்தையாவது கலாகர்ஷணம் செய்து, கும்பத்தில் ஏற்றி, உபசாரங்கள் செய்வது சாஸ்த்ர விரோதமில்லை. அவ்வாறு, பாலாலயத்தில் தரிசனார்த்தமாக உபசார பூஜைகள் செய்து, கர்ஷணமாகி உள்ள மந்த்ர ஸாந்நித்யத்தைப் போற்றி, பாதுகாத்து, வ்ருத்தி செய்து, கும்பாபிஷேகம் மூலமாக அதை லிங்கத்திற்குத் திருப்பி, அங்கேயே இருந்துகொண்டிருக்கும் மூல சக்தியோடு இணைத்து, ப்ரதிஷ்டையைப் பூரணமாக்க வேண்டியது நம் கடமை. எனவேதான், ஸ்வாயம்புவாதி லிங்கங்களுக்கு கலாகர்ஷணம் இல்லையென்று சில ஆகமங்களில் காணப்பட்டாலும், அவற்றிற்கும் உபசாரமாகக் கலாகர்ஷணம் செய்து, பாலாலயத்தில் ஸ்தாபித்து, அந்த பாலாலய மூர்த்திக்கு உபசார பூஜைகள் செய்து வருகிறார்கள்.

ஆறாவதாக, திருநள்ளாறு கோடீச்வர குருக்கள் *கும்பாலங்காரம்* குறித்து வரைந்துள்ள ரத்னச் சுருக்கமான கட்டுரை இந்த நூலில் இடம் பெறுகிறது. அதுகுறித்து, ஸதஸ்ஸில் அவர் ஆற்றிய சிறப்புரை குடத்தின் மீது வைத்த தீபம் போல், அனைவருக்கும் ஞான வழி காட்டுவதாக இருந்தது. கும்பாலங்காரத்தின்போது உபயோகிக்கும் ப்ரயோக வடிவை அவர் அப்படியே கட்டுரையிலும் வெளிக்கொணர்ந்துள்ளார். ச்லோகங்கள், விவரமான தமிழ் விளக்கம், என்ன சொல்லும்போது என்ன செய்யவேண்டும் என்ற விளக்கம் ஆகியவற்றை அவர் கூறியுள்ளது, அனைவரும் அந்தந்த மந்திரங்கள் கூறும்போது, அந்தந்த கிரியைகளையே பாவனைகளுடன் செய்து, கும்பத்தையே சரீரமாகக் கொண்டு, மாவிலை, தேங்காய், கூர்ச்சம், இரத்தினம், புஷ்பம், சந்தனம், அதில் போடும் வாசனை திரவியங்கள் ஆகிய யாவற்றையும் சரீரத்தில் உள்ள

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவயவங்களாக பாவித்து, மந்திரம், பாவம் இவற்றால் ஓர் உயிருள்ள தேஹமாக கும்பத்தை உருவேற்றி ஜீவனுள்ளதாகக் காட்டி, இறை ஸந்நிதிக்கு அதைக் கொண்டு செல்லும்போது, அந்த இறை சக்தியானது, நமது ஆன்மாவிற்குள் ப்ரதிஷ்டை ஆவதுபோல், கும்பத்தில் ஆவாஹனமாகி நமக்கு அருள் பாலிப்பதாக அமையும் தன்மையை விளக்குகிறது *கும்பாலங்காரம்*.

இனி, ஏழாவதாக வருவது *தத்வார்ச்சனை-ஸ்பர்சாஹுதி*. ஏற்கெனவே நான் புத்தக வடிவில் வெளியிட்டு உள்ளதையே எனக்குப் பேச வாய்ப்பளித்தார்கள். இதில் என்னை நானே விமர்சிக்க வேண்டியதாகிறது. ஆகமங்களின் அடிப்படையில் எவ்வாறு உள்ளதோ, பத்ததியின் அடிப்படையிலும் அவ்வாறே உள்ளது என்பதைத்தான், உதாரணங்களுடன், ஆகமங்களில் உள்ள ச்லோகங்களுடன், நான் கூற இயலும். இதில் எனது கருத்து எதையும் சுயமாகத் திணிக்க இயலாது என்பது தெரிந்ததே. சில இடங்களில் உள்ள ப்ரயோக முறைகளுக்கும், வேறு சில இடங்களில் உள்ள நடைமுறைகளுக்கும் உள்ள வித்தியாசத்தை எடுத்துக் காட்ட வேண்டிய சூழ்நிலை. தங்களுக்குப் பழக்கமான வகையில் தாங்கள் செய்யும் கார்யங்களை சிலர் *சிஷ்டாசாரம்* என்று சொல்லுகிறார்கள். சிஷ்டாசார லக்ஷணம் என்ன கூறுகிறது? வேதத்தில் கூறப்பட்டு இருப்பதை, ஸ்ம்ருதிகளும் அப்படியே கூறியிருந்து, அது சிஷ்டர்களால் ஏற்கப்பட்டிருப்பது சிஷ்டாசாரம்; ஒரு ஸ்ம்ருதிக்கும் இன்னொரு ஸ்ம்ருதிக்கும் வேற்றுமை இருப்பின், அவற்றிலுள்ள குணாகுணங்களைப் பார்த்து, வேதத்தின் ஸாரமாக இருப்பதை அனுஸரிப்பது ச்ரேஷ்டம். இவ்வாறாக தர்ம சாஸ்த்ரத்தில் கூறப்பட்டுள்ளது. ஒரு விஷயம் வேதத்திலோ, ஸ்ம்ருதிகளிலோ தெளிவாகக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காணப்படவில்லை என்றாலும், ச்ரேஷ்டர்களால் அது ஆசாரமாக அனுஷ்டிக்கப்பட்டு, அதனால் நன்மைகள் விளைவதாக இருந்தால், அந்த விஷயத்தை அல்லது ஆசாரத்தை "சிஷ்டாசாரம் ப்ரதானம்" என்று கூறலாம்; ஏனெனில் இதனைப் பற்றி ஸ்ம்ருதிகளிலோ, ச்ருதியிலோ ஏதும் காணப்படாத நிலையில், சிஷ்டாசாரம் ப்ரதானமாக நிற்கும். இதிலும் குறைகள் தெரிந்தால், அது சரி செய்யப்பட்டு, நன்மை பயக்கக்கூடியதாக இருப்பின் ஏற்றுக் கொள்ளத் தகுந்ததே. எந்த ஒரு விஷயத்தைப் பற்றி மூல ஆகமங்களும், முக்கிய பத்ததிகளும் ஒரே மாதிரியாக உள்ளதோ, அதனை அனுசரித்துச் செயல்படுவதே *சிஷ்டாசாரம்* எனக் கூறமுடியும். தத்வார்ச்சனை-ஸ்பர்சாஹூதி முதலான எந்த ஒரு கிரியையும், மூலாகமம், பத்ததி இவைகளில் சொல்லப்பட்டவைகளை அனுசரியாமல், சந்தர்ப்ப சூழ்நிலையால் மாற்றத்துடன் செய்துவிட்டு, அதனை சிஷ்டாசாரம் எனக் கூறுவது சரியாகுமா? சிந்திக்கவும். இதன் அடிப்படையில்தான், எனது கட்டுரையில், தத்வார்ச்சனை-ஸ்பர்சாஹூதி விளக்கங்களுடன் கூறப்பட்டுள்ளதே தவிர, அதில் தன்னிச்சையாக ஏதும் கூறப்படவில்லை. பல இடங்களில், பல சம்பவங்களில், இந்தக் கிரியை அனுசரிக்கும் காலம், நேரம், அவசரம், முறைகள், இவற்றில் உள்ள ச்ரமங்கள் ஆகியவற்றைச் சுட்டிக் காட்டியுள்ளேன். இதற்கு மேலும் என்னை நானே விமர்சித்துக் கொள்ள இயலாது. இதிலுள்ள நிறை குறைகளை வித்வான்கள் அபிப்ராயத்திற்கே விட்டுவிடுகிறேன்.

இது வரை, எனக்கு அளிக்கப்பட்ட பதிப்பாசிரியன் என்ற பொறுப்பிற்கான கடமையை நிறைவேற்ற, பதிப்புரையாக, சில விமர்சனங்களை என் சிற்றறிவுக்கு எட்டிய வகையாகக் கூறியுள்ளேன். அனைவரும் இந்நூலை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏற்றபடி பயன்படுத்திச் சிறப்பாகச் செயல்பட்டு இறையருளைப் பூர்ணமாக அடையவும், ஆதிசைவ சமூகம் ஆகமங்களின் வழிநின்று உலகில் சீரும் சிறப்பும் பேரும் புகழும் பெற்று மேன்மேலும் அனைத்து மக்களாலும் அரசாலும் கௌரவிக்கப்படவேண்டிய நிலையை அடைந்து உலகு உள்ளவரை இறைத்தொண்டு புரிந்து வாழவும், பரம்பொருளான பரமேச்வரனையும் அருள் பாலிக்கும் அனைத்து பெரியோர்களையும் நமஸ்கரித்து ப்ரார்த்தித்து நிறைவு செய்கிறேன்.

இந்த நூலின் பிழைகளகற்றும் பணிக்கு உறுதுணை நின்ற காஞ்சீபுரம் க.கணேச குருக்கள் மேலும் இது போன்ற பணிகளைச் செய்து ஆகம ஞான செல்வத்தை வ்ருத்தி செய்துகொள்ள காமாக்ஷிநாதனை ப்ரார்த்தித்து ஆசீர்வதிக்கிறேன்.

இந்தப் புத்தகத்தை அச்சிட்டு வெளிக் கொணரத் துணை நின்ற சென்னை-நங்கநல்லூர் ஸ்ரீ R. ஸ்ரீதரன் அவர்களையும், அவர் மேன்மேலும் இது போன்ற ஆன்மீகப் பணிகளில் ஈடுபட்டு, ஸ்ரீ தர்மலிங்கேச்வரரின் பரிபூரண க்ருபாகடாக்ஷத்தைப் பெற்றுய்யுமாறு ஆசீர்வதிக்கிறேன்.

இங்ஙனம்,

11.11.2004 *சாலவ K.ராஜப்பா நாயஹர். காஞ்சீபுரம்.*

** ** **

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

1

சிவதீக்ஷா

கட்டுரை ஆசிரியர்: டாக்டர் சிவஸ்ரீ டி. சோமசுந்தர சிவாசார்யார் எம்.ஏ, பிஎச்டி (SAN), முதல்வர் ஸ்ரீ லோகாம்பிகா வேதசிவாகம வித்யாலயம், திருப்பாலவனம் - 601205, திருவள்ளூர் மாவட்டம். (☎ 04119 - 278651 / 278904) [வீடு: ஸ்ரீகடேஸ்வரி நிவாஸ், 15 / 79, 18 வது அவின்யூ, அம்பத்தூர், சென்னை - 53. ☎ 26862598]

தீயதே ஜ்ஞாந ஸத்பாவோ க்ஷீயதே ச மலத்ரயம் ।
தாந க்ஷபணதர்மித்வாத் தீக்ஷா இத்யபிதீயதே ॥

உயர்ந்த, மெய்ஞான, மேன்மைமிகு சிவஞானத்தைத் தரவல்லதும், மும்மலம் என அழைக்கப்படும் ஆணவ மலம், கன்ம மலம், மாயா மலம் ஆகிய மூன்றையும் சிவஞானப் பெருக்கால் நாளடைவில் கொஞ்சம் கொஞ்சமாக இல்லாததாக ஆக்கும் தன்மையும் சிவ தீக்ஷை ஸம்ஸ்காரத்திற்கு இயல்பாக அமையும் தன்மை ஆகிறது.

இப்பூவுலகில் மனிதப் பிறப்பைப் பெற்ற ஒவ்வொருவரும் புனிதனாக வாழ்ந்து, மனிதத் தன்மையோடு, எல்லோரிடமும் மனிதாபிமானத்தோடு வாழ்வாங்கு வாழ்ந்து, வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட வழிவகுப்பதே சிவதீக்ஷைதான்.

மானிடர் யாவரும் சிவதீக்ஷை எனும் 'சிறப்புச் சிவசடங்கைப் பெற்று, ஆன்மார்ந்த சிவலிங்க வழிபாடு என்னும் ஆத்மார்த்த பூஜையை ஆன்மா உள்ளவரை உள்ளபடியே உவந்து மனமுவந்து செய்து, மனம் மொழி மெய்களால் மெய்ப்பொருளாம் சிவப்பரம்பொருளைத் தேடி,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாடி, கூடி, அவருக்காகவே ஓடி, வாடி, அன்றாட வாழ்க்கையை அவரைப் பூசிப்பதற்காவே அர்ப்பணித்து, அகமகிழ்வதே பிறவிப்பயன் எனக் கொள்ள வேண்டும் என்பதே சாலச்சிறந்தது.

இப்பூவுலகில், இந்தியத் தென்தமிழ் நாட்டில், அனாதி சைவரான சிவப்பரம்பொருளைப் பூசிக்க, முக்திப்பேற்றையே யாசிக்கப், பிறந்த நாம், வழிவழி அடிமையராய்ப் பிறந்த ஆதிசைவர்களாகிய நாம், அனைவரும் தனக்காகவும், தரணிக்காவும், அச் சிவப்பரம்பொருளை, இமைப்பொழுதும் சிந்தைவிட்டு அகலாதானை, சிந்தித்து, வந்தித்து, வழிபட்டு, தன்னலங்கருதாது தரணி முழுதும் தகைசான்ற நல்வாழ்வு வாழவும், யாவரும் தீர்த்தவாரித் திருவிழா மூலம் சாம்பவீ தீக்ஷை எனும் கூட்டு வழிபாட்டுச் சிவதீக்ஷையைப் பெற்றுத் தரவும், கடமைப்பட்டவர்களாக, கண்ணியம் தவறாது கடமைகள் யாவும் உணர்ந்தவர்களாக, இனிது வாழ்பவர்களாகவும், வாழ்விப்பவர்களாகவும், இருக்குமாறு சிவப்பரம்பொருள் நமக்கு இப்பிறவியை அளித்து அர்ப்பணிக்கத் தூண்டுகிறது என்பதை யாவரும் அறிவோம்; அதையே செய்யவும் முனைவோம்.

யாவர்க்கும் உரிய இச் சிவதீக்ஷயை எல்லோர்க்கும் செய்விக்கத்தக்க நாம் முதலில் நல்ல குருவை நல்ல நேரத்தில் நாடிப் பணிந்து போற்றி வணங்கிக் குருவருளை முதலில் பெற முயலவேண்டும். ஏனெனில் குருவருளால்தான் திருவருளை எளிதில் பெற இயலும். பக்குவப்பட்ட சீடனைத் தேடி, நாடி, சிவப்பரம்பொருளின் பிரதிநிதியான குருவும் வருவதுண்டு. அது சிஷ்யனின் முற்பிறவி நல்வினையையும், இப்பிறவியில் நினைவு தோன்றிய நாள்முதல் நிர்மல நிமலனை நாடத் துடிக்கும் நற்பாங்கையும் பொறுத்ததே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சமய தீக்ஷை

சிவதீக்ஷை நான்கு வகையாகப் படிப்படியாக கூறப்பட்டுள்ளது. முதலாவது சமயதீக்ஷை. ஆதிசைவ அந்தணராக, சிவப் பிராம்மணனாக, அவதரித்தவர் முதலில் தனது தாய் தந்தையர் மூலம் கர்ப்பாதானம், பும்ஸவனம், சீமந்தம், ஜாதகர்மா, நாமகரணம், உபநிஷ்க்ராமணம், அன்னப்பிராசனம், வித்யாப்யாசம் சௌளம் வரை முடித்துக் கொண்டு, பிறகு இரு பிறப்பாளர் எனும் பூணூல் அணிவித்துக் கொண்டு, பரம்பொருளின் வடிவான மகாமந்திரமான ஸ்ரீ காயத்ரி மந்த்ரத்தை பிரஹ்மோபதேசம் எனும் பெயரில் உபதேசிக்கப் பெற்று, உபநயனம் என்ற ஸம்ஸ்காரத்தை முடித்துக் கொண்டு, ஓராண்டு மூன்று வேளையும் சந்தியாவந்தனம், இரண்டு வேளையும் சமிதாதானம் செய்து (செய்யத் தூண்டி, செய்து வைத்து, செய்யும்படிச் செய்து), தலை ஆவணி அவிட்டம் முதலியன செய்து, ஸ்ரீ காயத்ரி பூஜை, ஜபம், ஹோமம், தர்ப்பணம், மார்ஜனம், ப்ராஹ்மண போஜனம் முதலியன முடித்து, பின்னரே முதலாவதாகச் செய்யத்தக்க சமயதீக்ஷை செய்து கொள்ள வேண்டும். இந்த ஸம்ஸ்காரம் ஆனவர்கள்தான் சிவாகமம் பயிலுவதற்கு உரியவர்கள் ஆகிறார்கள். அதாவது சரியைத் தொண்டாற்ற சரியானவர்கள் என மதிக்கப்படுவார்கள். ஆன்மார்த்த, பரார்த்த பூஜை செய்பவர்களுக்கு அனைத்து உதவிகளும் செய்யத் தகுதிமிக்கவர்களாகக் கருதப்படுகிறார்கள். எனவேதான் "வைதிகந்து புராக்ருத்வா பஶ்சாத் சைவிக மாசரேத்" என்ற வாக்கியப்படி, ப்ரஹ்மண்யம் (ப்ராம்மணத்தன்மை) மேலோங்க, வேதத்தில் விதித்த பொது விதி தர்மமான சந்த்யாவந்தனங்களை முதலாவதாகச் செய்து, பிறகே சிறப்புமிக சைவ சந்த்யாவந்தனமும் பஞ்சாக்ஷர ஜபங்களும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செய்ய வேண்டும். விபூதிதாரணம், ருத்ராக்ஷதாரணம் செய்து கொண்டு, குலப் பெரியவர்கள் யாவரையும் வணங்கி அடக்கமிகு வினயத்தோடு அமைதியாகப் பேசி, அவரவர்களுடைய நல்லாசியைப் பெற்று, விசேஷ தீக்ஷை பெறும் பாக்யத்தைப் பெற வேண்டும்.

சமயதீக்ஷை ஆனவர்கள் காலையில் மட்டும் வைதிக ஸந்த்யாவந்தன ஜபம், சமிதாதானம் முடிந்த பிறகு சைவ சந்த்யாவந்தன பஞ்சாக்ஷர ஜபமும் செய்யவேண்டும். மதியம் நண்பகல் 11.30 மணிக்கு மதிய நித்ய கடனான மாத்யான்னிகத்தைச் செய்து பிரஹ்மயக்ஞமும் செய்ய வேண்டும், மாலை வைதிக ஸந்த்யாவந்தனம் மட்டும் செய்து, ஜபம், சமிதாதானம் முடித்தவுடன் விரும்பிய அளவு பஞ்சாக்ஷர ஜபம் மட்டும் செய்யலாம். குருவானவர் சிவனிடம் தான் ஏற்றுக்கொண்ட சீடனின் முன்வினைகளுள் தீவினையனைத்தும் நீக்க வேண்டி நீக்கி, சுத்தான்மாவாக்கி, சீடனின் நிலைநோக்கி, குருவுக்கு சிவப்ரேரணை அப்போது அமையும் வண்ணம் சீடனுக்கு குருமூலம் பஞ்சாக்ஷரம் கிடைக்கும். குரு உபதேசித்த வண்ணமே சமயதீக்ஷா சீடன் இருக்கத் தக்கவன். குருபக்தியின் தன்மையை பொறுத்தே சிவனருள் கைவரப் பெறுவான். எனவே குருபக்தி சிவபக்தியைவிட மேலாக மதிக்கத்தக்கதாகிறது. இது குறித்தே குருவின் பெருமை குருகீதையில் முதல் அத்யாயத்தில் 33-வது ச்லோகத்தில் இவ்வாறு கூறப் பட்டுள்ளது. குகாரஸ்ச்சாந்தகாரஸ்து ருகாரத்தன்னிரோதக்ருது । அந்தகார விநசித்வாத் குருரித்யபிதீயதே ॥ மேலும், சிவக்ரோதாத் குருஸ்த்ராதா குருக்ரோதாத் சிவோநஹி । தஸ்மாத் ஸர்வ ப்ரயத்னேன குரோராக்ஞாம் நலங்கயேத் ॥

"கு" என்ற எழுத்து அறியாமையையும் "ரு" என்ற எழுத்து அதைப் போக்கி ஞானத்தைத் தரவல்லது எனவும்

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

பொருள்படுமாதலால், குருவின் பெருமை குறிப்பிடப் பட்டுள்ளது. சிவபெருமான் உன்மேல் கோபித்தால் உன் குருவால் உன்னை சிவக் கோபத்திலிருந்து காப்பாற்ற முடியும். ஆனால் குரு கோபித்துக்கொண்டால் சிவபெருமானும் காப்பாற்ற மாட்டார். எனவே குருவின் ஆணையை ஒருபோதும் மீற நினைக்கக்கூட கூடாது.

சமய தீக்ஷை வைபவத்தில் அநுக்ஞை முதலான பூர்வாங்க கிரியைகளை முடித்துக் கொண்டு, சூர்யபூஜை முதல் அக்னிகார்யத்தில் தர்ப்பண தீபனம் வரை முடித்து, சருபாகம், சருப்ரோக்ஷணம் சருவிபாகம், சருஹோமம் முடித்துப் பூர்ணாஹுதி வரை செய்த பிறகு, குரு சிஷ்யனுக்காக சிவபெருமானிடம் வேண்டும் உருக்கமான பிரார்த்தனையை உற்று நோக்கும் போது, குருவானவர் சிஷ்யனுக்காக எவ்வளவு ஞானப்பாசம் மிக்கவராக அமைகிறார் என்பதை நம்மால் பூரணமாக உணர முடியும்.

அதனால்தான் "சிஷ்ய பாபம் குரோர் வ்ரஜேந்" என்ற வாக்கியம் உற்று நோக்கத் தக்கது. சிஷ்யன் எந்த பாபம் தெரிந்து செய்தாலும் தெரியாமல் செய்தாலும் புரிந்து செய்தாலும் புரியாமல் செய்தாலும் அறிந்து செய்தாலும் அறியாமல் செய்தாலும் குருவையே அது சாருவதால், சிஷ்யர்கள் குருவுக்கு நன்மையே செய்து உண்மையாகவே நடந்து கொள்ள வேண்டும். குரு வார்த்தையை மீறி ஒரு வார்த்தை கூட பேசக் கூடாது. பணிவு மிக்கவனாக பக்குவம் மிக்கவனாக சிஷ்யன் குருவிடம் நடந்து கொள்ள வேண்டும். பூஜை, ஜபம், ஹோமம் இவற்றால் சந்தோஷமாக இருக்கும் சிவபிரானிடம் சிஷ்ய ப்ரவேசத்திற்கு முன் ஆசார்யராகப் பொறுப்பேற்றுள்ள தீக்ஷா ' குருவானவர் 'பாரனைத்தும் பரிபாலித்து அருளாட்சி புரியும் சிவப்பரம்பொருளே தங்கள் அருளாணையால் குருத்வம் பெற்ற அடியேன் ஒரு சீடனுக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சமயதீக்ஷை செய்து வைக்க முனைந்துள்ளேன். சிஷ்யனைப் பரிபூரணமாக அநுக்ரஹிக்க வேண்டும். நல்ல வம்ச குடும்பத்தில் தங்கள் அநுக்ரஹத்தால் தோன்றிய இவன் என்னை நாடி குருவருளை வேண்டியதால், திருவருளைப் பெற்றுத் தர இசைந்து தங்கள் திருவடியை சிந்தித்து வந்தித்து வேண்டுகிறேன். பரிபூரண அருளை வழங்கி அநுக்கிரஹிக்கப் ப்ராத்திக்கிறேன்' என்று மனமுருகி திருவடித் திருவருளை வேண்டி, மேற்கு வாயிலைத் தாண்டி சிஷ்யனை யாகசாலைக்கு வெளியில் அருகே வரும்படி செய்து, கிழக்கு நுனியாக சமித்து, தர்பை, புஷ்பம், அக்ஷதைகளால் நிறுவப்பட்ட ஓங்கார மண்டலத்தின் நடுவே சிஷ்யனை கிழக்கு முகமாக நிறுத்தித் தலை முதல் கால்வரை குருவானவர் தனது ஒப்பிலாக் கண்களால் ஒப்பு நோக்கிப் பார்த்து, முதலில் சாக்ஷுஷி தீக்ஷை, நிரீக்ஷண தீக்ஷை, என்ற முதல் படியை முதலாவதாக பிராஸாதமெனும் பஞ்சாக்ஷர மஹாமந்த்ரத்தை மனதிலே உச்சரித்துக் கொண்டே பார்த்து அஸ்த்ர மந்த்ரத்தால், (விசேஷ) அர்க்யத்தால் மந்த்ர ஸ்நாநம் செய்து, பஸ்ம ஸ்நாநமும் செய்து, தர்பையினால் தீண்டியடித்து, தொப்புளுக்கு மேல் மந்த்ர ஜலத்தால் கீழ்நோக்கித் தெளித்து, நாபிக்குக் கீழ் ஜலம் தோய்ந்த தர்பையினால் மும்மூன்று முறை தடவி, இயற்கையான முழு பிரஹ்மசர்யத்தோடு விளங்கும் சிஷ்யனை இதயத்தில் தொட்டு, எல்லா நற்குணங்களும் இயல்பாக பெருகுவதன் பொருட்டு செய்வார். பிறகு சிஷ்யனுடைய ஆன்மாவை சிவமூர்த்தியாக பாவித்து, அவனுடைய சரீரத்தில் சம்ஹிதா மந்த்ரங்களால் நியாஸம் செய்து தொட்டு, தலையில் சிவமூலத்தால் பூஜித்து, வெண்பட்டை அஸ்த்ரத்தால் புரோக்ஷித்து, கவச மந்த்ரத்தால் அவகுண்டனம் செய்து, நேத்ர மந்த்ரத்தால் கண்களைத் தெரியாதபடி கட்டி, கையில் புஷ்பச்சரம் புஷ்பம் வில்வம் கொடுத்து, மண்டபத்தை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வலமாக அழைத்து வந்து, ஸ்வாமிக்குத் தென்பாகத்தில் நிறுத்தி, மலர்களை மண்டலத்தில் அர்ப்பணிக்கச் செய்வார்.

அப்போது பஞ்ச முகங்களில், பஞ்ச ப்ரஹ்மத்துள், ஒன்று சமயதீஷா நாமமாக அமையும். அது முதல், தீக்ஷா நாமத்தையும் இணைத்துப் பெயருடன் அபிவாதனத்தில் சொல்ல வேண்டும். பிறகு சுவாமிக்கு வலது புறத்தில் மண்டலமிட்டு பிரணவாஸனத்தில் சிவனுக்கு எதிரே சிஷ்யன் ஹிருதயத்தில் அஸ்த்ரத்தால் புஷ்பமிட்டு, ஸம்ஹார முத்திரையால் அவனுடைய ஜீவனை கிரகித்து, 'ஓம் ஹாம் ஹம் ஹாம் ஆத்மனே நம:' என அவனது ஹ்ருதயத்தில் இறைத்தன்மையை நிறுத்திக் காத்து, சிஷ்யனுக்கு விபூதி தாரணம் செய்வித்து, சகளீகரணம், ஸம்ஹிதா மந்திரங்களால் கர நியாஸம், அங்க நியாஸம் இரண்டும் செய்து கொண்டு, சிவஹஸ்த பாவனை செய்து கொள்வார்.

பிறகு சிஷ்யன் குருவை மனம் மொழி மெய்களால் தண்டம் போல் வீழ்ந்து வணங்கி, குருவின் நல்லாசிமிகு ஆசீர்வாதத்தைப் பெற வேண்டும். பிறகு குருவானவர் அஷ்ட புஷ்பார்ச்சனை செய்து, பூர்ணாஹுதி செய்து அக்நியிலுள்ள சிவனை மண்டலத்துக்கு ஸம்யோஜனம் செய்து, (சமயதீக்ஷை மட்டும் செய்யும்போது பராங்முகார்க்கியம் கொடுத்து), முறையாக பலியிட்டு, சிஷ்யனுக்குப் பின்வருமாறு ஹிதோபதேசம் செய்வார்.

1. சிவப்பரம்பொருளைச் சிந்தித்து வந்திக்க வேண்டுமே தவிர ஒருபோதும் நிந்திக்கலாகாது.

2. அவரால் கூறப்பட்ட வேதசிவாகம சாஸ்த்ரங்களை முறையாக குருமூலம் கற்றுத் தெளிந்து அதன்படி நடக்க வேண்டுமே தவிர பழிக்கக் கூடாது.

3. குருவையும் குருவுக்கு சமானமான யாவரையும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பணிந்து போற்ற வேண்டுமே தவிர பணிய வணங்க மறக்கக் கூடாது.

4. சிவலிங்க நிழலை ஒரு போதும் மிதிக்கக் கூடாது. தாண்டவும் கூடாது.

5. சிவ நிர்மால்யத்தை மிதிப்பதோ தாண்டுதலோ கூடாது.

6. சிவதீக்ஷை பெற்றவர்களிடம் நிர்மால்யத்தை அளிக்கக் கூடாது.

7. சிவன், அக்னி, குரு ஆகிய மூன்றையும் ஆயுள் பர்யந்தம் பூஜித்துப் பயனடைய வேண்டும்.

இப்படி குறைந்த பக்ஷம் ஓராண்டு முயற்சியோடு முயன்று சிறந்த பயிற்சி பெற்று உயர்சி பெற்ற பிறகே விசேஷ தீக்ஷைக்கு தகுதி மிக்கவர்களாகக் கருதப்படுவார்கள்.

விசேஷ தீக்ஷை

ஏழு விதமாக தீக்ஷை விளக்கப்படுகிறது. ஏழு விதமும் படிப்படியாகச் செய்யத்தக்கதாக இருந்தபோதிலும் ஏழையும் இணை,த்துச் செய்யும் "ஹௌத்ரி" எனும் குண்ட மண்டலங்களோடு செய்யப்படும் தீக்ஷையே பெரும்பாலும் நம்மால் எங்கும் காண முடிகிறது. குருவானவர் நிமித்த வசமாக, நிர்ப்பந்த வசமாக, செய்து வைக்க வேண்டிய நிலையில் சிவதீக்ஷையை நடத்த வேண்டியிருப்பதால் அதன் சிறப்புத்தன்மையைப் புரிந்து தெரிந்து அறிந்து செய்து கொள்ள இயலாத நிலையை சீடர்களும் தள்ளப்பட வேண்டிய சூழ்நிலை தானாக உருவாகி விடுகிறது.

(1) சாக்ஷுஷி தீக்ஷை :- குரு தனது ஞானக் கண்ணால் சீடனை, அவனுக்கு சிவஞானம் வரும்படி

In Public domain, Digitization Muthulakshmi Research Academy
விரும்பிப் பார்த்து, சிவஞானத்தை அதன்மூலமே வருவிப்பது சாக்ஷுஷி தீக்ஷை எனப்படும். இதற்கு உதாரணமாக மீன் முட்டையிட்டுத் திரும்பிப் பார்த்தவுடன் அவையனைத்தும் குஞ்சாக வெளிவந்து விடுவதை கூறுவார்கள். இவ்வாறே மதுரையம்பதி மீனாக்ஷியைத் தரிசித்தால் அவளது கடைக்கண் பார்வை நம்மைக் கடைத்தேற வைக்கும் என்பர்.

(2) ஸ்பார்சிகீ தீக்ஷை :- முழு சிவஞானம் கைவரப் பெற்ற ஞானகுரு, தனது சிறப்புமிகு பகவத்தர: என்ற சிவனைக் காட்டிலும் மேலான (தனது) கைகளால் சிஷ்யனைத் தீண்டித் தொட்டு அனுக்ரஹம் செய்யும் தீக்ஷை ஸ்பார்சிகீ எனப்படுகிறது. இதை முட்டையிலிருந்து குஞ்சு வெளி வர, கோழி, வாத்து முதலியன அடைகாக்கும் கிரியைப் போல எனக் கூறுவர்.

(3) வாசிகீ தீக்ஷை :- இது பஞ்சாக்ஷர மஹாமந்த்ரங்களை பல ஆயிரம் முறை ஜபித்த தன் திருவாக்கால், பிராஸாத மந்த்ரத்தை குருவானவர் உபதேசித்தவுடன், சிஷ்யன் மெய்மறந்து மெய் ஞானத்தை, சிவஞானத்தை, மேலான பர ஞானத்தை, பெறுகிறார். இதற்கு இணை இதுவே. வேறு உதாரணம் கிடையாது.

(4) பாவநா தீக்ஷை :- எங்கோ இருக்கும் ஞானகுரு. எங்கோ இருக்கும் பக்குவப்பட்ட சிஷ்யன். இருவரும் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் குரு-சிஷ்ய பாவ மனப் பான்மையுடன் பக்தி அனுக்ரஹம் என்ற அன்பு பாவனையால் பாவிக்கப் பெருகுவது சிவஞான பாவனா தீக்ஷையாகும். இதை, ஆமை தான் முட்டையிட்டதை தொலைவிலிருந்து நினைத்து பாவிப்பதன் மூலம் அந்த முட்டையிலிருந்து சின்ன ஆமை வெளிவருவதை ஒப்பக் கூறுவர்.

(5) சாஸ்த்ர தீக்ஷை :- பக்குவப்பட்ட சீடனுக்கு,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவன் அறிவுக் கூர்மையை உணர்ந்த ஞானமிகு குருவானவர், சிவஞானத் தெள்ளமுதாம் சைவாகம சிவரகசிய சாஸ்த்ர க்ரந்தங்களை, மேலோட்டமாக இல்லாமல் சிஷ்யன் உணரும்படி அறிவித்து, தெளிவித்து, சிவஞானம் மிளிரும்படி போதித்து, சோதித்து, பரஞானத்தை உண்டாக்குவதே சாஸ்த்ர தீக்ஷையாகும். இதற்கு நிகர் இதுவேயாதலால் வேறு உதாரணம் கூற முடியாதது.

(6) யோக தீக்ஷை :- யோகம் என்ற சொல்லுக்கு சேர்க்கை என்று பெயர். யோககுருவாக அமைந்தவர் சீடனை சிவயோகத்தில் இணைப்பிப்பது யோக தீக்ஷை. "நான் வேறெனாதிருக்க நீ வேறெனாதிருக்க" என அருணகிரியார் திருப்புகழில் உருகிப் பாடுவது போல உணர்ந்து, தோய்ந்து, சிவப்பரம்பொருளோடு ஒன்றாக இயைவிப்பதுவே யோகதீக்ஷை எனப்படும். இதற்கு உதாரணம் அன்பாலும் பண்பாலும் பாசத்தாலும் நேசத்தாலும் உறவாலும் நட்பாலும் ஒருங்கிணைந்தவர்கள் ஒருவருக்கொருவர் தொலைபேசியில் பேசிக் கொள்ளும் போது உணர்ச்சிப் பெருக்காலும், உவகையாலும் உள்ளம் உவப்பது போல, சிவஞானத்தில் குருவருளோடு திளைத்தலே யோகதீக்ஷையாகும்.

(7) ஹௌத்ரீ தீக்ஷை :- மேற்சொன்ன ஆறு வித தீக்ஷைகளையும் உள்ளடக்கிய தீக்ஷையே ஹௌத்ரீ தீக்ஷையாகும். முகூர்த்த நிர்ணயம் செய்து, அழைப்பிதழ் அச்சடித்து அனுப்பி, ஞானமிகு நற்குருவால் குண்டமண்டல வேதிகை அமைத்து, பூர்வாங்க பூர்வமாய் இரண்டு காலத்துக்குக் குறையாமல் முறையாக சமயம், விசேஷம், நிர்வாணம், ஆசார்யாபிஷேகம் செய்துகொண்டு, கங்கணம் அவிழ்க்காமல் ஒரு மண்டலம் பஞ்சாக்ஷர மந்த்ரம், அஸ்த்ர மந்த்ரம் ஆகியற்றை ஜபித்து, தசாம்ச ஹோம தர்ப்பண மார்ஜன சிவப்ராஹ்மண போஜனம் செய்து, முழுப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
பயனையும் முழுமையாகப் பெறுவதே ஹௌத்ரி தீக்ஷையாகும்.

இவ்வாறு மேற்கூறிய முறையில் சிவதீக்ஷையைப் பெறுவது பௌதிகீ, நைஷ்டிகீ என இருவகைப்படும். சிவாசார்யர்களுக்கு ஸந்யாச ஆஸ்ரமம் சிறப்பாகச் சொல்லப்படாததால் பௌதிகீ என்ற போகத்தையும் மோக்ஷத்தையும் (இக பர சுகங்களை) தரவல்ல தீக்ஷை செய்விக்கப்படுகிறது. நைஷ்டிகீ மோக்ஷம் மாத்ரம் தரவல்லது. இம் முறைப்படி குரு உபதேசம் பெற்று சிவபூஜை செய்வதால் ஏற்படும் பலனைப் பற்றிப் பார்த்தோமானால்,

"யத்வாரே மத்த மாதங்கா: வாயுவேகாஸ்த்துரங்கமா:
பூர்ணேந்து வதநா நார்ய: சிவபூஜா விதே: பலம்
பூஜயா விபுலம் ராஜ்யம் அக்நி கார்யேண ஸம்பதம்
ஜபேந பாப ஸம்ஹாரம் த்யாநம் ஜ்ஞாநேந சாம்நுதே
கிந்து ய: பூஜயதி பக்தித: ஜீவந்முக்தஸ்ஸ உச்யதே ॥"

சிவபூஜையின் நற்பயனால் விலையுயர்ந்த யானைகளும், வேகமாக ஓடக்கூடிய குதிரைகளும், பணிவிடை புரிய மதிவதன மங்கையர்களும், பூஜையினால் நல்ல சாம்ராஜ்யமும், யாகத்தால் செல்வ யோகமும், ஜபத்தால் பாப தீவினை நீக்கமும், தியானத்தால் சிவஞான முழுக்கும் ஏற்படுமென கூறப்படுகிறது.

"சிவாக்னி குரு பூஜா ச கர்த்தவ்யா ஜீவிதாவதி" சிவபூஜை, குருபூஜை இரண்டும் ஆயுள் உள்ளளவும் அன்போடும் சிரத்தையோடும் ஆசையோடும் செய்யற்பாலது. மேலும்,

ரூபம் சம்பத் தீர்க்கமாயு: ஸுக்ருதம் வித்யா விவேகம் தனம்
ஞானம் சௌர்ய உதார மங்களகரம் அன்னம் வஸ்த்ர
உதார ப்ரௌடாங்கனாசங்கமம் ।
அன்னம் வஸ்த்ர சுகந்த பூஷணகரம் புத்ராஹி ஸௌக்யப்ரதம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திவ்யாந்தோளன வாஹநாதி சுகதம் போகம் சிவார்ச்சாபலம் ॥

இதன் பொருள்: மாறாத ப்ரஹ்மதேஜஸ், நீண்ட ஆயுள், நல்ல மெய்ஞானக் கல்வி, சுத்தஞான மெய்யறிவு, வேண்டியபோது வேண்டிய தனமெனும் பணவசதி, சத்துமிகு ஆசாரமிகு சாத்விக நல்லுணர்வு, இனிய நற்புகழ், மனம் நிறைந்த மகிழ்ச்சி தரும் நல்ல வாழ்க்கைத் துணைவி, நல்ல வாகன வசதி, சகல வசதி மிகு உறையுள் எனப்படும் வீடு, இங்கும் அங்கும் - இவைகளை சிவபூஜை முறையாகச் செய்பவர்களுக்கு சிவ பெருமான் வழங்குகிறார். இத்தகைய இக பர நலமளிக்கும் சிவ பூஜையைச் செய்து, முழுப் பலனையும் அடைய, சிவதீக்ஷை முதற்படியாக அமைகிறது.

அனாதி சைவரான சிவபெருமான் தனது பூஜையான ஆத்மார்த்தம் பரார்த்தம் என்ற இருவித பூஜையையும் செய்யவும் செய்விக்கவும் ஆதிசைவர்களைத் தோற்றுவித்தார். பூர்வகாரணாகமத்தில் ஆசார்ய லக்ஷண படலத்தில்,

"ஆதள சதாசிவேனைவ தீக்ஷிதஸஸ்த்வாதிசைவக:
கௌசிக: காஶ்யபஶ்சைவ பாரத்வாஜாத கௌதம:
அகஸ்த்யஸ்ச்சைவ பஞ்சைதே பஞ்சவக்த்ரேஷு தீக்ஷிதா:"

என்று சொன்னபடி, சிவபெருமானுடைய ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், ஸத்யோஜாத முகங்களிலிருந்து முறையே கௌசிக மஹரிஷி, காச்யப மஹரிஷி, பாரத்வாஜ மஹரிஷி, கௌதம மஹரிஷி, அகஸ்த்ய மஹரிஷி ஆகியோர் தோற்றுவிக்கப்பட்டு அப் பரமேச்வரனாலேயே தீக்ஷையும் செய்விக்கப்பட்டனர். இந்த தீக்ஷையின் சுருக்கமான பெருமையை சுப்ரபேதாகமம், தீக்ஷா விதிபடலத்தில்,

"தீயதே தச்சிவத்வம் ஹி க்ஷீயதே பாப பஞ்சரம்
க்ஷயதான விசேஷத்வாத் தீக்ஷா சேத்யபிதீயதே"

என்று கூறுகிறது. உலகுக்கு ஒருவனான அச் சிவப்பரம்பொருளை உணரச் செய்து, உணர்ந்தும் அடைய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விடாமல் தடுக்கும் நீங்காப் பாசங்களான ஆணவம், கன்மம் மாயையாகிய மூன்று மலங்களும், அது சார்ந்த தீவினைகளும் நீங்கச் செய்து, நிர்மலனாய் நிமலனை அடையச் செய்வதால் இச் சடங்கு தீக்ஷை எனப் பெயர் பெறுகிறது. இத் தீக்ஷைச் சடங்கு எல்லோருக்கும் பொதுவானாலும், சிஷ்யனின் தகுதிக்கேற்ப உபதேசமுறைகள் மாறுபடுகின்றன. நிலத்தின் தன்மைக்கேற்ப, நீரின் வளமைக்கேற்ப, விதையின் தகுதிக்கேற்ப விளைவுகள் நிகழ்வதைப் போல், குருவின் முடிவுப்படி சிஷ்யனின் தகுதிக்கேற்ப விதையொத்த பஞ்சாக்ஷர மகா மந்த்ரமானது உபதேசிக்கப்படும் என்பதை சைவபூஷணம் இவ்வாறு கூறுகிறது. (சுலோகம் 35)

ஏகஞ்ச பீஜம் ஸ்தல பேத பின்னம்
தோயஞ்ச தத்வத் பததச்ச பூமௌ
தீக்ஷா ச மந்த்ரஞ்ச ததோப தேசா:
பாத்ரானு ரூபம் பல தாரதம்யம்.

'ஸாமான்ய ஸமயீ' என அழைக்கப்படும் சமயதீக்ஷை ஸம்ஸ்காரம் ஆன சிஷ்யன், விசேஷ தீக்ஷையில், சிறப்பாக, குருவருளால் சிவாக்னிக்கு மாதாவான வாகீச்வரீ கர்ப்பத்தில் சிவ யோகமார்க்கமாக அனுப்பப்பட்டு, அவயோகங்கள் அனைத்தும் நீக்கப்பட்டு, சிவாம்சமாக, இருபிறப்பாளனாக இருந்தவன் மூன்றாவது பிறப்பையும் முழுமையாகப் பெற்று, பூஜை புரியவும், வேள்வி வேட்டவும், சிவாகமங்களை மனந்தோய்ந்து படிக்கவும் ஆய்ந்தறியவும், குருவிடம் பணிவிடை புரிந்து தெளிந்தறியவும், பெரியோர்களிடம் ஐயப்பாடுகளை நீக்கிக் கொள்ளவும் தகுதி பெறுவதால், ஞானக்குருத்து நாளும் வளரவும் வாய்ப்புக்கள் மலர்கிறது.

அடுத்து நிர்வாணதீக்ஷை பற்றி அறிய முற்படுவோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிர்வாண தீக்ஷை

ஸமய விசேஷ தீக்ஷை பெற்ற ஸாதகன், தனக்கு உண்மைமிகு நன்மைமிகு நலமிகு நிர்வாண தீக்ஷை வேண்டித் தனது பணிவான விண்ணப்பத்தைத் தனது குருவை நாடிப் பணிந்து போற்றித் துதித்து வேண்ட, கருணைமிகு குரு கருணைக் கடலான நீலகண்டனைத் தனது சீடனுக்காக அவனது சீர்மிகு சிவஞான வேட்கையைத் தெரிவித்து, உலகப் பற்றை ஒரு பொருட்டாக உணராது உண்மைப் பொருளை உள்ளபடி உணரத் துடிக்கும் நிலையை பிரார்த்தித்து, பராத்பர குருவான சிவப்பரம்பொருளைச் சிந்தித்து வந்தித்து, குருவானவர் திருவருளின் பெருந்துணை அருளாணையோடு, சீடனை சிவாக்னிக்குத் தென்புறத்தில் அமைக்கப்பட்டுள்ள மண்டலத்தில் பிரணவாஸனத்தில் நிறுத்துவார். அஷ்டத்ரிம்சத் நியாஸத்தால் சீடனைச் சிவமயமாக்கி, ஆறு அத்வாக்களையும் தரிசனப்படுத்த, நான்கு ஸம்ஸ்காரமும் செய்த இழை நூலால், புருஷர்களுக்கு வலப்பக்கமும் ஸ்த்ரீகளுக்கு இடப்பக்கமும் பாச \ சூத்ரமாக பாவித்துத் தொங்கவிட்டு, நிவ்ருத்தி கலை முதல் அதில் அடங்கியுள்ள தத்வம், புவனம், வர்ணம், பதம், மந்த்ரங்களை ஐந்து கலைகளையும் சோதித்து சேதித்து அத்வசுத்தி செய்து, பாசச் சேதம் செய்து, சிவநேச ஐக்யம் கூட்டி வைப்பார். சிவனிடம் பிரார்த்தித்து, யாகாலயத்தில் நித்திரை செய்ய கனவில்லா நித்திரையே வரும்படி அருள் செய்வார். நல்ல கனவு வந்தால் நலமாகவும், கெட்ட கனவு தோன்றின் கழுவாயாக அஸ்த்ர மந்திர ஹோமங்களும் செய்து வைப்பார்.

நிர்வாண தீக்ஷையானது, (1) லோகதர்மிணி (2) சிவதர்மிணி என இருவகைப்படும். சிகையை நீக்கும் சடங்குடன் கூடியது சிவதர்மிணி என்றும் சிகையை நீக்காமல்

In Public domain. Digitization-Muthulakshmi Research Academy
செய்யும் சடங்கு லோகதர்மிணி எனவும் கூறப்படுகிறது. சிற்றின்ப வாழ்க்கையில் ஈடுபாடு உள்ளவர்களுக்கு லோகதர்மிணி தீக்ஷையும். பேரின்பத்தில் மட்டும் ஈடுபடும் சிஷ்யர்களுக்கு சிவதர்மிணி தீக்ஷையும் செய்வார்கள்.

அதிலும் லோகதர்மிணி தீக்ஷ ஸபீஜை- நிர்பீஜை என இரு வகைப்படும். ப்ராஸாத பஞ்சாக்ஷர மந்திரத்தோடு ஆரம்பத்தில் பீஜாக்ஷரங்கள் என்ற மூலமந்திர வித்தெழுத்துக்கள் இணைத்து உபதேசிப்பது ஸபீஜை. ஸாமான்யமாக பஞ்சாக்ஷரத்தை பக்குவமறிந்து வைதிக-அதிகாரம் சைவக-அதிகாரம் உள்ளவர்களாக குறிப்பிட்டறிந்து உபதேசிப்பது நிர்பீஜை.

தீவினைகள் எனப்படும் பாபங்களை மட்டும் சோதித்து சேதித்து, புண்யகர்மங்களை அதாவது நல்வினை நற்பயன்களை மட்டும் அனுபவிக்க அனுமதித்து வழங்கும் தீக்ஷ அஸத்யோ நிர்வாண தீக்ஷ எனப்படும். அதிலும் ஸாதிகார தீக்ஷ, நிரதிகார தீக்ஷ என இருவகையாகக் கூறப்படுகிறது. அதாவது நிர்வாண தீக்ஷ பெறும் சீடருக்குக் குருவானவர் தான் சீடர்களுக்கு தீக்ஷ வழங்குவது போல் தனது சீடனும் தகுதிபெறுகின்ற நிலையில் அனுமதித்து அதிகாரத்தை வழங்குவது ஸாதிகார தீக்ஷ என்றும், சீடன் மட்டும் தீக்ஷ பெற்று மற்றவர்களுக்கு தீக்ஷ செய்து வைக்க அனுமதி வழங்காமல் இருப்பது நிரதிகார தீக்ஷ எனவும் வழக்கத்தில் பழக்கத்தில் இருந்து வருகிறது.

மேலும் தீக்ஷ ஞானவதீ, கிரியாவதி என இருவகைப்படும். வேள்விச் சாலை நிறுவி ஏழு வித தீக்ஷயும் முறைப்படி செய்து உபதேசம் செய்து அபிஷேகிப்பது கிரியாவதீ தீக்ஷ. அனைத்து சைவ சாஸ்திர சித்தாந்தங்களை ஐயமறக் கற்றுத் தெளிந்த உயர்ந்த சீடனுக்கு யோகமார்க்கத்தில் மானசீகமாக இவைகளைக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கற்பித்து ஞானகுருவானவர் மோன நிலையில் இருந்து சிவஞானம் மிளிர உற்று நோக்கி, உய்வித்து ஆட்கொண்டு அருளுவது ஞானவதீ தீக்ஷை.

நிர்வாண தீக்ஷையில், அம்மையப்பனின் அம்சமான வாகீஸ்வரீ-வாகீஸ்வரர்களின் திருவருளால் சீடனுக்குக் குருவானவர் முற்பிறவிகளில் உண்டான பிராரப்தம், ஸஞ்சிதம், ஆகாமியம் ஆகிய தாபத்ரயத்தை நீக்கி, சுத்தான்மாக ஆக்கி, பாசங்களை நீக்கி பதியறிவை உணர்த்தி, இப் பிறவியிலேயே ஐயமற ஐயன் திருவடியை அடையும்படி செய்வதால், இதற்கு நிர்வாண தீக்ஷை என்று பெயர். இதற்குப் பின் சிவபூஜைகளையும் சிவயாகங்களையும் செய்து கொள்ள ஆத்மார்த்த அதிகாரமும், செய்விக்க பரார்த்த அதிகாரமும் பெற்ற பிறகே ஆசார்யாபிஷேகம் செய்விக்கப்படுகிறது.

ஆசார்யாபிஷேகம்

உபநயன சமயத்தில் ஜாதகாதி ஸம்ஸ்காரங்களை உரிய காலங்களில் உயரிய முறைப்படி செய்யாதவர்களுக்கு அவைகள் அனைத்தும் முறைப்படி செய்து பிறகே உபநயன ஸம்ஸ்காரம் செய்யப்படுவது போல, நேராக திருமணம் ஆனபிறகே ஆசார்ய அபிஷேகத்தை நிர்பந்தவசமாக குறுகிய காலத்தில் அதனை நிறைவேற்றிக் கொள்ள நிர்பந்த சிவதீக்ஷை செய்து கொள்பவர்களும் இரண்டு காலத்தில் பூர்வாங்கம் உள்பட செய்து கொள்ளும்போது, சமயம் விசேஷம் நிர்வாணம் மூன்றும் செய்து கொண்டு, உரிய நாளில் மறுநாள் ஆசார்யாபிஷேகம் செய்து கொள்வதும் அப்படியே ஆகிறது. எனவே ஸமயாதி தீக்ஷைகளின் அருமை பெருமைகளை பொறுமையாகப் புரிந்து கொள்ள இயலாமற்போவதோடு "கர்மபிரக்ஞை" "கார்யசிரத்தை" இல்லாமல் நடத்திக் கொண்டால் அது பூரணத்வம் அடையாமல் போகிறது. படிப்படியாக முறையாக நடத்தி,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவானுபவம் சிவானுபூதி பெற முயற்சிப்பதே நலம் பல பயப்பதோடு, நயம் பலவும் நல்கி சிவஞானானுபூதி கைவரப்படுத்தலை தாமாக உணர்ந்த உணரும் அநுபவ ஞான மோன நிலை ஊற்றெடுத்து ஞானப் பசியும் ஞான தாகமும் ஏற்பட்டு ஞானானந்த நன்னிலையும் கைகூடும்.

முற்றுமுணர்ந்த முழுமுதல்வனை, எங்கெங்கும் நீக்கமற நிறைந்த நிர்மலனை, அளவிலா பேராற்றலுடைய சிவபெருமானை, விருப்பு வெறுப்பிலா விடையேறும் விமலனை, தனக்கு யாரும் எதையும் போதிக்காமல் தானே யாவர்க்கும் எல்லாக் கல்விகளையும் போதிக்கவல்ல குருமூர்த்தியை, பேரானந்தப் பிழம்பை, எங்கும் எப்போதும் எதிலும் ஸர்வ-ஸ்வதந்த்ரராக விளங்கும் விகிர்தனை, பேரருளாளனான ஆதி அந்தம் நடு இலா நாயகனை, நமக்குக் கிட்டியுள்ள நற்பிறவியில் குருவருளால் திருவருளைச் சிந்தித்து, வழிபட்டுய்ய வழிவகுக்கும் வளமிகுச் சடங்கே சிவதீக்ஷை எனும் ஆசார்யாபிஷேம் ஆகும். சிவதீக்ஷையும் ஆத்மார்த்த சிவபூஜையும் எல்லோர்க்கும் பொதுவெனக் கூறப்பட்டிருப்பதால் ஆதி சைவர்களுள் உத்யோகத்தில் பணிபுரியும் ஆதிசைவர்களும் அவசியம் காலந்தாழ்த்தாமல் லௌகிக நிலையில் இருந்து கொண்டு வைதிக சைவிக நெறியில் நெறியோடு இருக்க இயலுமா என்ற ஐயப்பாட்டை நீக்கி, புனிதமிகு இப்பிறவியை பல பிறவிகளில் செய்த புண்யத்தின் பெரும்பயனாக இந்த ஆதிசைவப் பிறவியிலேயே மீண்டும் பிறவா நெறி தரும் பித்தரைப்பற்றியே பித்தராகி, பெரும் பக்தராகிப் பிறவிப் பயனை விரைவில் அடைய முற்படுவதே பாராட்டப்படவேண்டியதாகும்.

பாரில் வாழ்க்கையில் களிப்படைய, உயிர்கள் உயர, அவர்கள் விதைக்கும் அனைத்துப் பயிர்களும் முளைக்கவும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேண்டும், செழிக்கவும் வேண்டும். மீண்டும் மீண்டும் பயிர்கள் விளைய, விதைகள் மிக மிக அவசியம். இது கருதியே, விதைகளை முறையாகத் தேர்ந்தெடுத்து உரிய இடங்களில் உயரிய முறையில் பாதுகாத்துத் தக்க சமயத்தில் விதைகளை வழங்குகின்றனர். மனிதன் உண்ணும் பகுதி நெல்மணிகளை புழுங்கல் அரிசியாக மாற்ற நெல்மணிகளை ஊரவைத்து வேகவைத்து காயவைத்து அரிசி ஆலைகளில் அரிசியாக்கிப் பயன்படுத்துகின்றனர். புழுக்கிய புழுங்க நெல்மணிகள் மீண்டும் முளைத்து நெல்மணிகளை உருவாக்காது. அதுபோல சிவதீக்ஷை என்ற கிரியாவதி ஞானவதி தீக்ஷைகளைப் பெற்று சைவ சந்த்யாவந்தன ஜபதபங்களையும் வைதிக சந்த்யாவனத்திற்குப் பிறகு முறையாக நான்கு வேளை ஆற்றி, சிவபூஜைக்கு அதிக முக்யத்வம் கொடுத்து அதையே முதலில் மறவாமல் தவறாமல் அன்போடு ஆசாரத்தோடு ஆற்றி அகமகிழும் அனைவரும் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டு பிறவாநெறியைப் பெறுவர் என்பது இறுதியாகவும் உறுதியாகவும் சிவாகமங்கள் கூறுகின்றன. புழுங்கலரிசி பசிக்கு புசிப்பதற்கு மட்டுமே பயன்பட்டு, முளைத்துப் பயன் தராதது போல சிவதீக்ஷாவான்கள் தான் முன்வினைப் பயன்கள் நீங்கப் பெற்றவர்களாய் பிராரப்தத்தை மட்டும் எவ்வாற்றானும் அனுபவித்து சிவப்பரம்பொருளின் பெருங்கருணையினால் ஆட்கொள்ளப்பட்டும் மீண்டும் யாதொரு பிறவியும் வாராமல் அருளப்படுகின்றனர் என்பது உறுதி. மனிதப்பிறவி புனிதப்பிறவியாகி, புனிதப்பிறவி தெய்வப்பிறவியாகி, ஞானகுருவால் குருவருள் மிளிரத் திருவருள் பெற்று, சிவசாயுஜ்யம் நிச்சயமாக அடைகின்றனர். எனவே சிவபூஜையும் சிவதீக்ஷையும் இக பர சுக, க்ஷேம, சௌக்ய, குசலங்களை, நிச்சயம் வழங்குமென அறியலாம்; நம்பலாம். நம்பினார் கெடுவதில்லை; இது நான்கு மறைத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தீர்ப்பும், பன்னிரு திருமுறைப் பாறைசாற்றலும், அனைத்து நன்னூல் சைவசித்தாந்தப் பொதுமறைநூல் தெளிவும் ஆகும்.

ஆசார்ய அபிஷேகத்திற்குத் தகுதி மிக்கவர்களாகக் கூறும் போது, ஆணவாதி மும்மலங்களும் முற்றிலும் நீங்கியவரும், சரியை கிரியை யோகம் ஞானம் என்ற சிவாகமங்களின் நான்கு பாத தத்வார்த்தங்களையும் உணர்ந்து ஆய்ந்து அச்சிவானுபூதியிலே திளைக்க விரும்பும் சுத்தான்மாக்களே, பெத்தான்மாக்களே, அதற்கு உரியர். சமயதீக்ஷை சரியை நெறியையும், விசேஷதீக்ஷை கிரியா நெறியையும் நிர்வாணதீக்ஷை யோக நெறியையும், ஆசார்ய அபிஷேகம் ஞான நெறியையும் உணர்த்த உணரப்படுவதால், "யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்; எல்லா உயிர்களும் இன்புற்று இருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே" என தாயுமான சுவாமிகள் கருத்துக்கு இணங்க, பக்குவப் படாதவர்களையும் பதமாக இதமாக இங்கிதமாக பக்குவப் படுத்தியும், தானே பக்குவப்பட்டு சிவஞான வேட்கையோடு வருபவர்களையும் ஆச்ரயித்து அபயமளித்து குருஸ்தானத்தில் குறையின்றி நின்று சிவதீக்ஷை வைபவங்களை இயன்றவரை நடாத்தி, சிவநெறி சிவபுண்யங்களையும் நாளும் வளரும்படிச் செய்ய வேண்டியது சிவபிராம்மணனான ஆதிசைவனுக்குரிய அறுவகைக் கடமைகளாகும். அதாவது சிவாகம சைவ சித்தாந்த நூல்களை பயில்வது, பயிற்றுவிப்பது, வேள்விகளை செய்வது, பிறரைச் செய்யும்படித் தூண்டுவது, அளிப்பது, ஏற்பது - ஆகிய ஷட்தர்மங்களை குறைவறச் செய்யவேண்டும். வழிவழியாகக் குருமார்களும் சீடர்களும் நல்வழி நடக்க, இப்புவி நலமனைத்தும் பெறும். சிவபுண்ணியம் வளர்ச்சியடைய, தீவினைகள் யாவும், தீச்செயல்கள் யாவும், தானே தளர்ச்சி நிலையை எய்தும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவதீக்ஷை பெற்ற நாள் முதல் ஒரு மண்டல காலம் பஞ்சாக்ஷரம் ஜபித்து, அதில் பத்தில் ஒரு பங்கு ஸம்ஹிதா மந்த்ரமெனும் பஞ்ச ப்ரஹ்ம ஷடங்கம் எனும் பதினோறு மந்த்ரங்களையும் ஜபித்தலோடு அஸ்த்ர மந்த்ரங்களையும் ஜபித்து, மண்டல முடிவில் அஸ்த்ர பூஜா, ஜப, ஹோம, புரஸ்ச்சரணையுடன் சிவ-த்விஜ சமாராதனையும், அஸ்த்ராபிஷேகத்தில் செய்ய, உள்ளங்கை நெல்லிக்கனி போல் இக பர நலமனைத்தும் எய்தக் கூடும். சிவபூஜாஸ்தவம் எனும் நூலில் முதல் ச்லோகத்திலேயே இதன் பயன் "தஸ்யைவ ஸித்தித்வயம்" என இம்மை மறுமை நலன்களை அடைவார்கள் என்று உறுதி அளிக்கிறது.

யோகஜாகமத்தில் "தசகார்யம்" என்ற கூறப்படுகிற (1) தத்துவ ரூபம் (2) தத்துவ தர்சனம் (3) தத்துவ சுத்தி (4) ஆத்ம ரூபம் (5) ஆத்ம தர்சனம் (6) ஆத்ம சுத்தி (7) சிவ ரூபம் (8) சிவ தர்சணம் (9) சிவ யோகம் (10) சிவ போகம் என்ற பத்தும், ப்ரஹ்மோத்ஸவத்தில் எல்லா பக்தர்களுக்கும் பொதுவாக இறைவனால் வாரி வழங்கப்படினும் "பாக்யவந்த: பிபந்தி" என்றபடி ஈடுபாடும் ஆர்வமும் பக்திப் பரவசமும் மேலிட்டுத் தவறாமல் பத்து நாட்களும் திருவிழாவில் கலந்து கொண்டு வந்து தரிசித்த பேர்களுள் சிறந்த பக்திமான்களுக்கே சாம்பவீ தீக்ஷை எனப்படும் தீர்த்தவாரியாகிய சிவபோகத்திலே திளைப்பவர்களுக்கு மட்டுமே சிவசாயுஜ்யம் கிட்ட வழியுள்ளது, அதுபோலவே பெறற்கரிய ஆதிசைவ அந்தண மரபிலே தோன்றியும் இத்தகைய சிவதீக்ஷையைப் பெற்று நான்கு வேளை சைவ சந்த்யாவந்தனத்தை விடாது வைதிகசந்தியை முன்செய்து, சிவபூஜை ஜபம் ஹோமம் இவற்றிலே பொருளுக்காக மட்டும் கலந்து கொண்டு பணியாற்றாமல் அருளும் பொருளும் அருளும் சிவபோக யோகத்தில் திளைக்காது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
அவயோகந்தரும் சிற்றின்பக் கல்பபிலேயே பெருங்காலத்தைக் கழித்து வரும் நாம் ஈடேறும் நாள் எந்நாளோ? இறைவா! எங்களுக்கு சிவஞான அமுதையூட்டி ஆட்கொள்ள வேண்டுமென பிரார்த்திக்க வேண்டும். இப்பிறவி போனால் எப்பிறவி வாய்க்குமோ? பொன்னான சந்தர்ப்பத்தை, மிக மிக மேலான பிறவியை வாளா வீழ்த்தி, விளக்கில் விட்டில் பூச்சி மாட்டி அழிவதைப் போல வாழ்நாள் அனைத்தும் வீழ்நாளாக்கி வாழ முற்படாது, தெளிவாய் அறிந்த பின்னும், நன்றாகப் புரிந்த பின்பும் ஒன்றுகூடி தெரிந்த கொண்ட பின்பும் உண்மையை உள்ளபடி தோய்ந்து ஆய்ந்த பின்பும், பரம்பொருளின் பெரும்பொருளை அடையாமல் பொய்ப் பொருள்களிலேயே மிக மிக நாட்டங்கொண்டு மெய்ப்பொருளை மெய் நடுவே வைத்துக் கொண்டே பொய் நாடி, பொய்ப் பொருள் நாடி, நிலையில்லா இளமை, செல்வம், மனைவி, மக்கள், நண்பர், சுற்றம், உறவுகளில் கருத்தூண்றி, களிப்பூன்றி, வீண்பொழுது கழித்து வருவது சரியல்ல என்பதை உணர்ந்தும், மீண்டும் நாம் நமது கடமையைத் தவறுவதும், கண்ணியத்தை இழப்பதும், கட்டுப்பாட்டை மீறுவதும் நமக்கும் நமது சந்ததியர்க்கும் நல்லதா? என்று ஆழ்ந்து சிந்திக்கும் நிலையிலேதான் நாம் இருக்கிறோமே தவிர முன்னேற முயலவில்லை. முழு முதல்வன் தாளடையும் முயற்சியே இல்லையென்றுதான் கூற வேண்டும்.

சர்யாபாதமெனும் சரியாபாதத்தை சரியாகப் புரிந்து நடக்க சமயதீக்ஷையும், கிரியாபாதமெனும் பூஜை ஹோம கிரியைகளை அறிந்து நடைமுறைப் படுத்த விசேஷ தீக்ஷையும், யோக பாதமெனும் சிவனோடு நெருங்கியத் தொடர்பு பற்றிக் கொள்ள சேர்க்கையெனப் பொருள்படும் யோக மார்க்கத்தைப் பெற, புத்தம் புதிய சிவசிருஷ்டியாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாற்ற, ஞானகுருவின் மோன அருளால் பரம்பொருள் சிவசக்தியை வாகீஸ்வரி-வாகீஸ்வரராக சிவாக்னி உற்பத்தி போல யோக தீக்ஷையாக விசேஷ தீக்ஷையும், தியானத்தால் ஞானமடைவிக்க ஞானபாத தத்துவமறிவித்து ஆசார்ய அபிஷேகமும், படிப்படியாக உணர்ந்து சிவப்பரம்பொருளை தியானித்து பூஜித்து ஜபித்து தவமிருந்து தனிப்பெரும் உவகையடையும் நிலையே முறையே சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கு பாதங்களை நன்கு அடையவும் சிவமார்க்கமாகும். இதையே அரும்பு, மலர் காய், கனி எனவும் கூறுவதுண்டு, இவ்வளவு சத்வ ஸம்பூர்ணமான தத்துவக் கருத்துக்கள் உண்மைகள் நன்மைகள் அடங்கிய சிவதீக்ஷை இருபது மணி நேரத்துக்குள் எதுவும் புரியாமல் நானும் சிவதீக்ஷை செய்து கொண்டு விட்டேன் என்று செய்து கொள்வதில் ஆடம்பரமும் ஆர்ப்பாட்டமும் ஆணவமும் தான் வெளிப்படுகின்றன.

மேலும் ஆசார்ய அபிஷேகத்தில் அத்வசுத்தி ஆறும் செய்யப்படும். அதாவது பாதம் முதல் முழுங்கால் வரையிலும், நிவ்ருத்தி கலா சுத்தியானது அதிலடங்கிய தத்வம் ஒன்று (1)-ம், புவனங்கள் 108-ம், வர்ணம் ஒன்று (1)-ம், பதங்கள் 18-ம், மந்த்ரங்கள் 2-ம், பிரதிஷ்டா கலையில் முழங்கால் முதல் தொப்புள் வரையிலும் 23 தத்துவங்களும், 56 புவனங்களும், 24 வர்ணங்கள் அஷரங்களும், 21 பதங்களும், 2 மந்திரங்களும், வித்யாகலையில் தொப்புள் முதல் இதயம் வரையிலும் 7 தத்துவங்களும், 27 புவனங்களும், 7 வர்ணங்களும், 20 பதங்களும், 2 மந்திரங்களும், சாந்திகலையில் இதயம் முதல் புருவ மத்தி வரையிலும் 3 தத்துவங்களும், 18 புவனங்களும், 3 வர்ணங்களும், 11 பதங்களும், 2 மந்திரங்களும், சாந்தியதீத

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
கலையில் புருவ மத்தி முதல் சிரசுக்கு மேல் வரையில் 2 தத்துவங்களும், 15 புவனங்களும் 16 பதினாறு வர்ணங்களும், 1 பதமும், 3 பதங்களும் - ஆக ஐந்து கலைகளும், ஐந்து கலைகளுள் அடங்கிய 36 தத்துவங்களும், 224 புவனங்களும், 51 வர்ணங்களும், 81 பதங்களும், 11 மந்திரங்களும் கலாத்வா, தத்துவாத்வா, புவனாத்வா, வர்ணாத்வா, பதாத்வா, மந்த்ராத்வா என ஆறு அத்வாக்களும் ஞானகுருவின் ஞானப்பார்வை போன்றவற்றால் சுத்திகரிக்கப்பட்டு சஞ்சித வினைகள் தகர்க்கப்பட, எடுத்த பிறவியில் அனுபவிக்க வேண்டிய பிராரப்த வினை போகத்திற்கு விடப்பட்டு, ஆகாமியம் அதாவது வரவிருக்கும் வல்வினைகள் யாவும் ஒட்டாதாவாறு ஓட்டி அருளப்பட்டு, இப் பிறவியிலேயே எப்பிறவியும் வாய்க்காமல் இருக்கத் தடுக்கப்படும் வகையில், இதற்குப் பின் நடத்தும் சிவாராதனையின் பலனாக ஏற்படாவண்ணம் மலபரிபாகம் நீங்கி இருவினையொப்பு ஏற்பட்டு, அதாவது ஐந்து வித மலங்களும் ஐயமின்றி நீங்கி நல்வினையும் தீவினையும் சமநிலை பெற்று நிச்சய முத்தியை நிச்சயம் வழங்கும் நிலை உருவாக்கப்படுகிறது. சித்தாந்தம், முடிந்த முடிவு, இறுதி முடிவு, உறுதி முடிவுகளை சைவமே வழங்குவதால் சைவசித்தாந்தம் பசுக்கள் ஐந்து வித மலங்களும் நீக்கப் பெற்று பதியுண்மையை அறிந்து இக பர நலன்களை சுகமுற அனுபவிக்க வழிவகை செய்வதே சிவதீக்ஷையாகும். இனி இத்தகைய பெருமை மிகு அருமை மிகு சிவதீக்ஷையை எங்கெங்கு எவ்வெப்போது யார் யார் எப்படியெப்படி செய்து கொள்ள இயலும் என்பதையும், அதற்கு நாளும் கோளும் நற்றுணை செய்யுமாப்போல, ஞானகுருவை நாடி ஏற்றம் பெற ஏற்ற நாளைத் தேர்ந்தெடுக்க முயலுவோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இடம் :- புண்ய க்ஷேத்ரங்கள், புண்ய நதிதீரங்கள், மலர்மிகு நந்தவனங்கள், இடவசதி போதுமான பெரிய வீடு, தேவாலயம். தூய்மையான இடத்தில் யாகசாலை அமைக்கும்படி உள்ள இடத்தில் ஞானகுரு தேர்த்தெடுக்கும் இடத்தில் தீக்ஷை செய்யலாம்.

தீக்ஷா காலம்- சிவாலய ரதோத்ஸவம், தமனோத்ஸவம், விஷு சங்க்ரமண அயன புண்ய காலங்கள், சூர்ய சந்த்ர கிரஹணங்கள், பவித்ரோத்ஸவ காலம் போன்ற அதிக பலனளிக்கும் புண்ய காலங்களிலும், நக்ஷத்ரப் பொருத்தப்படி தீக்ஷை செய்து கொள்பவர் நக்ஷத்ரத்திற்கு தாராபலம் சந்திரபலம் உள்ள, கசர யோகம் குறுக்கிடாத (அதாவது சூர்ய சஞ்சார நக்ஷத்ரத்திலிருந்து தீக்ஷா தின நக்ஷத்ரம் வரை கூட்டி ஒன்பதால் வகுத்த மீதம் 1, 2, 6, 7, 8 வந்தால் கசரயோகமில்லை), நாட்களில் அனுஷம், ஹஸ்தம், சுவாதி, மிருகசீர்ஷம், மகம், மூலம், திருவோணம், திருவாதிரை, பூசம், ரோஹிணி, உத்திரம், உத்திரட்டாதி, உத்திராடம் ஆகிய நக்ஷத்ரங்களும், செவ்வாய், சனி நீங்கலாக ஏனைய ஐந்து வார நாட்களும், தீக்ஷைக்கு மிக உகந்த நாட்கள்.

மேலும் குரு சுக்கிர மூட அஸ்தமன காலங்கள், அதிகமாஸம், மலமாஸம் கூடாது. ஆவணி, புரட்டாசி, தை, சித்திரை தவிர மற்ற மாதங்கள் தீக்ஷைக்கு ஏற்ற மாதங்கள். ரவிசூத்திர யாகசாலை, மனுசூத்திர யாகசாலை, கலாசூத்திர யாகசாலை மூன்றில் ஒன்றிலும், உமாகாந்த மண்டலம், கௌரீலதா மண்டலம். நவநாப மண்டலம் மூன்றில் ஒன்றிலும், தேர்ந்தெடுத்து ஞானகுரு தீக்ஷை செய்து வைப்பார். காலங்கடந்து தீக்ஷை செய்துகொள்ள விரும்புபவர்கள் நல்ல குருவை நாடி அவர் திருவுள்ளப்படி எந்தக் கட்டுபாட்டுக்கு ஏற்றபடி நாள் அமைகிறதோ அன்றே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தீர்மானித்து செய்து கொள்ளலாம். சிவபுண்ணியம் நிறைந்த சீடர்களுக்குக் குருவே வலிய வந்து ஆட்கொண்டு தீக்ஷை செய்து வைப்பார். மனிதப் பிறவிலேயே புனிதப் பிறவியும் பெற்று அதன் அருமை பெருமைகளை பொறுமையாகப் புரிந்து கொண்டு அதன் நிலையாமையும் நிறுத்து உணர்ந்து, சமயம் முதல் முறையாக தீக்ஷையைப் பெற்று, வைதிக சைவிக அநுட்டானங்களை ஆற்றி, சிவ பூஜையைச் சிறப்புறச் செய்து, இக பர நலமடைவதே நான்கு மறைத் தீர்ப்பான சைவ சித்தாந்த முடிவாகும். அனுஷ்டான பேதங்களை ஆய்வு செய்துப் பார்க்கும்பொழுது ஸ்தூலம், ஸூக்ஷமம், அதிசூக்ஷமம், காரணம், மஹாகாரணம் எனப் பஞ்சாக்ஷரம் சீடனின் தகுதி நிலைக்கேற்ப உபதேசிக்கப்படுவதால் திருமறை வழி வைதிக ஸந்தியில் அதிகாரம் உள்ளவர்களுக்கு அபரமெனவும், சிவாகம தந்திர வழிப்படி நடக்க அதிகாரம் உள்ளவர்களுக்கு பரமெனவும், அஸ்த்ராபிஷேகம் வரை செய்துகொண்ட அதிகாரிகளுக்கு பராபரசந்தி எனவும், சைவர்களுக்கு சிவசக்தியும் வைதிகர்களுக்கு சூர்யனும் கர்மசாக்ஷியாகக் கூறப்படுகிறது. வைதிகர்களுக்கு வைதிக சந்தியாவந்தனம் மட்டுமே உரியது. ஆதிசைவ பிராம்மணர்காளாகிய சிவாசார்யர், குருக்கள், பட்டர், நாயஹர், நயினார் என்ற பட்டங்களை காரணத்தோடு இடம் நோக்கிப் பெயர் பெறும் நாம் "வைதிகந்து புராக்ருத்வா பஶ்சாத் சைவிக மாசரேத்" என்ற வாக்யத்திற்கு இணங்க, உபநயன ஸம்ஸ்காரமானது முதல் வைதிக சந்த்யாவந்தனத்தையும், சமயம் ஆனவுடன் காலை வைதிக சந்த்யாவந்தனத்திற்கு பிறகு காலை மட்டும் பிராஹ்மியை மட்டும் தியானித்து காலை ஒரு வேளை மட்டும் சைவசந்தி அனுஷ்டானம். குரு உபதேச க்ரமப்படி பஞ்சாக்ஷர ஜபமும், விசேஷ தீக்ஷை ஆனவுடனும் காலை மாலை இருவேளையும் வைதீக அனுஷ்டானம் முடிந்தவுடன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேண்டும், செழிக்கவும் வேண்டும். மீண்டும் மீண்டும் பயிர்கள் விளைய, விதைகள் மிக மிக அவசியம். இது கருதியே, விதைகளை முறையாகத் தேர்ந்தெடுத்து உரிய இடங்களில் உயரிய முறையில் பாதுகாத்துத் தக்க சமயத்தில் விதைகளை வழங்குகின்றனர். மனிதன் உண்ணும் பகுதி நெல்மணிகளை புழுங்கல் அரிசியாக மாற்ற நெல்மணிகளை ஊரவைத்து வேகவைத்து காயவைத்து அரிசி ஆலைகளில் அரிசியாக்கிப் பயன்படுத்துகின்றனர். புழுக்கிய புழுங்க நெல்மணிகள் மீண்டும் முளைத்து நெல்மணிகளை உருவாக்காது. அதுபோல சிவதீக்ஷை என்ற கிரியாவதி ஞானவதி தீக்ஷைகளைப் பெற்று சைவ சந்த்யாவந்தன ஜபதபங்களையும் வைதிக சந்த்யாவனத்திற்குப் பிறகு முறையாக நான்கு வேளை ஆற்றி, சிவபூஜைக்கு அதிக முக்யத்வம் கொடுத்து அதையே முதலில் மறவாமல் தவறாமல் அன்போடு ஆசாரத்தோடு ஆற்றி அகமகிழும் அனைவரும் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டு பிறவாநெறியைப் பெறுவர் என்பது இறுதியாகவும் உறுதியாகவும் சிவாகமங்கள் கூறுகின்றன. புழுங்கலரிசி பசிக்கு புசிப்பதற்கு மட்டுமே பயன்பட்டு, முளைத்துப் பயன் தராதது போல சிவதீக்ஷாவான்கள் தான் முன்வினைப் பயன்கள் நீங்கப் பெற்றவர்களாய் பிராரப்தத்தை மட்டும் எவ்வாற்றானும் அனுபவித்து சிவப்பரம்பொருளின் பெருங்கருணையினால் ஆட்கொள்ளப்பட்டும் மீண்டும் யாதொரு பிறவியும் வாராமல் அருளப்படுகின்றனர் என்பது உறுதி. மனிதப்பிறவி புனிதப்பிறவியாகி, புனிதப்பிறவி தெய்வப்பிறவியாகி, ஞானகுருவால் குருவருள் மிளிரத் திருவருள் பெற்று, சிவசாயுஜ்யம் நிச்சயமாக அடைகின்றனர். எனவே சிவபூஜையும் சிவதீக்ஷையும் இக பர சுக, க்ஷேம, சௌக்ய, குசலங்களை, நிச்சயம் வழங்குமென அறியலாம்; நம்பலாம். நம்பினார் கெடுவதில்லை; இது நான்கு மறைத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தீர்ப்பும், பன்னிரு திருமுறைப் பறைசாற்றலும், அனைத்து நன்னூல் சைவசித்தாந்தப் பொதுமறைநூல் தெளிவும் ஆகும்.

ஆசார்ய அபிஷேகத்திற்குத் தகுதி மிக்கவர்களாகக் கூறும் போது, ஆணவாதி மும்மலங்களும் முற்றிலும் நீங்கியவரும், சரியை கிரியை யோகம் ஞானம் என்ற சிவாகமங்களின் நான்கு பாத தத்வார்த்தங்களையும் உணர்ந்து ஆய்ந்து அச்சிவானுபூதியிலே திளைக்க விரும்பும் சுத்தான்மாக்களே, பெத்தான்மாக்களே, அதற்கு உரியர். சமயதீக்ஷை சரியை நெறியையும், விசேஷதீக்ஷை கிரியா நெறியையும் நிர்வாணதீக்ஷை யோக நெறியையும், ஆசார்ய அபிஷேகம் ஞான நெறியையும் உணர்த்த உணரப்படுவதால், "யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்; எல்லா உயிர்களும் இன்புற்று இருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே" என தாயுமான சுவாமிகள் கருத்துக்கு இணங்க, பக்குவப் படாதவர்களையும் பதமாக இதமாக இங்கிதமாக பக்குவப் படுத்தியும், தானே பக்குவப்பட்டு சிவஞான வேட்கையோடு வருபவர்களையும் ஆச்ரயித்து அபயமளித்து குருஸ்தானத்தில் குறையின்றி நின்று சிவதீக்ஷை வைபவங்களை இயன்றவரை நடாத்தி, சிவநெறி சிவபுண்யங்களையும் நாளும் வளரும்படிச் செய்ய வேண்டியது சிவபிராம்மணனான ஆதிசைவனுக்குரிய அறுவகைக் கடமைகளாகும். அதாவது சிவாகம சைவ சித்தாந்த நூல்களை பயில்வது, பயிற்றுவிப்பது, வேள்விகளை செய்வது, பிறரைச் செய்யும்படித் தூண்டுவது, அளிப்பது, ஏற்பது - ஆகிய ஷட்தர்மங்களை குறைவறச் செய்யவேண்டும். வழிவழியாகக் குருமார்களும் சீடர்களும் நல்வழி நடக்க, இப்புவி நலமனைத்தும் பெறும். சிவபுண்ணியம் வளர்ச்சியடைய, தீவினைகள் யாவும், தீச்செயல்கள் யாவும், தானே தளர்ச்சி நிலையை எய்தும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவதீக்ஷை பெற்ற நாள் முதல் ஒரு மண்டல காலம் பஞ்சாக்ஷரம் ஜபித்து, அதில் பத்தில் ஒரு பங்கு ஸம்ஹிதா மந்த்ரமெனும் பஞ்ச ப்ரஹ்ம ஷடங்கம் எனும் பதினோறு மந்த்ரங்களையும் ஜபித்தலோடு அஸ்த்ர மந்த்ரங்களையும் ஜபித்து, மண்டல முடிவில் அஸ்த்ர பூஜா, ஜப, ஹோம, புரஸ்ச்சரணையுடன் சிவ-த்விஜ சமாராதனையும், அஸ்த்ராபிஷேகத்தில் செய்ய, உள்ளங்கை நெல்லிக்கனி போல் இக பர நலமனைத்தும் எய்தக் கூடும். சிவபூஜாஸ்தவம் எனும் நூலில் முதல் ச்லோகத்திலேயே இதன் பயன் "தஸ்யைவ ஸித்தித்வயம்" என இம்மை மறுமை நலன்களை அடைவார்கள் என்று உறுதி அளிக்கிறது.

யோகஜாகமத்தில் "தசகர்யம்" என்ற கூறப்படுகிற (1) தத்துவ ரூபம் (2) தத்துவ தர்சனம் (3) தத்துவ சுத்தி (4) ஆத்ம ரூபம் (5) ஆத்ம தர்சனம் (6) ஆத்ம சுத்தி (7) சிவ ரூபம் (8) சிவ தர்சணம் (9) சிவ யோகம் (10) சிவ போகம் என்ற பத்தும், ப்ரஹ்மோத்ஸவத்தில் எல்லா பக்தர்களுக்கும் பொதுவாக இறைவனால் வாரி வழங்கப்படினும் "பாக்யவந்த: பிபந்தி" என்றபடி ஈடுபாடும் ஆர்வமும் பக்திப் பரவசமும் மேலிட்டுத் தவறாமல் பத்து நாட்களும் திருவிழாவில் கலந்து கொண்டு வந்து தரிசித்த பேர்களுள் சிறந்த பக்திமான்களுக்கே சாம்பவீ தீக்ஷை எனப்படும் தீர்த்தவாரியாகிய சிவபோகத்திலே திளைப்பவர்களுக்கு மட்டுமே சிவசாயுஜ்யம் கிட்ட வழியுள்ளது, அதுபோலவே பெறற்கரிய ஆதிசைவ அந்தண மரபிலே தோன்றியும் இத்தகைய சிவதீக்ஷையைப் பெற்று நான்கு வேளை சைவ சந்த்யாவந்தனத்தை விடாது வைதிகசந்தியை முன்செய்து, சிவபூஜை ஜபம் ஹோமம் இவற்றிலே பொருளுக்காக மட்டும் கலந்து கொண்டு பணியாற்றாமல் அருளும் பொருளும் அருளும் சிவபோக யோகத்தில் திளைக்காது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவயோகந்தரும் சிற்றின்பக் கலப்பிலேயே பெருங்காலத்தைக் கழித்து வரும் நாம் ஈடேறும் நாள் எந்நாளோ? இறைவா! எங்களுக்கு சிவஞான அமுதையூட்டி ஆட்கொள்ள வேண்டுமென பிரார்த்திக்க வேண்டும். இப்பிறவி போனால் எப்பிறவி வாய்க்குமோ? பொன்னான சந்தர்ப்பத்தை, மிக மிக மேலான பிறவியை வாளா வீழ்த்தி, விளக்கில் விட்டில் பூச்சி மாட்டி அழிவதைப் போல வாழ்நாள் அனைத்தும் வீழ்நாளாக்கி வாழ முற்படாது, தெளிவாய் அறிந்த பின்னும், நன்றாகப் புரிந்த பின்பும் ஒன்றுகூடி தெரிந்த கொண்ட பின்பும் உண்மையை உள்ளபடி தோய்ந்து ஆய்ந்த பின்பும், பரம்பொருளின் பெரும்பொருளை அடையாமல் பொய்ப் பொருள்களிலேயே மிக மிக நாட்டங்கொண்டு மெய்ப்பொருளை மெய் நடுவே வைத்துக் கொண்டே பொய் நாடி, பொய்ப் பொருள் நாடி, நிலையில்லா இளமை, செல்வம், மனைவி, மக்கள், நண்பர், சுற்றம், உறவுகளில் கருத்தூன்றி, களிப்பூன்றி, வீண்பொழுது கழித்து வருவது சரியல்ல என்பதை உணர்ந்தும், மீண்டும் நாம் நமது கடமையைத் தவறுவதும், கண்ணியத்தை இழப்பதும், கட்டுப்பாட்டை மீறுவதும் நமக்கும் நமது சந்ததியர்க்கும் நல்லதா? என்று ஆழ்ந்து சிந்திக்கும் நிலையிலேதான் நாம் இருக்கிறோமே தவிர முன்னேற முயலவில்லை. முழு முதல்வன் தாளடையும் முயற்சியே இல்லையென்றுதான் கூற வேண்டும்.

சர்யாபாதமெனும் சரியாபாதத்தை சரியாகப் புரிந்து நடக்க சமயதீக்ஷையும், கிரியாபாதமெனும் பூஜை ஹோம கிரியைகளை அறிந்து நடைமுறைப் படுத்த விசேஷ தீக்ஷையும், யோக பாதமெனும் சிவனோடு நெருங்கியத் தொடர்பு பற்றிக் கொள்ள சேர்க்கையெனப் பொருள்படும் யோக மார்க்கத்தைப் பெற, புத்தம் புதிய சிவசிருஷ்டியாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாற்ற, ஞானகுருவின் மோன அருளால் பரம்பொருள் சிவசக்தியை வாகீஸ்வரி-வாகீஸ்வரராக சிவாக்னி உற்பத்தி போல யோக தீக்ஷையாக விசேஷ தீக்ஷையும், தியானத்தால் ஞானமடைவிக்க ஞானபாத தத்துவமறிவித்து ஆசார்ய அபிஷேகமும், படிப்படியாக உணர்ந்து சிவப்பரம்பொருளை தியானித்து பூஜித்து ஜபித்து தவமிருந்து தனிப்பெரும் உவகையடையும் நிலையே முறையே சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கு பாதங்களை நன்கு அடையவும் சிவமார்க்கமாகும். இதையே அரும்பு, மலர் காய், கனி எனவும் கூறுவதுண்டு, இவ்வளவு சத்வ ஸம்பூர்ணமான தத்துவக் கருத்துக்கள் உண்மைகள் நன்மைகள் அடங்கிய சிவதீக்ஷை இருபது மணி நேரத்துக்குள் எதுவும் புரியாமல் நானும் சிவதீக்ஷை செய்து கொண்டு விட்டேன் என்று செய்து கொள்வதில் ஆடம்பரமும் ஆர்ப்பாட்டமும் ஆணவமும் தான் வெளிப்படுகின்றன.

மேலும் ஆசார்ய அபிஷேகத்தில் அத்வசுத்தி ஆறும் செய்யப்படும். அதாவது பாதம் முதல் முழுங்கால் வரையிலும், நிவ்ருத்தி கலா சுத்தியானது அதிலடங்கிய தத்வம் ஒன்று (1)-ம், புவனங்கள் 108-ம், வர்ணம் ஒன்று (1)-ம், பதங்கள் 18-ம், மந்த்ரங்கள் 2-ம், பிரதிஷ்டா கலையில் முழங்கால் முதல் தொப்புள் வரையிலும் 23 தத்துவங்களும், 56 புவனங்களும், 24 வர்ணங்கள் அஷரங்களும், 21 பதங்களும், 2 மந்திரங்களும், வித்யாகலையில் தொப்புள் முதல் இதயம் வரையிலும் 7 தத்துவங்களும், 27 புவனங்களும், 7 வர்ணங்களும், 20 பதங்களும், 2 மந்திரங்களும், சாந்திகலையில் இதயம் முதல் புருவ மத்தி வரையிலும் 3 தத்துவங்களும், 18 புவனங்களும், 3 வர்ணங்களும், 11 பதங்களும், 2 மந்திரங்களும், சாந்தியதீத

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

கலையில் புருவ மத்தி முதல் சிரசுக்கு மேல் வரையில் 2 தத்துவங்களும், 15 புவனங்களும் 16 பதினாறு வர்ணங்களும், 1 பதமும், 3 பதங்களும் - ஆக ஐந்து கலைகளும், ஐந்து கலைகளுள் அடங்கிய 36 தத்துவங்களும், 224 புவனங்களும், 51 வர்ணங்களும், 81 பதங்களும், 11 மந்திரங்களும் கலாத்வா, தத்துவாத்வா, புவனாத்வா, வர்ணாத்வா, பதாத்வா, மந்த்ராத்வா என ஆறு அத்வாக்களும் ஞானகுருவின் ஞானப்பார்வை போன்றவற்றால் சுத்திகரிக்கப்பட்டு சஞ்சித வினைகள் தகர்க்கப்பட, எடுத்த பிறவியில் அனுபவிக்க வேண்டிய பிராரப்த வினை போகத்திற்கு விடப்பட்டு, ஆகாமியம் அதாவது வரவிருக்கும் வல்வினைகள் யாவும் ஒட்டாதாவாறு ஓட்டி அருளப்பட்டு, இப் பிறவியிலேயே எப்பிறவியும் வாய்க்காமல் இருக்கத் தடுக்கப்படும் வகையில், இதற்குப் பின் நடத்தும் சிவாராதனையின் பலனாக ஏற்படாவண்ணம் மலபரிபாகம் நீங்கி இருவினையொப்பு ஏற்பட்டு, அதாவது ஐந்து வித மலங்களும் ஐயமின்றி நீங்கி நல்வினையும் தீவினையும் சமநிலை பெற்று நிச்சய முத்தியை நிச்சயம் வழங்கும் நிலை உருவாக்கப்படுகிறது. சித்தாந்தம், முடிந்த முடிவு, இறுதி முடிவு, உறுதி முடிவுகளை சைவமே வழங்குவதால் சைவசித்தாந்தம் பசுக்கள் ஐந்து வித மலங்களும் நீக்கப் பெற்று பதியுண்மையை அறிந்து இக பர நலன்களை சுகமுற அனுபவிக்க வழிவகை செய்வதே சிவதீக்ஷையாகும். இனி இத்தகைய பெருமை மிகு அருமை மிகு சிவதீக்ஷையை எங்கெங்கு எவ்வெப்போது யார் யார் எப்படியெப்படி செய்து கொள்ள இயலும் என்பதையும், அதற்கு நாளும் கோளும் நற்றுணை செய்யுமாப்போல, ஞானகுருவை நாடி ஏற்றம் பெற ஏற்ற நாளைத் தேர்ந்தெடுக்க முயலுவோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இடம் :- புண்ய க்ஷேத்ரங்கள், புண்ய நதிதீரங்கள், மலர்மிகு நந்தவனங்கள், இடவசதி போதுமான பெரிய வீடு, தேவாலயம். தூய்மையான இடத்தில் யாகசாலை அமைக்கும்படி உள்ள இடத்தில் ஞானகுரு தேர்த்தெடுக்கும் இடத்தில் தீக்ஷை செய்யலாம்.

தீக்ஷா காலம்- சிவாலய ரதோத்ஸவம், தமனோத்ஸவம், விஷு சங்க்ரமண அயன புண்ய காலங்கள், சூர்ய சந்த்ர கிரஹணங்கள், பவித்ரோத்ஸவ காலம் போன்ற அதிக பலனளிக்கும் புண்ய காலங்களிலும், நக்ஷத்ரப் பொருத்தப்படி தீக்ஷை செய்து கொள்பவர் நக்ஷத்ரத்திற்கு தாராபலம் சந்திரபலம் உள்ள, கசர யோகம் குறுக்கிடாத (அதாவது சூர்ய சஞ்சார நக்ஷத்ரத்திலிருந்து தீக்ஷா தின நக்ஷத்ரம் வரை கூட்டி ஒன்பதால் வகுத்த மீதம் 1, 2, 6, 7, 8 வந்தால் கசரயோகமில்லை), நாட்களில் அனுஷம், ஹஸ்தம், சுவாதி, மிருகசீர்ஷம், மகம், மூலம், திருவோணம், திருவாதிரை, பூசம், ரோஹிணி, உத்திரம், உத்திரட்டாதி, உத்திராடம் ஆகிய நக்ஷத்ரங்களும், செவ்வாய், சனி நீங்கலாக ஏனைய ஐந்து வார நாட்களும், தீக்ஷைக்கு மிக உகந்த நாட்கள்.

மேலும் குரு சுக்கிர மூட அஸ்தமன காலங்கள், அதிகமாஸம், மலமாஸம் கூடாது. ஆவணி, புரட்டாசி, தை, சித்திரை தவிர மற்ற மாதங்கள் தீக்ஷைக்கு ஏற்ற மாதங்கள். ரவிசூத்திர யாகசாலை, மனுசூத்திர யாகசாலை, கலாசூத்திர யாகசாலை மூன்றில் ஒன்றிலும், உமாகாந்த மண்டலம், கௌரீலதா மண்டலம். நவநாப மண்டலம் மூன்றில் ஒன்றிலும், தேர்ந்தெடுத்து ஞானகுரு தீக்ஷை செய்து வைப்பார். காலங்கடந்து தீக்ஷை செய்துகொள்ள விரும்புபவர்கள் நல்ல குருவை நாடி அவர் திருவுள்ளப்படி எந்தக் கட்டுபாட்டுக்கு ஏற்றபடி நாள் அமைகிறதோ அன்றே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
தீர்மானித்து செய்து கொள்ளலாம். சிவபுண்ணியம் நிறைந்த சீடர்களுக்குக் குருவே வலிய வந்து ஆட்கொண்டு தீக்ஷை செய்து வைப்பார். மனிதப் பிறவிலேயே புனிதப் பிறவியும் பெற்று அதன் அருமை பெருமைகளை பொறுமையாகப் புரிந்து கொண்டு அதன் நிலையாமையும் நிறுத்து உணர்ந்து, சமயம் முதல் முறையாக தீக்ஷையைப் பெற்று, வைதிக சைவிக அநுட்டானங்களை ஆற்றி, சிவ பூஜையைச் சிறப்புறச் செய்து, இக பர நலமடைவதே நான்கு மறைத் தீர்ப்பான சைவ சித்தாந்த முடிவாகும். அனுஷ்டான பேதங்களை ஆய்வு செய்துப் பார்க்கும்பொழுது ஸ்தூலம், ஸூக்ஷமம், அதிசூக்ஷமம், காரணம், மஹாகாரணம் எனப் பஞ்சாக்ஷரம் சீடனின் தகுதி நிலைக்கேற்ப உபதேசிக்கப்படுவதால் திருமறை வழி வைதிக ஸந்தியில் அதிகாரம் உள்ளவர்களுக்கு அபரமெனவும், சிவாகம தந்திர வழிப்படி நடக்க அதிகாரம் உள்ளவர்களுக்கு பரமெனவும், அஸ்த்ராபிஷேகம் வரை செய்துகொண்ட அதிகாரிகளுக்கு பராபரசந்தி எனவும், சைவர்களுக்கு சிவசக்தியும் வைதிகர்களுக்கு சூர்யனும் கர்மசாக்ஷியாகக் கூறப்படுகிறது. வைதிகர்களுக்கு வைதிக சந்தியாவந்தனம் மட்டுமே உரியது. ஆதிசைவ பிராம்மணர்காளாகிய சிவாசார்யர், குருக்கள், பட்டர், நாயஹர், நயினார் என்ற பட்டங்களை காரணத்தோடு இடம் நோக்கிப் பெயர் பெறும் நாம் "வைதிகந்து புராக்ருத்வா பஶ்சாத் சைவிக மாசரேத்" என்ற வாக்யத்திற்கு இணங்க, உபநயன ஸம்ஸ்காரமானது முதல் வைதிக சந்த்யாவந்தனத்தையும், சமயம் ஆனவுடன் காலை வைதிக சந்த்யாவந்தனத்திற்கு பிறகு காலை மட்டும் பிராஹ்மியை மட்டும் தியானித்து காலை ஒரு வேளை மட்டும் சைவசந்தி அனுஷ்டானம். குரு உபதேச க்ரமப்படி பஞ்சாக்ஷர ஜபமும், விசேஷ தீக்ஷை ஆனவுடனும் காலை மாலை இருவேளையும் வைதீக அனுஷ்டானம் முடிந்தவுடன்

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

காலையில் பிராஹ்மியையும் மாலையில் ரௌத்ரியையும் தியானித்து சைவீகசந்தி அனுஷ்டிக்க வேண்டும். நிர்வாணதீக்ஷை ஆனவுடன் காலை மதியம் மாலை மூன்று வேளையும் முதலில் வைதிக சந்த்யாவந்தனத்தையும் பிறகே பிராஹ்மி வைஷ்ணவி ரௌத்ரியை தியானித்து சைவாநுஷ்டானத்தையும் செய்ய வேண்டும். இதைத்தான் விசேஷசந்திக்கு முன் "க்ருத நித்யான்னிகத் துவயஹ பரித்யக்த போஜன:" என்று வைதீக சைவிக ஸந்த்யாவந்தனம் முடித்து உணவருந்தாமல் விசேஷசந்தி கும்பாபிஷேகம் உத்ஸவாதி காலங்களில் ரக்ஷாபந்தனம் செய்துகொண்ட சிவாசார்யார்கள் தர்ப்பணங்களைச் செய்து, ஸம்ஹிதா மந்த்ரம் பிராஸாத மந்த்ரம், அஷ்டவித்யேசர்கள், 36 தத்துவத்திற்கும் அதன் அதிபதிகளுக்கும், ரிஷிகளுக்கும், தேவ ரிஷிகளுக்கும், முன்னோர்களான தேவ மனுஷ்ய பித்ருக்களுக்கும் முறையாகத் தர்ப்பணம் செய்து அவர்களது பரிபூரண நல்லாசிகளைப் பெற்றுப் பிறகே யக்ஞமண்டபம் சென்று பூஜை ஜபம் ஹோமம் செய்வது முறையாக வகுத்துள்ளது சிவாகமத்தைத் தழுவிய பத்ததிகள். இவற்றையெல்லாம் நன்கு உற்று நோக்குங்கால், இனியாவது நாம் நமது வாழ்நாளை வீழ்நாளாக்காமல் உரிய காலத்தில் உயரிய முறையில் தீக்ஷையை முறையாக அழகாக நன்றாகச் செய்து கொண்டு, செய்து வைத்து, அனுஷ்டானங்களையும் அனுதினமும் காலம் தவறாமல், முறை வழுவாமல் செய்து, சிவபூஜையையும் செவ்வனே செய்து, செய்வித்து, நாமும் வாழ்ந்து, நானிலத்தையும் வாழ்வித்து வாழ, எல்லாம் வல்ல சிவப்பரம்பொருளை மனம் மொழி மெய்களால் பிரார்த்தித்து, வேண்டி, கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

2

பூதசுத்தி

கட்டுரை ஆசிரியர்: சிவாகம வித்வான், வ்யாகரண சிரோமணி B.கனகஷண்முக சிவாசார்யார், தலைமை அர்ச்சகர், ஸ்ரீ ஜலகண்டேச்வரர் தேவஸ்தானம், வேலூர்.

"யோவேத்தி பஞ்ச சுத்திந்து ஸபூஜாம் கர்த்துமர்ஹதி" என்ற வாதுளாகம வசனம், எவனொருவன் ஐந்து சுத்திகளையும் அறிந்திருக்கின்றானோ அவன்தான் பூஜை செய்யத் தகுதி உடையவனாகின்றான் என்று கூறுகின்றது.

"தேஹம் ஸ்தானம் ததா த்ரவ்யம்
லிங்கம் மந்த்ரந்து பஞ்சமம்"

"ஆத்மசுத்தி: க்ரியாபூர்வா
ஸ்தான சுத்திர் த்விதீயகா ।
த்ருதீயம் த்ரவ்ய ஸம்சுத்தி:
சதுர்த்தம் மந்த்ர சோதனம் ।
பஞ்சமம் லிங்க சுத்திஸ்யாத்
கத்யந்தே பஞ்சசுத்தய: ॥"

என்னும் வாக்கியங்களினாலே ஆத்ம சுத்தி, ஸ்தான சுத்தி, த்ரவ்ய சுத்தி, மந்த்ர சுத்தி, லிங்க சுத்தி என்றவாறு அந்த ஐந்து சுத்திகளின் வரிசை க்ரமத்தை அறியலாம். ஆகவே, ஆசாரியன் மாதாபித்ருமலோத்பூதமானதும் பாஞ்ச பௌதிகமானதும் ஆன தனது சரீரம், பூஜை செய்யும் இடம், பூஜைக்குரிய பொருட்கள், பூஜைக்குரிய மந்திரங்கள், பூஜை செய்யப்படும் லிங்கம் ஆகியவற்றை மந்திர தந்திர க்ரியா பாவனைகளினாலே சுத்தம் செய்து பூஜை செய்வதற்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யோக்யதாம்சம் உடையவைகளாக ஆக்கிக்கொண்டுதான் பூஜை செய்யத் தொடங்கவேண்டும். இதைத்தான் பஞ்சசுத்தி என்று சொல்லுகின்றோம்.

அவற்றுள் முதலாவதான ஆத்மசுத்திதான் பூதசுத்தி என்றும் அழைக்கப்படுகின்றது. சரீரமானது பூதங்களினால் ஆனதால், பூதங்களின் ஸ்வபாவம் வர்ணம் மந்திரம் சின்னம் கலை காரணேச்வரன் இவற்றையெல்லாம் தியானம் செய்து, பூதங்களின் குணங்களையெல்லாம் விட்டு, மந்த்ரமயமாகச் செய்வதாக அமைந்துள்ளதை பூதசுத்தி என்று கூறுகின்றோம்.

"ஸர்வக்ஞதா சக்திரநாதிபோத:
ஸ்வதந்த்ரதா நித்ய மலுப்த சக்தி: ।
அனந்த சக்திஶ்ச விபோர்விதிக்ஞா:
ஷடாஹுரங்கானி மஹேச்வரஸ்ய ।"

என்பது பதிலக்ஷணம். பரமேச்வரானானவர் ஸர்வக்ஞர், நித்யர், பாச மல பந்தம் இல்லாதவர். சித்ஸ்வரூபர். அப்படிப்பட்ட ஸர்வக்ஞத்வாதி குணகணங்களோடு கூடிய பரமாத்மாவை பூஜை செய்ய வருகின்ற ஜீவான்மாவானது அசித்துகிஞ்சிக்ஞன். மல பாசங்களினால் கட்டுண்டு சம்ஸார சாகரத்தில் உழலும் பாஞ்ச பௌதிக சரீரமுடையவனாக இருக்கின்றது.

"பசுர் நித்யோமூர்த்த: அஜ்ஞ:
நிஷ்க்ரிய: நிர்குண: அப்ரபு: ।
வ்யாபீ மாயோதராந்தஸ்த:
போகோபாய விசிந்தக: ..."

என்பது கிரணாகம ஜீவான்ம லக்ஷண வாக்யம்.

அனாதி மல முக்தமான இறைவனை அனாதி மல பத்தனான ஜீவான்மாவானது பூஜை செய்யப்

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

புகும்போது ...

"சிவீபூத: சிவம் யஜேத் ।"

"நாருத்ரோ ருத்ரமர்ச்சயேத் ।"

"வர்ம கர்பே சிவீபூய பஹிரந்த: சிவம் யஜேத்"

"உத்ஸ்ருஜ்ய ப்ராக்ருதம் பாவம்
சிவோऽஹமிதி பாவயேத் ।
யவந்ந தத்ஸமோ ஜாத:
தாவந்நாராதநே க்ஷம: ॥"

என்னும் வாக்கியங்களினால் ஜீவான்மாக்கள் தன்னையே சிவமயமாக ஆக்கிக்கொண்டு சிவோஹம்-பாவனையோடுதான் பூஜைசெய்யமுடியும் என்றாகின்றது.

அவ்வாறு தன்னையே சிவமயமாக ஆக்கிக் கொள்வதற்காக, யோகமார்க்கத்தினால், ப்ராணாயாமம் முதலானவற்றினால் பாவனையால் செய்யப்படும் சரீர சம்ஸ்காரமே பூதசுத்தியாகும்.

"ப்ராரப்தம் போகதோ நச்யேத்
ஸஞ்சிதம் ஹந்தி தீக்ஷயா"

என்றபடி நிர்வாண தீக்ஷையினால் ஆத்மாக்களுடைய ஸஞ்சித கர்மாவானது அழிந்து, ப்ராரப்தகர்மா மட்டும் எஞ்சியிருக்கின்றது. ப்ராரப்த கர்மாவானது அனுபவிக்காமல் தொலையாது. நிர்வாண தீக்ஷையினால் பரிசுத்தமான ஆன்மாவாக இருந்தாலும் ப்ராரப்த கர்மாவை அனுபவித்துக் கொண்டிருப்பதால் ஒவ்வொரு நாளும் பூஜை செய்யும் சமயத்தில் பூதசுத்தியைச் செய்து சிவமயமாக ஆக்கிக்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. ஆகவேதான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"தேஹப்ராரப்த ஸம்யோகாத் பூதசுத்திர் தினேதினே" என்றும்,

"மாதாபித்ரு மலோத்பூதே
தேஹே ஸ்தாதும் நயுஜ்யதே
தஸ்மாந் மந்த்ரமய: காய:
க்ரியதே ப்ரதிவாஸரம்"

என்றும் சொல்லியிருக்கின்றது.

நமது சரீரமானது ஸூக்ஷ்மம் ஸ்தூலம் என்று இருவகைப்படுவதால் பூதசுத்தியானது ஸூக்ஷ்ம தேஹசுத்தி ஸ்தூல தேஹசுத்தி என்று இருவகையாக ஆகின்றது. முப்பத்தாறு தத்வக் கூட்டங்களினால் ஆனது ஸூக்ஷ்ம தேஹம். ஐந்து பூத தத்வங்க்ளினால் ஆனது ஸ்தூல தேஹம். இந்த இருவகையான சரீரத்தையும் எப்படி சுத்தமானதாக ஆக்கி மந்த்ரமயமாகச் செய்வது? மற்ற வஸ்துக்களைப் போலத் தண்ணீரைக் கொண்டு அலம்புவதால் சுத்தம் செய்ய முடியாது. ஸூக்ஷ்ம தேஹத்தில் உள்ள முப்பத்தாறு தத்வங்களும் ஒன்றுக்குள் ஒன்று ஒடுங்கி லயமடைந்ததாக பாவிப்பது தான் ஸூக்ஷ்ம தேஹசுத்தி. பஞ்சபூதங்களின் குணங்களையெல்லாம் விட்டு எதிரிடையான சத்ருபாவத்துடன் கூடிய பூதமாக ஆனதாக பாவித்து, பூததோஷங்களை எல்லாம் கால் கட்டைவிரலிருந்து உண்டாகும் அக்னியினால் எரித்து அம்ருதத்தினாலே நனைப்பதாக பாவிப்பது தான் ஸ்தூல தேஹசுத்தியாகும்.

விஷம் ஏறிய உடலிலிருந்து விஷங்களைப் போக்குவதற்காக கருடனை த்யானம் செய்வதுபோல், ஸூக்ஷ்ம தேஹ, ஸ்தூல தேஹ தத்வங்கள் ஒடுங்குவதாக பாவிப்பது தான் பூதசுத்தியாகும். கருடத்யானம் செய்தால் எவ்வாறு விஷங்கள் நீங்குகின்றனவோ அதுபோல ஸூக்ஷ்ம தேஹ, ஸ்தூல தேஹ தத்துவங்களை எல்லாம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

லயமடைந்ததாக பாவித்தலே கர்மபந்தம் நீங்கக் காரணமாக ஆகின்றது.

அகோர சிவசார்ய பத்ததியில் உள்ள பூதசுத்தி ப்ரயோகத்தைத்தான் நாமனைவரும் பரவலாக அனுஷ்டித்து வருகின்றோம், அந்த ப்ரயோக முறையைக் கொஞ்சம் பார்க்கலாம்.

கரந்யாசத்தை மட்டும் செய்துகொண்டு பூதசுத்தியைத் தொடங்க வேண்டும். அங்க ந்யாஸத்தையும் சேர்த்து செய்தோமானால் பிறகு கால் கட்டை விரலிலிருந்து உண்டாகும் அக்னியினால் தேஹத்தை எரிக்கும்போது அங்க-ந்யஸ்த மந்த்ரங்களுக்கும் சேர்த்து தாஹம் (தகனம், எரிக்கப்படுதல்) உண்டாகும். அதைத் தவிர்க்கவே அங்க ந்யாசமில்லாமல் கர ந்யாசத்தை மட்டும் செய்து கொள்ள வேண்டும். மேலும் அவ்வாறு தேஹத்தை எரிக்கும்போது தேஹத்தில் வ்யாப்தமாக உள்ள ஆன்மாவை ரக்ஷணம் செய்ய வேண்டியது அவசியமாக ஆகின்றது. ஆகவே அந்த ஆன்மாவை எங்கு வைப்பது? எப்படிக் கொண்டு செல்வது? நாத ஸ்வரூபமான ஆத்மாவை த்வாதசாந்தத்தில் இருக்கும் பரசிவனோடு சேர்த்து பூதசுத்தியான பிறகு மறுபடியும் சிவமயமான ஆன்மாவை ஹ்ருதய கமலத்திலே சேர்ப்பிக்க வேண்டும் என்பது அகோர சிவாசார்ய பத்ததி.

ஜீவனை ரக்ஷிக்கும் முறையானது வேறுவிதமாகவும் சிவார்ச்சனா சந்திரிகையில் சொல்லப்பட்டிருக்கின்றது. த்வாதசாந்தம் வரையில் ஜீவனைக் கொண்டு சென்று ஹ்ருதய கமலத்திலே ஸூர்ய ஸோமாக்னி மண்டலங்களையும் சக்தி மண்டலத்தையும் நியாசம் செய்து, அதற்கு மேல் "ஓம் ஹாம் ஹம் ஹாம் ஆத்மநே நம:" என்ற மந்திரத்தினால் நட்சத்திரம் போல் ஜ்வலிக்கின்ற ஆத்மாவை வைத்து, அதற்கு மேலாக சக்தி மண்டலம், அக்னி மண்டலம், ஸோம மண்டலம்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸூர்ய மண்டலங்களையும் நியாசம் செய்ய வேண்டும் என்றும் சொல்கின்றது. இதனால் ஆன்மாவிற்கு மேல்புறமும் கீழ்புறமும் இருக்கின்ற சக்தி மண்டலத்திலிருந்து பெருகுகின்ற அம்ருத தாரையினால் நனைந்ததாக பாவிக்கவேண்டும். அவ்வாறு அம்ருத தாரையினால் நனைந்ததாக வைத்து, ஜீவனை தேஹ தாஹத்திலிருந்து ரக்ஷிக்கவேண்டும் என்றும் சொல்லியிருக்கின்றது.

இவ்வாறு ஆன்மாவானது த்வாதசாந்தம் வரையில் மேலே சென்று, பிறகு கீழே திரும்புவதற்கு இருப்பிடமாக அமைந்திருப்பது ஸுஷும்நா நாடி. ஆகவே ஸுஷும்நா நாடியை தியானிக்கும் முறையை அகோரசிவாசார்ய பத்ததி கூறுகின்றது.

"வாம நாஸா புடே யா து இடா ஸாபரிகீர்த்திதா
தக்ஷிணே பிங்களா ஜ்ஞேயா சுஷும்நா மத்யத: ஸ்திதா"

என்பதால் நமது சரீரத்தின் நடுவில் ஸுஷும்நா நாடியும், இடது பாகத்தில் இடா நாடியும், வலது பாகத்தில் பிங்களா நாடியும் உள்ளன என்று தெரிகிறது. அந்த ஸுஷும்நா நாடி எப்படி இருக்கும் எனில், கால் கட்டைவிரல் முதல் மூலாதாரம் வரை இரண்டாகவும், அதற்கு மேல் ப்ரம்மரந்திரம் வரை ஒன்றாகவும் இருக்கும். மேலும் ஸுஷும்நா நாடி இருதயம், கண்டம், தாலு (அண்ணம்), ப்ரூ-மத்யம், ப்ரம்மரந்திரம் என்னும் இந்த ஐந்து ஸ்தானங்களில் இடை-பிங்களை நாடிகளோடு பின்னப்பட்டதாக இருக்கும். மேலும், கீழ்நோக்கிய ஐந்து தாமரை மொக்குகளை உடையதாகவும், தாமரைத் தண்டில் உள்ளது போன்று ஓட்டைகள் நிறைந்ததாகவும் இருக்கும். இவ்வாறு ஸுஷும்நா நாடியை தியானித்து அந்த ஸுஷும்நா நாடியின் உள்ளும் புறமும் அம்ருதத்தை வர்ஷித்துக் கொண்டிருக்கின்ற ஸூக்ஷ்ம தேஹத்தின், அதிஷ்டாத்ரியாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விளங்குகின்ற குண்டலினீ சக்தியை தியானிக்க வேண்டும். அந்த சக்தியின் நடுவில் *ஹௌம்*காரம் என்னும் மந்த்ரபீஜம், அக்னிபோல் ஜ்வலிப்பதாக சிந்திக்க வேண்டும். பூரகத்தையும் கும்பகத்தையும் செய்து, கும்பக வாயுவை த்வாதசாந்தம் வரையில் மேலே செலுத்தும்போது *ஹௌம்பட்* என்னும் மந்திரத்தை இடைவிடாது உச்சரிப்பதாலே ஹ்ருதயாதி ஸ்தானங்களில் கீழ்முகமாக இருக்கின்ற தாமரை மொட்டுக்கள் மேல் நோக்கியதாகவும் மலர்ந்ததாகவும் ஆகின்றன. பிறகு ரேசகம் செய்ய வேண்டும்.

பிறகு ஜீவனை மேலே த்வாதசாந்தத்திற்குக் கொண்டு செல்லும் முறை :- மறுபடி பூரகத்தினால் "ஓம் ஹௌம் ஹாம் ஹம் ஹாம் ஹௌம் ஆத்மநே நம:" என்று நட்சத்திரம் போல் பிரசாசிக்கின்ற ஆத்மாவை புர்யஷ்டக ரூபமாகவுள்ள ப்ருதிவ்யாதி கலாதத்வம் வரையில் உள்ள ஸௌக்ஷ்ம தேஹ தத்வங்களை எல்லாம் விட்டுவிட்டுத் தனியாகவும், பிந்து ஸ்வருபமாகவும் உள்ளதாக பாவிக்க வேண்டும். ஆத்ம மந்த்ரத்தைச் சொல்லி கும்பக வாயுவினால் மேலே செலுத்தும்போது, ஹ்ருதய கமலத்தில் ப்ரஹ்மாவையும், கண்ட பாகத்தில் விஷ்ணுவையும், தாலு பாகத்தில் ருத்ரனையும், ப்ரூ-மத்யத்தில் மஹேச்வரனையும், ப்ரம்மரந்தரத்தில் சதாசிவனையும் விட்டு, பீஜரூபமான நிர்மலமான ஆத்மாவை த்வாதசாந்தத்தில் பரசிவனோடு லயமடையச் செய்ய வேண்டும்.

"வஸூதாத்யஸ் தத்வகண: ப்ரதிபும் நியத: கலாந்தோயம் பர்யடதி கர்மவசத: புவநஜ தேஹேஷ்வயம் ஸர்வேஷூ" என்ற தத்வசங்கிரஹ வாக்யப்படி, ப்ருதிவீ முதல் கலை வரையில் உள்ள தத்வ சமுஹத்தினால் ஆனதாக ஸௌக்ஷ்ம தேஹம் உள்ளது. இதுதான் புர்யஷ்டகம் எனவும் அழைக்கப்படுகிறது. தத்வங்களை எல்லாம் விட்டு,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காலையில் பிராஹ்மியையும் மாலையில் ரௌத்ரியையும் தியானித்து சைவீகசந்தி அனுஷ்டிக்க வேண்டும். நிர்வாணதீக்ஷை ஆனவுடன் காலை மதியம் மாலை மூன்று வேளையும் முதலில் வைதிக சந்த்யாவந்தனத்தையும் பிறகே பிராஹ்மி வைஷ்ணவி ரௌத்ரியை தியானித்து சைவாநுஷ்டானத்தையும் செய்ய வேண்டும். இதைத்தான் விசேஷசந்திக்கு முன் "க்ருத நித்யான்னிகத் துவயஹ பரித்யக்த போஜன:" என்று வைதீக சைவிக ஸந்த்யாவந்தனம் முடித்து உணவருந்தாமல் விசேஷசந்தி கும்பாபிஷேகம் உத்ஸவாதி காலங்களில் ரக்ஷாபந்தனம் செய்துகொண்ட சிவாசார்யார்கள் தர்ப்ணங்களைச் செய்து, ஸம்ஹிதா மந்த்ரம் பிராஸாத மந்த்ரம், அஷ்டவித்யேசர்கள், 36 தத்துவத்திற்கும் அதன் அதிபதிகளுக்கும், ரிஷிகளுக்கும், தேவ ரிஷிகளுக்கும், முன்னோர்களான தேவ மனுஷ்ய பித்ருக்களுக்கும் முறையாகத் தர்ப்பணம் செய்து அவர்களது பரிபூரண நல்லாசிகளைப் பெற்றுப் பிறகே யக்ஞமண்டபம் சென்று பூஜை ஜபம் ஹோமம் செய்வது முறையாக வகுத்துள்ளது சிவாகமத்தைத் தழுவிய பத்ததிகள். இவற்றையெல்லாம் நன்கு உற்று நோக்குங்கால், இனியாவது நாம் நமது வாழ்நாளை வீழ்நாளாக்காமல் உரிய காலத்தில் உயரிய முறையில் தீக்ஷையை முறையாக அழகாக நன்றாகச் செய்து கொண்டு, செய்து வைத்து, அனுஷ்டானங்களையும் அனுதினமும் காலம் தவறாமல், முறை வழுவாமல் செய்து, சிவபூஜையையும் செவ்வனே செய்து, செய்வித்து, நாமும் வாழ்ந்து, நானிலத்தையும் வாழ்வித்து வாழ, எல்லாம் வல்ல சிவப்பரம்பொருளை மனம் மொழி மெய்களால் பிரார்த்தித்து, வேண்டி, கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

2

பூதசுத்தி

கட்டுரை ஆசிரியர்: சிவாகம வித்வான், வ்யாகரண சிரோமணி B.கனகஷண்முக சிவாசார்யார், தலைமை அர்ச்சகர், ஸ்ரீ ஜலகண்டேச்வரர் தேவஸ்தானம், வேலூர்.

"யோவேத்தி பஞ்ச சுத்திந்து ஸபூஜாம் கர்த்துமர்ஹதி" என்ற வாதுளாகம வசனம், எவனொருவன் ஐந்து சுத்திகளையும் அறிந்திருக்கின்றானோ அவன்தான் பூஜை செய்யத் தகுதி உடையவனாகின்றான் என்று கூறுகின்றது.

"தேஹம் ஸ்தானம் ததா த்ரவ்யம்
லிங்கம் மந்த்ரந்து பஞ்சமம்"

"ஆத்மசுத்தி: க்ரியாபூர்வா
ஸ்தான சுத்திர் த்விதீயகா ।
த்ருதீயம் த்ரவ்ய ஸம்சுத்தி:
சதுர்த்தம் மந்த்ர சோதனம் ।
பஞ்சமம் லிங்க சுத்திஸ்யாத்
கத்யந்தே பஞ்சசுத்தய: ॥"

என்னும் வாக்கியங்களினாலே ஆத்ம சுத்தி, ஸ்தான சுத்தி, த்ரவ்ய சுத்தி, மந்த்ர சுத்தி, லிங்க சுத்தி என்றவாறு அந்த ஐந்து சுத்திகளின் வரிசை க்ரமத்தை அறியலாம். ஆகவே, ஆசாரியன் மாதாபித்ருமலோத்பூதமானதும் பாஞ்ச பௌதிகமானதும் ஆன தனது சரீரம், பூஜை செய்யும் இடம், பூஜைக்குரிய பொருட்கள், பூஜைக்குரிய மந்திரங்கள், பூஜை செய்யப்படும் லிங்கம் ஆகியவற்றை மந்திர தந்திர க்ரியா பாவனைகளினாலே சுத்தம் செய்து பூஜை செய்வதற்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யோக்யதாம்சம் உடையவைகளாக ஆக்கிக்கொண்டுதான் பூஜை செய்யத் தொடங்கவேண்டும். இதைத்தான் பஞ்சசுத்தி என்று சொல்லுகின்றோம்.

அவற்றுள் முதலாவதான ஆத்மசுத்திதான் பூதசுத்தி என்றும் அழைக்கப்படுகின்றது. சரீரமானது பூதங்களினால் ஆனதால், பூதங்களின் ஸ்வபாவம் வர்ணம் மந்திரம் சின்னம் கலை காரணேச்வரன் இவற்றையெல்லாம் தியானம் செய்து, பூதங்களின் குணங்களையெல்லாம் விட்டு, மந்த்ரமயமாகச் செய்வதாக அமைந்துள்ளதை பூதசுத்தி என்று கூறுகின்றோம்.

"ஸர்வக்ஞதா சக்திரநாதிபோத:
ஸ்வதந்த்ரதா நித்ய மலுப்த சக்தி: ।
அனந்த சக்திஶ்ச விபோர்விதிக்ஞா:
ஷடாஹுரங்கானி மஹேச்வரஸ்ய ।"

என்பது பதிலக்ஷணம். பரமேச்வரானானவர் ஸர்வக்ஞர், நித்யர், பாச மல பந்தம் இல்லாதவர். சித்ஸ்வரூபர். அப்படிப்பட்ட ஸர்வக்ஞத்வாதி குணகணங்களோடு கூடிய பரமாத்மாவை பூஜை செய்ய வருகின்ற ஜீவான்மாவானது அசித்துகிஞ்சிக்ஞன். மல பாசங்களினால் கட்டுண்டு சம்ஸார சாகரத்தில் உழலும் பாஞ்ச பௌதிக சரீரமுடையவனாக இருக்கின்றது.

"பசுர் நித்யோமூர்த்த: அஜ்ஞ:
நிஷ்க்ரிய: நிர்குண: அப்ரபு: ।
வ்யாபீ மாயோதராந்தஸ்த:
போகோபாய விசிந்தக: ..."

என்பது கிரணாகம ஜீவான்ம லக்ஷண வாக்யம்.

அனாதி மல முக்தமான இறைவனை அனாதி மல பத்தனான ஜீவான்மாவானது பூஜை செய்யப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புகும்போது ...

"சிவீபூத: சிவம் யஜேத் ।"

"நாருத்ரோ ருத்ரமர்ச்சயேத் ।"

"வர்ம கர்பே சிவீபூய பஹிரந்த: சிவம் யஜேத்"

"உத்ஸ்ருஜ்ய ப்ராக்ருதம் பாவம்
சிவோऽஹமிதி பாவயேத் ।
யவந்ந தத்ஸமோ ஜாத:
தாவந்நாராதநே க்ஷம: ॥"

என்னும் வாக்கியங்களினால் ஜீவான்மாக்கள் தன்னையே சிவமயமாக ஆக்கிக்கொண்டு சிவோஹம்-பாவனையோடுதான் பூஜைசெய்யமுடியும் என்றாகின்றது.

அவ்வாறு தன்னையே சிவமயமாக ஆக்கிக் கொள்வதற்காக, யோகமார்க்கத்தினால், ப்ராணாயாமம் முதலானவற்றினால் பாவனையால் செய்யப்படும் சரீர சம்ஸ்காரமே பூதசுத்தியாகும்.

"ப்ராரப்தம் போகதோ நச்யேத்
ஸஞ்சிதம் ஹந்தி தீக்ஷயா"

என்றபடி நிர்வாண தீக்ஷையினால் ஆத்மாக்களுடைய ஸஞ்சித கர்மாவானது அழிந்து, ப்ராரப்தகர்மா மட்டும் எஞ்சியிருக்கின்றது. ப்ராரப்த கர்மாவானது அனுபவிக்காமல் தொலையாது. நிர்வாண தீக்ஷையினால் பரிசுத்தமான ஆன்மாவாக இருந்தாலும் ப்ராரப்த கர்மாவை அனுபவித்துக் கொண்டிருப்பதால் ஒவ்வொரு நாளும் பூஜை செய்யும் சமயத்தில் பூதசுத்தியைச் செய்து சிவமயமாக ஆக்கிக்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. ஆகவேதான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"தேஹப்ராரப்த ஸம்யோகாத் பூதசுத்திர் திநேதிநே" என்றும்,

"மாதாபித்ரு மலோத்பூதே
தேஹே ஸ்தாதும் நயுஜ்யதே
தஸ்மாந் மந்த்ரமய: காய:
க்ரியதே ப்ரதிவாஸரம்"

என்றும் சொல்லியிருக்கின்றது.

நமது சரீரமானது ஸூக்ஷ்மம் ஸ்தூலம் என்று இருவகைப்படுவதால் பூதசுத்தியானது ஸூக்ஷ்ம தேஹசுத்தி ஸ்தூல தேஹசுத்தி என்று இருவகையாக ஆகின்றது. முப்பத்தாறு தத்வக் கூட்டங்களினால் ஆனது ஸூக்ஷ்ம தேஹம். ஐந்து பூத தத்வங்க்ளினால் ஆனது ஸ்தூல தேஹம். இந்த இருவகையான சரீரத்தையும் எப்படி சுத்தமானதாக ஆக்கி மந்த்ரமயமாகச் செய்வது? மற்ற வஸ்துக்களைப் போலத் தண்ணீரைக் கொண்டு அலம்புவதால் சுத்தம் செய்ய முடியாது. ஸூக்ஷ்ம தேஹத்தில் உள்ள முப்பத்தாறு தத்வங்களும் ஒன்றுக்குள் ஒன்று ஒடுங்கி லயமடைந்ததாக பாவிப்பது தான் ஸூக்ஷ்ம தேஹசுத்தி. பஞ்சபூதங்களின் குணங்களையெல்லாம் விட்டு எதிரிடையான சத்ருபாவத்துடன் கூடிய பூதமாக ஆனதாக பாவித்து, பூததோஷங்களை எல்லாம் கால் கட்டைவிரலிருந்து உண்டாகும் அக்னியினால் எரித்து அம்ருதத்தினாலே நனைப்பதாக பாவிப்பது தான் ஸ்தூல தேஹசுத்தியாகும்.

விஷம் ஏறிய உடலிலிருந்து விஷங்களைப் போக்குவதற்காக கருடனை த்யானம் செய்வதுபோல், ஸூக்ஷ்ம தேஹ, ஸ்தூல தேஹ தத்வங்கள் ஒடுங்குவதாக பாவிப்பது தான் பூதசுத்தியாகும். கருடத்யானம் செய்தால் எவ்வாறு விஷங்கள் நீங்குகின்றனவோ அதுபோல ஸூக்ஷ்ம தேஹ, ஸ்தூல தேஹ தத்துவங்களை எல்லாம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

லயமடைந்ததாக பாவித்தலே கர்மபந்தம் நீங்கக் காரணமாக ஆகின்றது.

அகோர சிவசார்ய பத்ததியில் உள்ள பூதசுத்தி ப்ரயோகத்தைத்தான் நாமனைவரும் பரவலாக அனுஷ்டித்து வருகின்றோம், அந்த ப்ரயோக முறையைக் கொஞ்சம் பார்க்கலாம்.

கரந்யாசத்தை மட்டும் செய்துகொண்டு பூதசுத்தியைத் தொடங்க வேண்டும். அங்க ந்யாஸத்தையும் சேர்த்து செய்தோமானால் பிறகு கால் கட்டை விரலிலிருந்து உண்டாகும் அக்னியினால் தேஹத்தை எரிக்கும்போது அங்க-ந்யஸ்த மந்த்ரங்களுக்கும் சேர்த்து தாஹம் (தகனம், எரிக்கப்படுதல்) உண்டாகும். அதைத் தவிர்க்கவே அங்க ந்யாசமில்லாமல் கர ந்யாசத்தை மட்டும் செய்து கொள்ள வேண்டும். மேலும் அவ்வாறு தேஹத்தை எரிக்கும்போது தேஹத்தில் வ்யாப்தமாக உள்ள ஆன்மாவை ரக்ஷணம் செய்ய வேண்டியது அவசியமாக ஆகின்றது. ஆகவே அந்த ஆன்மாவை எங்கு வைப்பது? எப்படிக் கொண்டு செல்வது? நாத ஸ்வரூபமான ஆத்மாவை த்வாதசாந்தத்தில் இருக்கும் பரசிவனோடு சேர்த்து பூதசுத்தியான பிறகு மறுபடியும் சிவமயமான ஆன்மாவை ஹ்ருதய கமலத்திலே சேர்ப்பிக்க வேண்டும் என்பது அகோர சிவாசார்ய பத்ததி.

ஜீவனை ரக்ஷிக்கும் முறையானது வேறுவிதமாகவும் சிவார்ச்சனா சந்திரிகையில் சொல்லப்பட்டிருக்கின்றது. த்வாதசாந்தம் வரையில் ஜீவனைக் கொண்டு சென்று ஹ்ருதய கமலத்திலே ஸூர்ய ஸோமாக்னி மண்டலங்களையும் சக்தி மண்டலத்தையும் நியாசம் செய்து, அதற்கு மேல் "ஓம் ஹாம் ஹம் ஹாம் ஆத்மநே நம:" என்ற மந்திரத்தினால் நட்சத்திரம் போல் ஜ்வலிக்கின்ற ஆத்மாவை வைத்து, அதற்கு மேலாக சக்தி மண்டலம், அக்னி மண்டலம், ஸோம மண்டலம்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸூர்ய மண்டலங்களையும் நியாசம் செய்ய வேண்டும் என்றும் சொல்கின்றது. இதனால் ஆன்மாவிற்கு மேல்புறமும் கீழ்புறமும் இருக்கின்ற சக்தி மண்டலத்திலிருந்து பெருகுகின்ற அம்ருத தாரையினால் நனைந்ததாக பாவிக்கவேண்டும். அவ்வாறு அம்ருத தாரையினால் நனைந்ததாக வைத்து, ஜீவனை தேஹ தாஹத்திலிருந்து ரக்ஷிக்கவேண்டும் என்றும் சொல்லியிருக்கின்றது.

இவ்வாறு ஆன்மாவானது த்வாதசாந்தம் வரையில் மேலே சென்று, பிறகு கீழே திரும்புவதற்கு இருப்பிடமாக அமைந்திருப்பது ஸுஷும்நா நாடீ. ஆகவே ஸுஷும்நா நாடியை தியானிக்கும் முறையை அகோரசிவாசார்ய பத்ததி கூறுகின்றது.

"வாம நாஸா புடே யா து இடா ஸாபரிகீர்த்திதா
தக்ஷிணே பிங்களா ஜ்ஞேயா சுஷும்நா மத்யத: ஸ்திதா"

என்பதால் நமது சரீரத்தின் நடுவில் ஸுஷும்நா நாடியும், இடது பாகத்தில் இடா நாடியும்,, வலது பாகத்தில் பிங்களா நாடியும் உள்ளன என்று தெரிகிறது. அந்த ஸுஷும்நா நாடி எப்படி இருக்கும் எனில், கால் கட்டைவிரல் முதல் மூலாதாரம் வரை இரண்டாகவும், அதற்கு மேல் ப்ரம்மரந்திரம் வரை ஒன்றாகவும் இருக்கும். மேலும் ஸுஷும்நா நாடி இருதயம், கண்டம், தாலு (அண்ணம்), ப்ரு-மத்யம், ப்ரம்மரந்திரம் என்னும் இந்த ஐந்து ஸ்தானங்களில் இடை-பிங்களை நாடிகளோடு பின்னப்பட்டதாக இருக்கும். மேலும், கீழ்நோக்கிய ஐந்து தாமரை மொக்குகளை உடையதாகவும், தாமரைத் தண்டில் உள்ளது போன்று ஓட்டைகள் நிறைந்ததாகவும் இருக்கும். இவ்வாறு ஸுஷும்நா நாடியை தியானித்து அந்த ஸுஷும்நா நாடியின் உள்ளும் புறமும் அம்ருதத்தை வர்ஷித்துக் கொண்டிருக்கின்ற ஸூக்ஷ்ம தேஹத்தின், அதிஷ்டாத்ரியாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
விளங்குகின்ற குண்டலினீ சக்தியை தியானிக்க வேண்டும். அந்த சக்தியின் நடுவில் *ஹௌம்*காரம் என்னும் மந்த்ரபீஜம், அக்னிபோல் ஜ்வலிப்பதாக சிந்திக்க வேண்டும். பூரகத்தையும் கும்பகத்தையும் செய்து, கும்பக வாயுவை த்வாதசாந்தம் வரையில் மேலே செலுத்தும்போது *ஹௌம்பட்* என்னும் மந்திரத்தை இடைவிடாது உச்சரிப்பதாலே ஹ்ருதயாதி ஸ்தானங்களில் கீழ்முகமாக இருக்கின்ற தாமரை மொட்டுக்கள் மேல் நோக்கியதாகவும் மலர்ந்ததாகவும் ஆகின்றன. பிறகு ரேசகம் செய்ய வேண்டும்.

பிறகு ஜீவனை மேலே த்வாதசாந்தத்திற்குக் கொண்டு செல்லும் முறை :- மறுபடி பூரகத்தினால் "ஓம் ஹௌம் ஹாம் ஹம் ஹாம் ஹௌம் ஆத்மநே நம:" என்று நட்சத்திரம் போல் பிரகாசிக்கின்ற ஆத்மாவை புர்யஷ்டக ரூபமாகவுள்ள ப்ருதிவ்யாதி கலாதத்வம் வரையில் உள்ள ஸௌக்ஷ்ம தேஹ தத்வங்களை எல்லாம் விட்டுவிட்டுத் தனியாகவும், பிந்து ஸ்வருபமாகவும் உள்ளதாக பாவிக்க வேண்டும். ஆத்ம மந்த்ரத்தைச் சொல்லி கும்பக வாயுவினால் மேலே செலுத்தும்போது, ஹ்ருதய கமலத்தில் ப்ரஹ்மாவையும், கண்ட பாகத்தில் விஷ்ணுவையும், தாலு பாகத்தில் ருத்ரனையும், ப்ரூ-மத்யத்தில் மஹேச்வரனையும், ப்ரம்மரந்தரத்தில் சதாசிவனையும் விட்டு, பீஜரூபமான நிர்மலமான ஆத்மாவை த்வாதசாந்தத்தில் பரசிவனோடு லயமடையச் செய்ய வேண்டும்.

"வஸுதாத்யஸ் தத்வகண: ப்ரதிபும் நியத: கலாந்தோயம் பர்யடதி கர்மவசத: புவநஜ தேஹேஷ்வயம் ஸர்வேஷு" என்ற தத்வசங்கிரஹ வாக்யப்படி, ப்ருதிவீ முதல் கலை வரையில் உள்ள தத்வ சமுஹத்தினால் ஆனதாக ஸௌக்ஷ்ம தேஹம் உள்ளது. இதுதான் புர்யஷ்டகம் எனவும் அழைக்கப்படுகிறது. தத்வங்களை எல்லாம் விட்டு,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புர்யஷ்டக தேஹமில்லாமல் தனியாகச் செல்லும் ஜீவன் நாதஸ்வரூபமாக இருக்கும். மறுபடி ஜீவன் ப்ராரப்த கர்மாக்களை அனுபவிக்க வேண்டும் என்பதற்காகத்தான் ஜீவனை பரசிவனிடத்திலே கொண்டு சேர்க்கின்றோம் என்பதை "யோஜநம் தேசிக: குர்யாத் ரக்ஷார்த்தம் போக்ய கர்மண: , அதிகாரவசாத் பூய: தேஹித்வம் பரதிபத்யதே" என்ற காமிகாகம வசனத்தால் அறியலாம்.

கந்தாதி தன்மாத்ரைகளில் இருந்து உண்டானவைகள் ப்ருதிவ்யாதி தத்வங்கள். ஆகவே பிருதிவ்யாதி தத்வங்கள் தன்மாத்ரையில் ஒடுங்கும். தன்மாத்ரைகள் தாமஸா-ஹங்காரத்தில் ஓடுங்கும் கர்மேந்த்ரியங்கள் ராஜஸா-ஹங்காரத்தில் ஒடுங்கும். ஜ்ஞாநேந்திரியங்களும் மனஸ்-தத்வமும் ஸாத்விகாஹங்காரத்தில் ஒடுங்கும். அஹங்கார தத்வம் புத்தி தத்வத்திலும், புத்தி தத்வம் குண தத்வத்திலும் ஒடுங்கும். குண தத்வம் பிரகிருதி தத்வத்தில் ஒடுங்கும். ப்ரகிருதி தத்வம், ராக தத்வம், வித்யா தத்வம் இவைகள் கலா தத்வத்தில் ஒடுங்கும். புருஷ தத்வம், கால தத்வம், நியதி தத்வம், கலா தத்வம் - இவைகள் மாயையில் ஒடுங்கும். சுத்த வித்யா தத்வம் ஈச்வர தத்வத்திலும், ஈச்வர தத்வம் ஸதாசிவ தத்வதிலும், சதாசிவ தத்வம் சக்தி தத்வத்திலும், சக்தி தத்வம் சிவ தத்வத்திலும் ஒடுங்கும். சிவ தத்வமும் நிர்விகார ரூபமான பிந்துவில் ஒடுங்கும். இவ்வாறு தத்வங்களை லயமடைந்ததாக பாவிப்பதே ஸூக்ஷ்ம தேஹ சுத்தியாகும்.

பிராணாயாமத்தினால் ஐந்து பூதங்களின் குணங்களை எல்லாம் விட்டு, அந்தந்த பூதங்களின் எதிரிடையான பூதத்தன்மை வாய்ந்ததாகச் சிந்திப்பது ஸ்தூல தேஹ சுத்தியாகும். "ப்ருத்வீ வாயூ பயோவஹ்நீ த்வௌ த்வௌ ஸோத்யௌ பரஸ்பரம். ஆகாசஞ்சாவிரோதேன யதாஸோத்யம் ததுச்யதே" என்று ஸோமசம்பு பத்ததி கூறும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ப்ருத்வீ தத்வ சோதனத்தில் பிருதிவியுடைய ஸ்வபாவம் வர்ணம் மந்த்ரம் கலை காரணேச்வரன் இவர்களை எல்லாம் சிந்தித்து, மேலே வாயுவை கொண்டு செல்கின்றதாக உள்ள உத்காதத்தினால் பிருதிவியினுடைய கந்தாதி குணங்களை எல்லாம் விட்டு, பிருதிவிக்கு எதிரிடையான வாயுவினால் ஆக்கிரமிக்கப்பட்டதாகவும் வாயுஸ்வபாவத்தை அடைந்ததாகவும் பாவிக்க வேண்டும். வாயு தத்வ சோதனத்தில் கலாமந்திரத்தை இருதரம் உச்சரித்து, வாயுவின் குணங்களை விட்டு, வாயுவிற்கு எதிரிடையான ப்ருதிவினால் ஆக்கிரமிக்கப்பட்டதாகவும் ப்ருதிவீ ரூபமானதாகவும் சிந்திக்க வேண்டும். இவ்வாறு ஜல பூதமும் அக்னி பூதமும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட பூதங்கள். ஆகாச பூதமானது எல்லா பூதங்களுக்கும் இடத்தைத் தருவது; மற்ற பூதங்களுக்கு எதிரிடையானது அல்ல. ஆகவே ஆகாசத்தின் குணமான சப்த குணத்தை விட்டு விட்டு, அநித்யத்வாதியான தனது ஸ்வரூபத்தை விட்டு விட்டு, நித்யத்வாதி குணத்தோடு கூடிய பரமாகார ஸ்வரூபமாக, பிந்து ஸ்வரூபம் அடைந்ததாக பாவிக்க வேண்டும். இது ஸ்தூல தேஹ சுத்தியாகும்.

இந்த ஸ்தூல தேஹ சுத்தியில் "உத்காத" என்னும் சப்தம் வருகின்றது. அதன் அர்த்தம் "ஊர்த்வம் காத: உத்காத: உத்தந்யதே அநேந" என்ற வ்யுத்பத்தியினால் அறியலாம். எனவே, கும்பக வாயுவை மேலே த்வாதசாந்தம் வரை செலுத்துவதுதான் உத்காதம்.

"ஸந்நிரோதே க்ருதே ஸம்யக் ஊர்த்வம் வாயு: ப்ரவர்த்ததே । ஸ உத்காத இதி க்யாத: ஸ்வேச்சயாத் கநீயஸ ।" என்று ஸர்வஜ்ஞானோத்தரம் கூறுவதைக் காணலாம். ஆகவே அந்தந்த பூதகுணங்களை விடவேண்டும் என்பதற்காக அந்தந்த கலா மந்திரங்களைச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சொல்லிக்கொண்டு கும்பக வாயுவை த்வாதசாந்தம் வரையில் செலுத்துவதுதான் உத்காத சப்தத்தினால் குறிக்கப் படுகின்றது. ப்ருதிவீ தத்வத்திற்கு 15 பிராணாயாமமும், அப்பு தத்வத்திற்கு 12-ம் அக்னி தத்வத்திற்கு 9-ம், வாயு தத்வத்திற்கு 6-ம், ஆகாச தத்வத்திற்கு மூன்றுமாக பிராணாயாமக் கணக்கு சொல்லப் பட்டிருக்கின்றது.

இவ்வாறு ஸ்தூல தேஹ சுத்தியை முடித்து, கால் கட்டை விரலிலிருந்து உண்டான அக்னியினால் சரீரத்தின் பூத தோஷங்களை எரித்து, த்வாதசாந்தத்தில் கீழ்நோக்கிய தாமரையிலிருந்து பெருகுகின்ற அம்ருதத்தினால் நனைந்ததாகச் செய்ய வேண்டும். ஸூக்ஷ்ம, ஸ்தூல சரீர ரூபமானது, பாசங்களிலிருந்து விடுபட்டதாகப் பாவித்து, த்வாதசாந்தத்தில் இருந்து பெருகுகின்ற அம்ருத தாரையானது, சரீரத்தில் உள்ள 72000 நாடிகளில் புகுந்ததாக பாவித்து, ஸூக்ஷ்ம தேஹத்தையும் ஸ்தூல தேஹத்தையும் அலம்பவேண்டும். ஹ்ருதய கமலத்தில் சுத்த வித்யா ஸ்வரூபமாக, ப்ரணவ ரூபமான ஆஸனம் கல்பித்து, அதில் ஸூக்ஷ்ம தேஹ ரூபமான புர்யஷ்டகம் ப்ரணவத்தினால் வந்ததாக பாவித்து, அதில் த்வாதசாந்தத்தில் இருக்கும் ஜீவான்மாவை, சதாசிவனிடமிருந்து ஆரம்பித்து ஸ்ருஷ்டி மார்க்கமாகக் கொண்டு வந்து, ஹ்ருதய கமலத்தில் சேர்க்க வேண்டும். வௌஷடந்த சக்தி மந்திரத்தை உச்சரித்து, அம்ருத ப்ரவாஹத்தினால் அபிஷேகம் செய்ததாக பாவிக்க வேண்டும். பிறகு அங்க ந்யாசம், மந்த்ர ந்யாசங்கள் எல்லாம் செய்ய வேண்டும் என்பது அகோர சிவாசார்ய பத்ததியாகும்.

ஓரே பிராணாயாமத்தினாலேயே பூதசுத்தியைச் செய்யும் முறையும் உள்ளது. தனது சரீரத்தை ஆலமரமாக பாவிக்க வேண்டும். இந்தச் சரீர மரத்தில், லோகத்தில் இருப்பது போன்று கீழே வேரும் மேலே கிளைகளுமாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இருக்காது. மேலே வேரும் கீழே கிளைகளுமாக இருக்கும்! "ஊர்த்வ மூலமத: சாகம்" என்று வேதத்திலேயும் வருகிறது. மேலே இருக்கும் மாயையிலிருந்து இவைகள் தோன்றியதால், மேலே வேரும் கீழே கிளைகளுமாக இருக்கின்ற ஆல மர ரூபமாகத் தனது சரீரத்தை பாவிக்க வேண்டும் எனச் சொல்லியிருக்கின்றது. தனது முழங்காலைச் சுற்றி வேகமாகவும் இல்லாமல் நிதானமாகவும் இல்லாமல் சிட்டிகை போடும் காலம் ஒரு மாத்திரை எனப்படுகின்றது. "ஜாநுமண்டல மாவர்த்ய மாத்ரா ஸ்யாத் த்வாதச க்ரமாத் । தாபி: த்வாதச மாத்ராபி: ப்ராணாயாம: கநீயஸ: ।" என்று ஞான ரத்னாவளி கூறுகின்றது. ஆக, பூரகத்திற்கு 12 மாத்திரை காலமும், கும்பகத்திற்கு பன்னிரண்டு மாத்திரை காலமும், ரேசகத்திற்கு 12 மாத்திரை காலமுமாக ப்ராணாயாமத்தின் கால அளவை அறிந்து, பூரகாதிகளின் முற்பாதி-பிற்பாதியாகப் பிரித்து அறிந்து செய்யப்படுவது இந்த பூதசுத்தியாகும். பூரகத்தின் முற்பாதியினால், ப்ருதிவீ பூதத்தின் ஐந்து குணங்கள் அழியும் பொருட்டு, ஐந்து முறை நிவ்ருத்தி கலா மந்த்ரோச்சாரணம் செய்து, ஸ்தூல தேஹ வ்ருக்ஷத்தின் பத்ரங்கள் (இலைகள்) நீங்கினதாகவும், நிச்சலமானமாக (அசைவற்று) இருப்பதாகவும் தியானிக்க வேண்டும். பூரகத்தின் பிற்பாதியினால், ஜல பூதத்தின் நான்கு குணங்களும் அழியும் பொருட்டு, நான்கு முறை ப்ரதிஷ்டாகலா மந்த்ரோச்சாரணம் செய்து, ஸ்தூல தேஹ வ்ருக்ஷத்தை நிழலோடு கூடியதாகவும் பத்ர புஷ்பங்களோடு கூடியதாகவும் சிந்திக்க வேண்டும். கும்பகத்தின் முற்பாதி பிற்பாதி இவற்றினால் அக்னி பூதத்தின் மூன்று குணங்களும் அழியும் பொருட்டு, மூன்று முறை வித்யாகலா மந்த்ரோச்சாரணம் செய்து, ஸ்தூல தேஹ வ்ருக்ஷத்தை இடது கால் கட்டை விரலிலிருந்து உண்டான காலாக்னியினால் காய்ந்ததாகவும், பத்ர-புஷ்ப-பலங்கள் இல்லாததாகவும், எறிந்ததாகவும் பாவிக்க வேண்டும்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

ரேசகத்தின் முற்பாதியினால் வாயு பூதத்தின் இரு குணங்கள் அழியும் பொருட்டு, இரண்டு முறை சாந்தி கலா மந்த்ரோச்சாரணம் செய்து, ஸ்தூல தேஹ வ்ருக்ஷத்தை சாம்பலாக ஆனதாகவும், பத்து திக்கிலும் பறந்து போனதாகவும் பாவிக்க வேண்டும். ரேசகத்தின் பிற்பாதியினால் ஆகாச பூதத்தின் ஒரே குணமும் அழியும் பொருட்டு, சாந்த்யதீத கலா மந்த்ரத்தை ஒரு முறை உச்சாரணம் செய்து, சுத்த ஸ்படிகம் போல நிர்மலமான ஆகாசமாக, பரமாகாசமாக பாவிக்க வேண்டும். இது ஒரே ப்ராணாயாமத்தினால் ஸ்தூல தேஹ சுத்தியைச் செய்யும் முறையாகும். இந்த பூதசுத்தியை "ஸ்வந்தேஹம் பூதபீஜம், கும்பாபூரக ரேசகார்த யுகளை:" என்னும் ச்லோகங்களினால் சித்தாந்த சாராவளி விளக்குகின்றது.

இந்த ஸ்தூல தேஹ சுத்தியானது பாவனா மாத்ரத்தினால் செய்யப்படுவதினாலே, பாவனையின் வேறுபாடுகளினால் பலவிதமாக இருக்கின்றது. ப்ருதிவியானது ஜலத்திலும், ஜலமானது அக்னியிலும், அக்னியானது வாயுவிலும், வாயுவானது ஆகாசத்திலும் அடங்குவதாக பாவிப்பது ஒருமுறை. "ப்ருத்வீமப்ஸு ப்ரவிலாபயாமி" என்று வருகிறது. "ஆகாசாத் வாயு: வாயோரக்னி: அக்னேராப; அத்ப்ய; ப்ருதிவீ । ப்ருதிவ்யா ஓஷதய: ஓஷதீப்யோ அன்னம் அன்னாத் புருஷ:" என்று வேதத்திலும் ஸ்ருஷ்டி க்ரமம் சொல்லப்பட்டிருப்பதைக் காணலாம். ஆகவே, ஸம்ஹார ரூபமாக எதிலிருந்து எது தோன்றியதோ அதை அதில் அடக்குவதாக அமைந்திருப்பது இந்த பூதசுத்தி. இது "ஸ்வ காரணேஷு ப்ருதிவ்யாதி ப்ரவிலாபன ரூபா பூதசுத்தி" என்று பெயரை அடைகின்றது.

பூதகுணங்களை விடுவதால் பாவிக்கின்ற பூதசுத்தி குணக்ஷபணருபா என்று அழைக்கப்படுகின்றது. இந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
குணக்ஷபணரூபா பூதசுத்தியானது, ப்ரத்யேக சோதனரூபா பரஸ்பர சோதனரூபா என்று இருவிதமாகின்றது. பாதத்திலிருந்து முழங்கால் வரை ப்ருதிவீ தத்வத்தையும், முழங்கால் முதல் நாபி வரை ஜல தத்வத்தையும், நாபி முதல் கண்டம் வரை அக்னி தத்வத்தையும், கண்டத்திலிருந்து ப்ரு-மத்யம் வரை வாயு தத்வத்தையும், ப்ரு-மத்யம் முதல் ப்ரம்மரந்திரம் வரை ஆகாசத்தையும், அந்தந்த பூதங்களின் வர்ணம் மண்டலம் ஸ்வபாவம், மந்த்ரம் கலை காரணேச்வரர்களைத் தனித்தனியாக த்யானித்து, அந்தந்த பூதகுணங்கள் போனதாக பாவிப்பது ப்ரத்யேக சோதனரூபா எனப்படுகின்றது.

பரஸ்பர சோதனரூபா பூதசுத்தியின் விசேஷம் யாதெனில், ப்ருதிவ்யாதி தத்வங்களை பாதத்திலிருந்து ப்ரம்மரந்திரம் வரையில் வ்யாபித்ததாக பாவிப்பதாகும். ப்ருதிவ்யாதி தத்வங்களை பாதம் முதற்கொண்டு ப்ரம்மரந்திரம் வரையில் வ்யாபித்ததாக பாவித்து, அந்தந்த பூதங்களின் வர்ணம் மண்டலம் ஸ்வபாவம் மந்த்ரம் கலை காரணேச்வரர்களை த்யானம் செய்து, கலா மந்த்ரோச்சாரணத்தினால் பூதங்களின் குணங்களை விட்டு, அந்தந்த பூதங்கள் தனக்கு எதிரிடையான பூதத்தோடு கலந்து, முரண்பட்ட பூதத்தின் ஸ்வபாவத்தோடு கூடியுள்ளவையாக பாவனை செய்வது பரஸ்பர சோதனரூபா பூதசுத்தியாகும். இந்த பரஸ்பர சோதனரூபமான பூதசுத்தியைத்தான் அகோர சிவாசார்யார் எடுத்திருக்கின்றார்.

இவ்வாறு பூதசுத்தியைச் செய்த பிறகுதான் மந்த்ர ந்யாஸம் செய்து, தன்னை மந்த்ரமயமாக ஆக்கிக்கொண்டு, ஹ்ருதய கமலத்தில் சிவனை பூஜை செய்யவேண்டும். நாபி குண்டத்தில் ஹோமத்தையும் ப்ரு-மத்தியில் சமாதி நிலையிலும் இருந்து அந்தர்யாகத்தையும் முடித்த பிறகுதான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பஹிர்பூஜை செய்ய வேண்டும். "அந்தர்யாகம் புராக்ருத்வா பாஹ்ய பூஜாமதாசரேத் । ஜ்யோதிர்லிங்கம் ஹ்ருதிஸ்தம் யத்ததேவாப்யர்ச்யதே பஹி: । அதஸ்-தஸ்மாத் புராகார்யம் அந்தர்யாகமிஹோச்யதே ।" என்ற வாக்கியங்களினால் அறியலாம்.

ஆகவே பஹி: பூஜை செய்வதற்கு முன்பாக அந்தர்யாகம் செய்ய வேண்டியது அவச்யமானதாகின்றது. அந்தர்யாகம், பஹி: பூஜை செய்ய யோக்யதாம்சம் உண்டாக வேண்டுமானால் முதலில் பூதசுத்தியை செய்ய வேண்டியதாகின்றது. ஆகவேதான் "வர்மகர்பே சிவீபூய பஹிரந்த: சிவம் யஜேத்" என்று வருகிறது.

ஆகவே இறைவனை பூஜை செய்ய, இறைவனாகவே தன்னை பாவனை செய்துகொள்ள வேண்டியது முக்கியம். இறைவனாக தன்னை ஆக்கிக் கொள்ள, தேஹத்தின் அந்தந்த ஸ்தானங்களில் அஷ்டத்ரிம்சத் கலா மந்த்ரங்களை ந்யாசம் செய்ய வேண்டியது அவச்யமாகின்றது. தேஹத்தில் மந்த்ரந்யாசம் செய்ய, பாஞ்சபௌதிகமான இந்த சரீரத்தை மந்திரங்களினாலும் ப்ராணாயாமம் முதலானவற்றினாலும், யோக மார்க்கமாகவும், பாவனையினாலும் சுத்தம் செய்து கொள்வதே பூதசுத்தி என்று சொல்லி,

நஹி ஸலில விஶேஷை: கேவலம் க்ஷாளநாத்யை:
ப்ரபவதி பரிசுத்தி: யந்மலிஷ்டம் சரீரம் ।
த்விவிதமிதிஹ ஸத்பி: ஸாந்தரங்காத்ம சுத்தி:
ஸவிதி ஸமுபதிஷ்டாம் தாம் பஜேந் நித்யசோபி ॥

என்ற ஈசான சிவ குருதேவ பத்ததியின் சுலோகத்தைச் சொல்லி நிறைவு செய்கின்றேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3

ஆத்மார்த்த சிவபூஜை

கட்டுரை ஆசிரியர்: சிவாகமஞான சாகரம், சாக்த ரத்னம், கயிலை மாமணி, திருக்கோலக்கா சிவஸ்ரீ. இராமநாத சிவாச்சாரியார். தலைமை ஆசிரியர், வேதசிவாகம பாடசாலை, சீர்காழி-609110. ☎ 272116.

ஸ்ரீ குருநாதருக்கும் மாணாக்கர்களுக்குமிடையே உபமன்யு முனிவர் ஆச்ரமத்தில் நடைபெற்ற உரையாடல்:

மாணவர்கள் "குரு ப்ரஹ்மா குருர்விஷ்ணு: குருர்தேவோ மஹேஶ்வர: । குரு: ஸாக்ஷாத் பரப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம: ॥ அஜ்ஞான திமிராந்தஸ்ய ஞானாஜ்ஞாந சலாகயா । சக்ஷு: உன்மீலிதம் யேன தஸ்மை ஸ்ரீ குரவே நம: ॥" - என்று ஸ்ரீ குருநாதரை வணங்கி, நமஸ்கரித்து, கேட்கலாயினர் :-

மாணவர்கள்; குருநாதா எங்கள் மனதில் எழும் சந்தேகங்களை போக்கி அருளாசி வழங்கிட வேணுமாய் மிகப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

குருநாதர்: அப்படியே ஆகட்டும்.

மாணவர்கள்; எல்லா நலங்களையும் தரும் ஆத்மார்த்த சிவபூஜை, எப்போது, யாரால், எங்கு துவங்கப்பட்டது என்பதை அருள வேண்டுகிறோம்.

குருநாதர்: திருக்கயிலாயத்தில் பார்வதி பரமேச்வராள் திருக்கல்யாணம் நடந்த சமயம், பார்வதி பரமேசுவரனிடம் "சுவாமி தங்களுக்கு மிக விருப்பமானதை செய்திட ஆசைப்படுகிறேன்" என்றிட, இறைவன் தனக்கு விருப்பமானது பூசனை எனக் கூறினார்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

எண்ணிலா ஆகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும்
உண்மையாவது பூசனை என உரைத்தருள
அண்ணலார்தமை அர்ச்சனைபுரிய ஆதரித்தாள்
பெண்ணில் நல்லவளாகிய பெருந்தவக்கொழுந்து.-*சேக்கிழார்.*

தேவி, இறைவனிடம் தங்களுக்கு மிக விருப்பமான பூஜையை எங்கு எப்படி செய்ய வேணுமென்பதை உபதேசிக்க வேணுமென வணங்கி கேட்டாள். இறைவன் பூலோகத்தில் (நகரேஷு காஞ்சி) காஞ்சிபுரத்தில் செய்திடக் கூறி, வேத சிவாகமங்களையும் உபதேசித்தார். "ஆகதம் சிவவக்த்ரேப்ய: கதஞ்ச கிரிஜா முகே" என்பது ஆகமம். அங்கயர்க்கண்ணியான தேவிக்கு வேதமும் பொருள்களும் அருளினார் என்பது ஞானசம்பந்தர் வாக்கு. அன்று முதல் இந்த சிவபூஜை தொடர்ந்து, பஞ்சரிஷி கோத்திரத்தில் சிவ சிருஷ்டியாகி, சிவனாலே தீக்ஷை செய்விக்கப்பெற்ற ஆதி சைவர்களாகிய சிவாச்சாரியர்களால் செய்து வரப்படுகின்றது.

மாணவர்கள்; நாங்களும் பூஜை செய்யலாமா? அதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும்?

குருநாதர்: சிவதீக்ஷை செய்துக் கொள்ள வேண்டும்.

மாணவர்கள்; தீக்ஷை என்றால் என்ன?

குருநாதர்: தீ: என்றால் கொடுப்பது, க்ஷா என்றால் கெடுப்பது. ஆணவம் முதலான மலங்களை (வினை)களை கெடுத்து (அழித்து), சிவஞானத்தை தரச் செய்வது.

மாணவர்கள்; தீக்ஷை எத்தனை வகை?

குருநாதர்: சமய, விசேஷ, நிர்வாணம் என்று மூன்று தீக்ஷைகள். சமய தீக்ஷை ஏழுவகையாக செய்யப்படும்.

1. நயன தீக்ஷை :- குருவானவர் பரிபக்குவமுள்ள சிஷ்யனை, இறைவனை வேண்டி, தியானத்தால் பக்குவப்பட்ட தன் கண்ணால் நோக்குவது நயன தீக்ஷையாகும்.

2. ஸ்பர்ச தீக்ஷை :- குருவானவர் முப்போதும்

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

திருமேனியைத் தொட்டு பூஜித்த கையால் தொடுவது ஸ்பர்ச தீக்ஷயாகும்.

3. மாநஸ தீக்ஷ :- குருவானவர் சிஷ்யனை மனதினால் ஆசிர்வதிப்பது மாநஸ தீக்ஷயாகும்.

4. வாசக தீக்ஷ :- குருவானவர் வேத சிவாகமங்களையும், மூலமந்திரமாகிய பஞ்சாக்ஷரத்தையும் ஸதா ஓதிய தன் திருவாக்கால் சிஷ்யனுக்கு உபதேசிப்பது வாசக தீக்ஷயாகும்.

5. சாஸ்த்ர தீக்ஷ :- குருவானவர் சிஷ்யர்களுக்கு சாஸ்த்ர கருத்துகளை விளக்கி கூறுவது சாஸ்த்ர தீக்ஷ.

6. யோக தீக்ஷ :- குருவானவர் தன் தவ யோக சாதனை (பூதசுத்தி முதலியன) மூலம் சிஷ்யனை யோக நிலையை கற்பித்து ஞானமடையச் செய்வது யோக தீக்ஷ.

7. ஔத்ரி தீக்ஷ :- இது கிரியாவதி, ஞானவதி என இருவகைப்படும். குண்டம் மண்டலம் முதலியவைகளுடன் செய்வது கிரியாவதி என்றும், குருவானவர் பரிபக்குவமுள்ள சிஷ்யனுக்குக் குண்டம் மண்டலம் தீக்ஷ முறைகளை சிஷ்யனின் தலையில் தன் கையை வைத்து மனதினால் செய்வது (பூசலார் பெற்றதைப் போல) ஞானவதி ஔத்ரி தீக்ஷ எனப்படும்.

மாணவர்கள்; க்ஷணிகலிங்க பூஜை என்பது என்ன? எத்தனை வகை?

குருநாதர்: "ஸிகதம் தண்டுலம் சாந்நம் நதீமிருத் கோமயம் ததா । நவநீதஞ்ச ருத்ராக்ஷம் சந்தணம் கூர்ச்ச மேவ ச । புஷ்பமாலா குளம் பிண்டம் க்ஷணிகம் த்வாதச முச்யதே ।" என்கிறது காரணாகமம்.

(1) ஆற்று மணல் (2) அரிசி லிங்கம் (3) அன்ன லிங்கம் (4) நதி மண் லிங்கம் (5) கோமய லிங்கம் (6) வெண்ணை லிங்கம் (7) ருத்ராக்ஷ லிங்கம் (8) சந்தன லிங்கம் (9) தர்பை கூர்ச்ச லிங்கம் (10) புஷ்ப லிங்கம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(11) வெல்ல லிங்கம் (12) மாவினால் செய்த லிங்கம்.

இந்த பன்னிரெண்டு லிங்கங்களில் குருவானவர் எந்த லிங்கத்தை மனமுவந்து தருகிறரோ அந்த லிங்கமே ஆத்மார்த்த பூஜைக்குகந்தது. மிகுந்த பயனைத் தரவல்லது.

மாணவர்கள்: உடையவர் பூஜை என்பதின் விளக்கத்தை தயவு செய்து விளக்கமாகக் கூற வேண்டுகிறோம்.

குருநாதர்: உடையவர் பூஜை என்பது இருவகைப்படும். ஒன்று உலோகஜம், மற்றொன்று ரத்னஜம். உலோகஜம் என்பது தங்கம், வெள்ளி, தாமிரம், பித்தளை, இரும்பு, வெண்கலம் முதலியவற்றால் ஆன லிங்கங்கள் என்கிறது சிந்திய விசுவாகமம். ரத்னஜம் என்பது நவரத்தினங்களால் ஆனது. இவைகளை வைத்து பூஜிப்பதால் வரும் விசேஷ பலன்கள் பற்றி சிந்திய விசுவாகமம் விரிவாகக் கூறுகிறது.

மாணவர்கள்: பூஜையில் எத்தனை லிங்கம் வைத்து பூஜை செய்யலாம், என்ன பலன், என்பதைக் கூற வேண்டுகிறோம்.

குருநாதர்: "ஏகலிங்கம் ததாமோக்ஷம் வ்யாதிரூபம் த்வயம் பவேத் । லிங்கத்ரயம் குர்யாத் போக மோக்ஷ ப்ரதாயகம் । சதுர்லிங்கந்து யத்ரைவ தத்ர கீர்த்தி ஹாநிதம் । பஞ்சலிங்கமிதி ச்ரேஷ்டம் பஞ்ச பாதக நாசனம் । ஷஷ்டஞ்சேதி மரணம் குர்யாத் ஸப்தமம் வை ருண நாசனம் । அஷ்டமந்து மஹாவ்யாதி அதவா சத்ருவர்த்தனம் । நவலிங்கம் ததா ச்ரேஷ்டம் சிவலோக மஹீயதே ॥" என்று காரணாகமம் கூறுகிறது.

மாணவர்கள்: ஆத்மார்த்த பூஜையை நான்கு வர்ணத்தவர்களும் பூஜை செய்ய உரிமையுண்டா?

குருநாதர்: "விப்ர க்ஷத்ரிய விட் சூத்ரா தீக்ஷிதாச்ச ப்ரவேசகா: ஆத்மார்த்த யஜனம் குர்யாத் நகுர்யாத்து பரார்த்தகம் ।". நான்கு வர்ணத்தவர்களும் ஆத்மார்த்த பூஜையை, தீக்ஷை பெற்றுச் செய்யலாமென மகுடாகமம் கூறுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாணவர்கள்: பெண்கள் ஆத்மார்த்த சிவபூஜை செய்ய ஆகமத்தில் அனுமதி உள்ளதா?

குருநாதர்: நான்கு வர்ண ஸ்திரிகளும் ஆத்மார்த்த சிவபூஜை செய்யலாம். அம்சுமதி ஆகமம் "சாதுர் வர்ணோத்பவ ஸ்திரிணாம் அர்ச்சனந்து விசேஷத: । அன்யத் கர்ம ந குர்வீத யாவந்நாராதித: சிவ: ।" என்று சொல்கிறது.

மாணவர்கள்: ஆசௌச காலத்தில் சிவபூஜை எப்படி செய்யவேண்டும்?

குருநாதர்: "சூதகே ப்ரேதகாசௌசே ஆத்மார்த்த யஜனம் ஸ்ம்ருதம் । பூஜாலோபோ ந கர்தவ்யம் சூதகே ப்ரேதகே க்வசித் । சிவ மந்த்ரேண கர்தவ்யம் ஸ்நானமஸ்திரேண சுத்திதம் । ஆசௌசாவே தத்ர பத்மபத்ரமிவாம்பஸா । பூஜாந்தே ப்ரவிசேச்சேத மாசௌசஞ்ச விசேஷத: । மௌநம் லிங்கார்ச்சனம் குர்யாத் காம்யானுஷ்டாநஹீநகம் । அதவா சூதகே ப்ரேதே நஸ்வயம் லிங்க பூஜனம் । மாநஸஞ்ச யஜேத் தீமான் ஸர்வம் மாநஸ கல்பனம் । தல்லிங்கம் பூஜயித்வாத் குருணா ஸ்வபந்துநா । அந்யேநைவவார்ச்சனம் குர்யாத் அந்தே புஷ்யாஞ்லி த்ரயம் ।" என்று அம்சுமதி ஆகமம் கூறுகிறது.

மாணவர்கள்: பெண்கள் மாதவிடாய் காலத்தில் பூஜை செய்வது எப்படி?

குருநாதர்: "கதம் புஷ்பவதீ நாரீ அர்ச்சனம் குருதே வத । அந்தர்யாகம் ப்ரகர்தவ்யம் தயாபூர்வ தினத்ரயம் । சதுர்தே திவஸே ஸ்நாத்வா கவ்யம் ப்ராச்ய யஜேத்து ஸா ।"

மாணவர்கள்: சிவபூஜையின் பலன் என்ன?

குருநாதர்: "ரூபம் ஸம்பத் தீர்க்கமாயு: ஸுக்ருதம் வித்யா விவேகம் தனம் ஞானம் சௌர்யமுதார மங்களர்ரம் ப்ரௌடாங்கநா ஸங்கமம் அன்னம் வஸ்த்ர ஸுகந்த புஷணதரம் புத்ராதி ஸௌக்யப்ரதம் திவ்யாந்தோளந வாஹநாதி ஸுக்ருதம் போகம் சிவார்ச்சா பலம் ।"

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4

மஹோத்ஸவம் அல்லது ப்ரஹ்மோத்ஸவம்

கட்டுரை ஆசிரியர்: சிவாகமஞானபானு, ஸாஹித்ய சிரோமணி சிவஸ்ரீ. பால. ஸர்வேச்வர குருக்கள் M.A., M.Phil., முதல்வர், ஸ்ரீமத் ஸ்ரீகண்ட சிவாசார்ய வேதசிவாகம வித்யா பீடம், காரைக்கால்.

1. உத்ஸவ பத விசாரம்

உயிர்களின் தோற்றம் அண்டஜம், ஜராயுஜம், ஸ்வேதஜம், உத்பிஜ்ஜம் என்று நான்கு வகைப்படும். இவைகளில் தேவர்கள் மனிதர்கள் முதலிய ஏழு பிறப்புக்கள் உள்ளன. இவை 84 லக்ஷம் யோனி பேதமாய் சொல்லப்படுகிறது.

திருஞானசம்பந்த சுவாமிகள் தனது தேவாரத்தில் -

"உரை சேருமெண்பத்து நான்கு நூறாயிர
யோனிபேத நிரை சேரப்படைத்து அவற்றுள்
உயிருக்குயிராய் அங்கங்கே நின்றான் கோயில்"

என்கிறார். "உயிருக்குயிராய்" என்று சொன்னதினால் அஷ்டமூர்த்தியான பரமேச்வரன் ஆன்மாவையே யஜமான மூர்த்தமாய்க் கோயில் கொண்டு, உயிர்கள் செய்யும் புண்ய பாபங்களுக்கு சமமாக அனைத்துத் தோற்றங்களையும் தோற்றுவிக்கிறான் என்று பொருளாகிறது.

"ஸவ இத்யுச்யதே ஸ்ருஷ்டி: தஜ்ஜ்ஸ்யாத் ஶப்த பாஷிதம் । உத்பூத ஸ்ருஷ்டி-காரித்வாத் உத்ஸவ: கதித: க்ரமாத் ॥" - *பூர்வகாரண ஆகமம்.*

ஸவ: என்பதற்கு progeny என்று பொருள். ப்ரஸவ: என்ற பதத்திற்கு beginning, generating, child birth என்று

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

பொருள் காணப்படுகிறது. எனவே, "தோற்றம்" என்ற பொருளுடைய ப்ரஸவம் என்ற சொல்லை, கர்ப்பத்திலிருந்து குழந்தை வெளிப்படுவதைக் குறிப்பிட நாம் உபயோகிப்பது வழக்கத்தில் உள்ளது. அதைப்போல் ஆலயத்தின் கருவறையிலுள்ள மூலவர் "உத்ஸவ மூர்த்தி" என்ற பெயரில் ஆலயத்திலிருந்து வெளிப்புறத்தில் வீதியுலா வருவதற்கும் "உத்ஸவம்" என்ற பெயர் வழங்குகிறது.

உத் + ஸவ: = உத்ஸவ:

உத் *ஶப்த:* ஜ்ஞாநமித்யுக்தம் ஸர்வகல்யாண காரணம் - *உத்தரகாரணம்.*

இதிலிருந்து உத் என்ற சப்தத்திற்கு ஞானம் என்றும், அதுவே ஸர்வ கல்யாண காரணம் என்றும் விளங்குவதால், உத்ஸவ: என்பது அனைத்து நன்மைகளுக்கும் காரணமான ஞானத்தை வழங்க இறைவன் உலா வருவதைக் குறிப்பதாகச் சொல்லப்படுகிறது.

2. உத்ஸவ வகைகள்

இந்த உத்ஸவமானது நித்யம், நைமித்திகம், காம்யம் என்ற விதத்திலும், நித்யாங்கம் என்ற விதத்திலும் அமைந்துள்ளது. தினந்தோறும் நித்ய பூஜை முடிவில் செய்யப்படுவது நித்யோத்ஸவம். குறித்த மாதத்தில் திதி நக்ஷத்ரம் போன்றவற்றுள் ஒன்றை அந்தமாகக் கொண்டு செய்யப்படும் உத்ஸவம் நைமித்திகம். நம்முடைய விருப்பத்திற்கேற்ப செய்யப்படும் உத்ஸவம் காம்யம். பவித்ரோத்ஸவம் போன்ற உத்ஸவங்கள் நித்யாங்கம் என்றும் கூறப்படுகின்றன. எல்லா உத்ஸவங்களிலும் சிறப்பான உத்ஸவமாக வார்ஷிகோத்ஸவம் (வத்ஸரோத்ஸவம்) விளங்குகிறது. அதுவே மஹோத்வஸம் என்று அழைக்கப் படுகிறது அல்லது ப்ரம்மோத்ஸவம் என்று அழைக்கப் படுகிறது. "மஹ இதி ப்ரஹ்ம" என்ற ப்ரமாணத்தினால் ஐந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாட்களுக்கு மேல் தொடர்ந்து செய்யும் உத்ஸவத்திற்கு மஹோத்ஸவம் அல்லது ப்ரஹ்மோத்ஸவம் என்று பெயர்.

பரமேச்வரன் படைப்பது போலவே காத்தும் கரந்தும் திரோதான சக்தியால் போகங்களை அனுபவிக்கச் செய்தும் அனுக்ரஹம் செய்வதால் உத்ஸவத்தில் பஞ்சக்ருத்யமும் அமைந்துள்ளது. ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார, திரோபாவ, அநுக்ரஹ பஞ்சக்ருத்யங்கள் ஆகிய படைத்தல், காத்தல், அழித்தல். மறைத்தல், அருளல் ஆகிய ஐந்து கார்யங்களும் உத்ஸவத்தில் அமைந்துள்ளது.

ஜீவன்கள் பாசத்தினால் கட்டுண்டு உழல்வதிலிருந்து காக்க, இறைவன், தான் குருமூர்த்தமாய் வந்து சமய, விசேஷ, நிர்வாண தீக்ஷைகளால் பாசங்களை நீக்கி, சிவமாக்கி அருள்கிறான் என்று சைவாகமங்கள் கூறுகின்றன. தீக்ஷை பெறமுடியாத தாவர ஜங்கமங்களுக்கும், தீக்ஷை பெற்றும் சமயாசாரங்களை விட்டவர்களுக்கும், சிவன் திருவடிப் பேறு பெற, சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நான்கு காரியமும் பொருந்திய, சாம்பவம் என்ற தீக்ஷையே மஹோத்ஸவம் எனும் ப்ரஹ்மோத்ஸவம் ஆகும்.

ப்ரஹ்மம் என்ற சொல்லிற்கு சத்யோஜாதாதி பஞ்ச ப்ரஹ்ம மந்திரங்களின் அதிபர்களான ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ர, மஹேச, ஸதாசிவ என்ற ஸகுண ப்ரஹ்மங்களாம் ...

உத்ஸவம் பஞ்சதா ப்ரோக்தம் ஸ்தித்யுத்பத்திலயாத்மகம் ।
திரோபாவாநுக்ரஹஞ்ச ஸ்ருஷ்ட்யாத்யம் பஞ்சக்ருத்யகம் ॥
அங்குரார்பண கல்யாணம் த்வஜாரோஹணமேவ ச ।
ரக்ஷாபந்தநமித்யுக்தம் ஸ்ருஷ்டிகர்ம உதாஹ்ருதம் ॥
வாஹநோத்ஸவ ஸம்யுக்தம் ஹோமகர்ம பலிப்ரமம் ।
ஸ்திதிகர்மேதி ஹி ப்ரோக்தம் ஸம்ஹார: கத்யதேऽது்நா ॥
ராத்ரிசூர்ண ஸமாயுக்தம் ரதாரோஹணமேவ ச ।
காலாகருத்ஸவம் சைக்மாகமேஷு ப்ரஸித்திதம் ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மௌநோத்ஸவம் திரோபாவம் ஶக்தியாத்ரா
த்வநுக்ரஹம் ॥

தீர்தஸ்ய திவஸாத்யந்தே ப்ரணய: கலஹோத்ஸவ: ।
பீஜக்ஷேத்ரே ஸமாயுக்தம் ஸ்ருஷ்ட்யாத்யம் பஞ்சக்ருத்யகம் ॥

என்று அகோர சிவாச்சாரியார் க்ரியாக்ரம ஜோதிகையில் மஹோத்ஸவ விதியில் கூறுகிறார். இவ்வாறே உத்தர காரணமும் கூறுகிறது.

தீக்ஷையில், ஹௌத்ரி ஆசார்யன் தன் சிஷ்ய சைதன்யத்தின் பொருட்டு சிவாக்னியில் ஹோமம் செய்து, வாகீச்வரீ கர்ப்பத்தில் சிஷ்யனின் ஆத்மாவிற்கு ஸம்ஸ்கார ரூபமாய் பல ஜன்மாக்களில் அனுபவிக்க வேண்டியவைகளை அனுபவிக்கச் செய்து, மலபரிபாகமும் மலபந்தத்தினின்று நிவ்ருத்தியும் செய்து, நிர்மலனாக்கி, சிவஞானம் பெறத் தகுதி உள்ளவனாக ஆக்குவது போல் சகல சராசரங்களையும் உற்சவ பஞ்சக்ருத்யம் என்ற சாம்பவி தீக்ஷை செய்து வைக்கிறது.

ஒவ்வொரு வேளையும் ஸ்வாமி யாகசாலைக்கு யாகவீக்ஷணத்திற்கு வரும்பொழுது, ஆசார்யன் சராசரங்களின் மலபந்தம் நீங்க ஹோமம் செய்கிறார்; ஸோமாஸ்கந்தர் என்ற சிவாக்னியில் மலபந்தமாகிய உமி நீங்கிய நெல்பொறிகளை சகல சராசர ஆன்மாக்களாக சேர்ப்பிக்கிறார்; அவற்றை நிர்மல ஆத்மாக்களாகச் செய்கிறார்; தீர்த்தத்தில் அஸ்த்ர ராஜரிடத்தில் சகல ஆன்மாக்களையும் ஆவாஹனம் செய்கிறார்; சிவகங்கையில் அஸ்த்ரராஜருடன் தான் (ஆசார்யன்) மூழ்கி எழுகிறார்; இதனால், யாவரையும் ஸ்வாமி சாக்ஷியாய் ஸ்நானம் செய்தவர்களாகச் செய்து, அவரவர் தகுதிக்குத் தகுந்தவாறு ஸாலோகாதி பத முத்தியும், மஹா ப்ரளய காலத்தில் நித்ய நிரதிசய ஆனந்த ஸாயுஜ்யத்தையும் அடைவிக்கிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதுவே மஹோத்ஸவத்தின் தாத்பர்யம் ஆகும்.

மஹோத்ஸவந்து குர்யாச்சேத் ஶிவஸாயுஜ்ய-மாப்நுயாத் - உத்தரகாரணம்.

3. மஹோத்ஸவ வகைகள்

ஒரு நாள் செய்யக்கூடிய உத்ஸவத்திற்கு சைவம் என்றும், மூன்று நாள் செய்யக்கூடிய உத்ஸவத்திற்கு கௌநம் என்றும், ஐந்து நாள் செய்யக்கூடிய உத்ஸவத்திற்கு பௌதிகம் என்றும் பெயர் சொல்லப்படுகிறது. ஒரு நாள் முதல் ஐந்து நாட்கள் செய்யப்படும் உத்ஸவத்திற்கு கொடியேற்றம் கிடையாது.

12 கால பலிதானத்துடன் கூடிய ஏழு தின மஹோத்ஸவத்திற்கு ஸ்ரீகரம் என்றும், 18 கால பலிதானத்துடன் கூடிய நவ தின த்வஜாரோஹண தீர்த்தாந்த மஹோத்ஸவத்திற்கு சௌக்யம் என்று பெயர்.

நவாஹம் ஸௌக்யம் உச்யதே - பூர்வ காரணம்.

நவாஹம் தைவிகம் ஜ்ஞேயம் - தந்த்ரஸாரம்.

ஆகையால் சௌக்யம் என்பது தைவிகம் என்றும் சொல்லப்படுகிறது.

17 நாட்கள் கொண்ட உத்ஸவம் சாந்த்ரம் எனப்படும்.

27 நாட்கள் கொண்ட உத்ஸவம் சௌரம் எனப்படும்.

நவதின மஹோத்ஸவத்தில் ஒவ்வொரு காலமும் நடைபெறும் நடன காட்சிக்கு, ஒவ்வொரு பெயர் சூட்டப்பட்டுள்ளது: 1. ப்ரக்ருதி 2. புண்யபாபம் 3. குணத்ரயம் 4. மனோ-புத்தி-அஹங்கார சித்தம் 5. பஞ்சேந்த்ரியம் 6. ஷட்வைரி 7. சப்தகோடி மஹா மந்த்ரம் 8. வித்யா தத்வ அஹங்காரம் 9. திரோதாயி 10. பரமசுகாதீதம் 11. பதி-பசு-பாசம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தாண்டவம் குருதே யஸ்மாஜ்ஜகத்க்ஷண ஹேதுநா । - காரணாகமம்.

அணுவுக்குள்ளும் பரமாணுவாய் உள்ள ஆடல்வல்லான் அசையாவிட்டால், ஓரணும் அசையாது.

பிந்துமத்யகதோ நாத: நாதமத்யே து மூர்தய: ॥
மூர்தி-மத்யகதம் தத்வம் தத்வமத்யகதஶ்ஶிவ: ।
ஶிவமத்யகதம் ந்ருத்தம் ந்ருத்தமத்யே து ஶாந்திகம் ॥
அதீதம் ஶாந்திமத்யே து ஶாந்த்யதீதம் பராத்பரம் ।
தஸ்மால்லிங்கம் விஶேஷேண கர்மரூபமுதாஹ்ருதம் ॥

4. உத்ஸவ க்ரியைகள்

ப்ரதமம் வ்ருஷயாகஞ்ச த்வஜாரோஹம் த்விதீயகம் ।
ப்ரஹத்தாளம் த்ருதீயஞ்ச சதுர்த்தஞ்சாங்குரார்பணம் ॥
யாகஶாலா லக்ஷணஞ்சாஸ்த்ர யாகமத: பரம் ।
ஸப்தமம் பலிதாநஞ்ச யாநக்ரம-மதாஷ்டமம் ॥
நவமம் பரிவேஷஞ்ச தஶமம் நீராஜந க்ரமம் ।
ஏகாதஶம் கௌதுகஞ்ச த்வாதஶம் தீர்த்த ஸங்க்ரஹம் ॥
சூர்ணோத்ஸவம் த்ரயோதஶ்யாம் சதுர்தஶ்யாம் து தீர்த்தகம் ।
அவரோஹம் பஞ்சதஶம் ஷோடஶம் ஸ்நபநம் பவேத் ॥
வைவாஹிகம் ஸப்ததஶம் பக்தோத்ஸவ மத: பரம் ।

உத்ஸவ க்ரியைகளில் முதலாவது, வ்ருஷபத்தை நன்கு பூஜித்தல்.

இரண்டாவது, த்வஜாரோஹணம்:

இறைவனின் மூர்த்திக்குரிய ஊர்தியே ஆன்மாக்களின் சின்னம். அவ்வூர்தியை த்வஜ படத்தில் எழுதி, பிரதிஷ்டை செய்து, ஆசார்யன் கொடிமரத்தின் உச்சியில் ஏற்றி வைப்பது த்வஜாரோஹனம் ஆகும்.

கொடிச்சீலை பசுவாகிய ஆன்மாவை உணர்த்தும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அது திருவருட்சக்தியாகிய கயிற்றால் ஆறு ஆதாரங்களையும் கடந்து, பதியாகிய கொடி மரத்தில் இணைந்து, கொடிமரமும் கொடிச் சீலையும் இரண்டாயினும் பதியில் பசு ஒடுங்கி, உயிர்கள் பாசங்களைக் கடந்து, பதியுடன் இரண்டறக் கலந்து சிவானுபூதி பெறுகின்றன என்பதையே த்வஜாரோஹனம் என்ற க்ரியை உணர்த்துகிறது.

ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம் ஒன்று மேலிடில் ஒன்(று)
ஒளிக்கும் எனினும் இருள் அடராது உள்ளுயிர்க்(கு) உயிராய்த்
தெளிக்கும் அறிவு திகழ்ந்(து) உளதேனும் திரிமலத்தே
குளிக்கும் உயிர்அருள் கூடும்படி கொடி கட்டினனே.

-உமாபதி சிவாசார்யார் கொடிக்கவி

உத்ஸவ க்ரியைகளில் அடுத்தது, ப்ரஹத்தாளம் என்ற பேரீதாடனம். பேரீ வாத்யத்தில் விதிப்படி பூஜித்து, மும்முறை மந்திரத்துடன் அடிக்க, முதல் தாடனத்தால் அசுரத்தன்மை அழிந்து மூவுலகிலுள்ளவர்க்கும் ஹிதம் உண்டாகும். இரண்டாவது தாடனத்தால் ப்ரம்மா விஷ்ணு முதலியவர்களுக்கும் மகரிஷிகளுக்கும் இதமுண்டாகும். மூன்றாவது தாடனத்தால் ஸகல புவனங்களுக்கும் இதமும் அகமும் உண்டாகும்.

அடுத்ததாக, அங்குரார்ப்பணம்.

பாரவன்காண் பாரதனிற் பயிரானான் காண்
பயிர் வளர்க்குந் துளியவன் காண் துளியினின்ற ....

என்ற திருநாவுக்கரசு ஸ்வாமிகளின் வாக்கின்படி, பயிர் விளைவுக்குக் காரணமான விதைகளை, பாலிகைகளில் இட்டு, வித்துக்கு அதிபனான ஸோமனை கும்பத்தில் பூஜித்து வழிபடுதல் அங்குரார்ப்பணம் ஆகும். உத்தம பக்ஷ மஹோத்ஸவத்தில் த்வஜாங்குரம் உத்ஸவாங்குரம், தீர்த்தாங்குரம் என மூன்று விதம் உண்டு.

அடுத்ததாக, யாகசாலை க்ரியைகள் தொடக்கம்.

In Public domain: Digitization Muthulakshmi Research Academy

உத்ஸவத்தில் யாகசாலை அமைக்க வேண்டும். உயிர்கள் அத்வ சுத்தி யுக்தமான தீக்ஷையினாலேயே பாச நீக்கம் பெற்று சிவானுபூதி பெறமுடியும். ஆதலால் மந்த்ர, பத, வர்ண, புவன, தத்வ, கலா என்ற அத்வாக்களின் ஸ்வரூபமாய் யாகசாலை அமைக்க வேண்டும். மண்டலம், கும்பம், அக்னி, ஆசார்யன், சிஷ்யன் என்ற ஆன்மா - ஆகிய ஐந்திடமும், தன்னிலும், இறைவன் நின்று அனுக்ரஹிப்தைக் காட்ட, குண்ட மண்டலங்களுடன் தினமும் வேள்வி செய்யவேண்டும்.

சூர்ணோத்ஸவம்: தனு, கரண, புவன, போகங்கள், நான் எனது என்னும் செருக்கை எழுப்புவன. அவைகளைச் சக்தியால் இடித்துச் சுத்த சூர்ணமாக்கி, இறைவனிடத்தில் ஒப்பிக்க, அவர் திரோபவ கிருத்யம் செய்து அருளுவார், அப்பொழுது ஆன்மா இருவகைப் பற்றுமற்று, தன் செயலாற்றுச், சிவன் செயலாய் நிற்கும்.

தனுவொடு கரணமாயா புவனபோ கந்தவிர்க்கும்
புனிதநீ றா யசுன்னம் போதகற் களித்திட்டுண்மை
யினிதமர் சிவமதாக்கி... - உத்ஸவ விளக்கம்.

சக்திகளாற் றனுகரண புவனயோகங் கடனை
யத்னுக்குச் சுண்ணமவை யாயிடிக்கக் கூவுதலே
யொத்த திருச் சுண்ணம் - திருப்பெருந்துறைப்புராணம்.

மௌனோத்ஸவம்: சிவமானது எல்லாப் பொருள்களிலும் உள்ளும் புறமும் வியாபித்து நிற்பதை அறிந்து, எல்லா பொருளும் சிவமென அறிந்து, அறிந்தோம் என்ற போதமும் நீங்கி நிற்பது ஞான நிஷ்டையாகும்.

"மோனமென்பது ஞான வரம்பு" - ஔவையார்.

"ஆனந்தமான நின்னையன்றி யொன்றை யுன்னாத மோனந்

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

தமியேற்கு முத்தி பராபரமே" - தாயுமானவர்.

"ஏவம் நவதிநம் க்ருத்வா தஶமே தீர்தமாசரேத் ।" - நவதின உத்ஸவமானால், அதற்குப் பிறகு தீர்த்தோத்ஸவம் செய்ய வேண்டும்.

5. உத்ஸவத்தின் மத்தியில் செய்யத் தகாதவை

வத்ஸரோத்ஸவகாலே ச யதா மாஸோத்ஸவோ பவேத் ।
பலி ஹோமாதி ஸம்யுக்தோ பேரயாத்ராதி ஸம்யுத: ॥
வர்ஜேயேத்வா நயேத்பேரம் யாத்ராமாத்ரமதாபி வா ।
மாஸோத்ஸவ த்வய ப்ராப்தா வேவமேவ ஸமாசரேத் ॥
மாஸோத்ஸவ இஹ ப்ரோக்தஸ்த்வேகாஹோத்ஸவவத்ஹிஜா: ।
குர்யாதேகமநேகம் வா மாஸ்யேகஸ்மிந்நதுத்ஸவம் ॥ ...
உத்ஸவாதிஷு காலேஷு ப்ரதிஷ்டாத்யம் ந காரயேத் ॥
-உத்தரகாமிகம்.

6. உத்ஸவ பலம்

பரம் ஶாம்பாதி தீக்ஷாக்யம் உத்ஸவம் பாப நாஶநம் ।
ஸர்வ கல்யாணமித்யுக்தம் உத்ஸவம் ஜ்ஞாந ஸம்பவம் ॥
தீர்த்தருக்ஷ த்வௌது ஸம்ப்ராப்தே ஏகமாஸேऽபரம்வரம் ।
நேஷ்டம் ப்ரதம ருக்ஷேது அந்த்யோர்க்ஷே தீர்த்தமாசரேத் ॥
க்ருதஞ்சேத் பூர்வ நக்ஷத்ரே ய: கர்தா ஸ விநஶ்யதி ।
தஸ்மாத் ஸர்வ ப்ரயத்நேந தீர்த்தம் அந்த்யருக்ஷ மாசரேத் ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5

சிவாலயங்களில் ஜீர்ணோத்தாரணம்

கட்டுரை ஆசிரியர்: வ்யாகரண சிரோமணி, S.அருணசுந்தர சிவாச்சாரியார், விரிவுரையாளர், ஸம்ஸ்க்ருதக் கல்லூரி, மயிலாப்பூர், சென்னை-60004. ☎ 24617440.

சைவாகமங்கள் ஜ்ஞானம், கிரியை, யோகம், சரியை என நான்கு விஷயங்களையும் விளக்கும் நூல்கள் ஆகும். இருப்பினும், கிரியைகளை விளக்கும்போது ஆகமங்கள் தனிப்பெரும் சிறப்புடன் மிளிர்கின்றன. கிரியை எனப்படும் பூஜையானது, ஆத்மார்த்தம், பரார்த்தம் என இருவகை.

வேறு விதத்தில், நித்யம், நைமித்திகம், காம்யம் என மூன்று வகையாகவும் பூஜையைக் குறிப்பிடலாம்.

"தீக்ஷா சைவ ப்ரதிஷ்டா ச நைமித்திகமிதி த்விதா" என்ற வசனத்தின்படிப் பார்த்தால், தீக்ஷை, ப்ரதிஷ்டை என இரண்டு கிரியைகள் மட்டுந்தான் நைமித்திகக் கிரியைகள் ஆகும். நாமே விருப்பப்பட்டு குறிப்பிட்ட காலங்களில் செய்யும் பூஜை "காம்யம்" எனப்படும். இவற்றைத் தவிர உள்ள பிற அனைத்தும் "நித்யம்" ஆகும்.

அவற்றுள் தினந்தோறும் ஏற்படும் பூஜைக்கு "நித்ய நித்யம்" என்று பெயர். இவற்றைத் தவிர, காலங்களை நிமித்தமாக வைத்துச் செய்யப்படும் பூஜைகளுக்கு "ஆகந்துக நித்யம்" என்று பெயர்.

எனவே, ஆகமங்களோ, பத்ததிகளோ தீக்ஷை,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ப்ரதிஷ்டை இவை இரண்டினைத் தவிர வேறு கிரியைகளை "நைமித்திகம்" என்று குறிப்பிட்டால், அதற்கு எல்லாம் "காலங்களை நிமித்தமாகக் கொண்ட ஆகந்துக நித்யம்" என்றுதான் பொருள் கொள்ள வேண்டும் எனத் தெளிகிறது.

ப்ரதிஷ்டா - சொல் விளக்கம்

இரண்டு வித நைமித்திகங்களுள் ஒன்றாகிய ப்ரதிஷ்டா என்பதின் சொல் விளக்கம் சித்தாந்தசேகரத்தில் பின்வருமாறு உள்ளது:

"ஜ்ஞாந ஶக்த்யாத்மகே லிங்கே
க்ரியாஶக்தி ஸமர்பணம் ।
பீடஸ்ய விதி⁴நா யோகாத்
ப்ரதிஷ்டா, ஸாதுபஞ்சதா ॥"

- பக்கம் 639, ச்லோகம் 2.

ப்ரதி = பீடத்தினைக் குறித்து, ஷ்டா (ஸ்தா) = லிங்கத்தினை ஸ்தாபித்தல், ப்ரதிஷ்டா எனப்படும். பீடம் என்பது க்ரியா சக்தியை உள்ளடக்கிய மநோந்மணியின் இருப்பிடம். லிங்கம் என்பது ஜ்ஞானசக்தியை உள்ளடக்கிய சிவபெருமானின் இருப்பிடம். இவை இரண்டையும் விதிப்படி சேர்ப்பிப்பது "ப்ரதிஷ்டா" எனப்படும்.

சைவாகமங்களில் சிவபெருமானுக்கு மட்டுமே முக்யத்வம் உள்ளதால், "ப்ரதிஷ்டா" என்ற இந்த சொல், சிவபெருமான் விஷயத்தில் முக்ய ஶப்தமாகவும், பிற தெய்வாதி விஷயங்களில் கௌணஶப்தமாகவும் இருக்கும்.

ஐந்து வகை ப்ரதிஷ்டா

நாம் இன்று எங்கும் காணும் சிவலிங்கங்களின் மையப் பகுதியில், நீண்டு, தண்டு போன்று மழமழவென்று வட்டமாக இருக்கும் பகுதிக்கு *லிங்கம்* என்று பெயர்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

வெளியில் நாம் காணும் இந்த லிங்கத் தண்டானது வட்டமாக இருந்தாலும், உள்ளே மையப்பகுதி எட்டுப் பட்டை வடிவாகவும், கீழ்ப்பகுதி சதுரப்பட்டை வடிவாகவும், இருக்கும். எனவே மூன்று பகுதிகளைக் கொண்ட இந்த தண்டிற்குத்தான் லிங்கம் என்று பெயர்.

இந்த லிங்கத்தினைச் சுற்றி மேடை போன்று உயர்ந்தும், சதுரமாகவோ, வட்டமாகவோ உள்ள *ஆவுடையார்* என்ற பகுதிக்கு மொத்தமாக பீடம் அல்லது பிண்டிகா என்று பெயர்.

முன்பு சொன்னதுபோல, லிங்கம் பீடம் ஆகிய இவை இரண்டினையும் சேர்க்கும் இந்த "ப்ரதிஷ்டா" ஐந்து வகைப்படும்.

1. முதல் வகை: ப்ரதிஷ்டா

கர்ப்பக்ருஹத்தின் நடுவில் முதலில் ப்ரஹ்ம ஶிலாவினை அமைத்து, அதன் நடுவில் அவ்யக்த லிங்கம் அல்லது முகலிங்கம் ஆகியவற்றை நட்டு ஸ்தாபிக்க வேண்டும். பின்பு பீடம் என்ற பிண்டிகையை அதனுள் செறுகி அமைக்க வேண்டும். இதுபோல் மந்த்ர பூர்வகமாக செய்யப்படும்போது அதற்கு ப்ரதிஷ்டா என்ற பெயர் முழுமையாகப் பொருந்தும். இது முதல் வகை.

2. இரண்டாவது வகை: ஸ்தாபநம்

பாணலிங்க விஷயத்தில், அந்த பாணமானது முன்பு நாம் பார்த்த லிங்கத்தின் மேற்பகுதியாக (ருத்ர பாகமாக) மட்டுமே இருக்கும். அதாவது பாணத்திற்குக் கீழே, எட்டுப் பட்டை, நாலு பட்டை போன்றவை இருக்க மாட்டா. எனவே ப்ரஹ்மஶிலாவின் நடுவில் முன்பு சொன்னதுபோல, இந்த பாணத்தை நட்டு ஸ்தாபிக்க முடியாது.

எனவே ப்ரஹ்மஶிலாவின் மேல் பிண்டிகையை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்தாபித்து, பிண்டிகையில் உள்ள சிறு குழியில் இந்த பாணத்தினை, அதாவது லிங்கத்தின் ருத்ரபாகமாக மட்டுமே விளங்கும் பாணத்தினை, ஸ்தாபிக்க வேண்டும். இவ்வகையில் பாணலிங்கத்திற்கும் ப்ரஹ்மஶிலாவிற்கும் நேரடித் தொடர்பு இல்லை என்பதையும், லிங்கத்தின் ப்ரஹ்ம விஷ்ணு பாகங்கள், அதாவது நடுப்பகுதி, கீழ்ப்பகுதி ஆகிய இரண்டும் கூட இல்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

எனவே, லிங்கத்தின் ப்ரஹ்ம விஷ்ணு பாகங்களில் வரும் பூஜாதிகள், பிண்டிகையின் பாகங்களிலேயே மானஸிகமாக செய்யப்பட வேண்டும் என்று தெரிகிறது.

பாணலிங்கத்தினைத் தவிரவும், தாதுமயமான லிங்கங்களையும், ரத்னாதிமயமான லிங்கங்களையும் இதுபோல ஸ்தாபனம் செய்யலாம்.

இவ்வகைக்கு *ஸ்தாபநம்* என்று பெயர்.

3. மூன்றாம் வகை: ஸ்தீதஸ்தாபநம்

லிங்கம் தனியாக, பிண்டிகை தனியாக, என உருவாக்கப்படாமல், செய்யும்பொழுதே சேர்ந்தாற்போல சிவலிங்கம் செய்யப்படலாம். இவ்வகை லிங்கம் ஸ்வர்ணம் முதலிய உலோகமயமாகவும், வைடூர்யம் முதலிய மணிமயமாகவும், ஶிலாமயமாகவும் இருக்கலாம். அவ்வகை லிங்க விஷயத்தில் லிங்கபாகத்தினையும் பிண்டிகை பாகத்தினையும் சேர்க்க வேண்டிய அவசியமே இல்லை. அவை இரண்டும் சேர்ந்தே உருவாக்கப்பட்டுள்ளன.

இருப்பினும், லிங்கத்தின் ப்ரஹ்ம-விஷ்ணு பாகங்களை மனதினால் கல்பனை செய்து, ஸம்ஸ்காரம் செய்து, லிங்கத்தினையும் பிண்டிகையையும் பாவனையாக, மந்த்ரபூர்வகமாக, சேர்ப்பிப்பது ஒரு வகை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்வகைக்கு ஸ்திதஸ்தாபநம் என்று பெயர்.

4. நான்காம் வகை: ஆஸ்தாபநம்

சிவலிங்கத்தினைத் தவிர உள்ள தேவீ போன்ற சிலைகளை அந்தந்த பீடங்களில் அந்தந்த மந்த்ரங்களுடன் ஸ்தாபித்தல் ஆஸ்தாபநம் எனப்படும்.

5. ஐந்தாம் வகை: உத்தாபநம்

ஜீர்ணமாகுதல் (நாளடைவில் கரைந்து போதல்) போன்ற தோஷங்களுக்குட்பட்ட லிங்கம், சிலை போன்றவற்றை சரி செய்தோ, அல்லது அவற்றை அறவே அகற்றியோ புதிய லிங்கம், சிலை போன்றவற்றை ஸ்தாபிப்பதற்கு உத்தாபநம் என்று பெயர்.

நாம் எடுத்துக்கொண்ட *ஜீர்ணோத்தாரணம்* என்ற இந்த விஷயம், ஐவகை ப்ரதிஷ்டாக்களுள் உத்தாபநம் என்ற இவ்வகையைச் சாரும்.

நால்வகை ப்ரதிஷ்டா

ஆகமங்களில் வேறு வகையில் நான்கு விதமாகவும் ப்ரதிஷ்டாவானது விளக்கப்பட்டுள்ளது. அவை (1) ஆவர்த ப்ரதிஷ்டா (2) அநாவர்த ப்ரதிஷ்டா (3) புநராவர்த ப்ரதிஷ்டா (4) அந்தரித ப்ரதிஷ்டா என்பனவாகும். இந்த நால்வகை ப்ரதிஷ்டா பெயர்கள் அனேகமாக அனைத்து ஆகம நூல்களிலும் விளக்கப்பட்டாலும், அவற்றின் பொருளை விளக்கும் விஷயத்திலும், வரிசையிலும் சிற்சில வேறுபாடுகள் ஆகமங்களில் காணப்படுகின்றன. ஸ்ரீமத்காமிகாகமத்தினை அனுசரித்து அவற்றின் பொருளைப் பார்ப்போம்.

1. முதல் வகை: ஆவர்த ப்ரதிஷ்டா

ஆலயம் - லிங்கம் ஆகிய அனைத்தும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முதன்முறையாகப் புதிதாகக் கட்டப்பட்டு மந்த்ரபூர்வகமாக ஸ்தாபித்தால் அதற்கு ஆவர்த ப்ரதிஷ்டா என்று பெயர்.

2. இரண்டாவது வகை: அநாவர்த ப்ரதிஷ்டா

மந்த்ரபூர்வகமாக முன்பே ஸ்தாபிக்கப்பட்ட ஆலயம், லிங்கம் போன்றவற்றுள் எதற்கேனும் முழுமையாக அழிவு ஏற்பட்டாலோ, பாதி (half)-க்கும் மேலே அழிவு ஏற்பட்டாலோ, மறுபடியும் அவற்றினை மந்த்ரபூர்வகமாக ஸ்தாபித்தல் அநாவர்த ப்ரதிஷ்டா என்று பெயர். இது இரண்டாவது வகை. முதல் வகை பிரதிஷ்டையில் விதிக்கப்பட்ட சில கிரியைகள் இந்த வகை பிரதிஷ்டையில் கிடையாது என்பது அதனைக் காட்டிலும் இதற்குள்ள வேறுபாடு ஆகும்.

3. மூன்றாவது வகை: புநராவர்த ப்ரதிஷ்டா

ஆலயம் போன்றவற்றின் வண்ணங்கள் அழிந்தாலோ, லிங்கம் போன்றவை சிறிய அளவில் ஊனமுடையதானாலோ, அவற்றை எல்லாம் கூடியவரை சரிசெய்து, ஸம்ஸ்காரம் செய்து ஸ்தாபித்தலுக்கு புநராவர்த ப்ரதிஷ்டா என்று பெயர்.

இந்த வகை பிரதிஷ்டையில், புதுப்பித்தலின் முறைக்குத் தகுந்தவாறு, முதல் ப்ரதிஷ்டாவில் கூறப்பட்ட கிரியைகள் இடம் பெறலாம்; இடம் பெறாமலும் இருக்கலாம்.

4. நான்காவது வகை: அந்தரித ப்ரதிஷ்டா

ஆலயம் லிங்கம் போன்றவற்றிற்கு ஸ்பர்சதோஷம் போன்ற தோஷம் ஏற்பட்டால் அவை நீங்குவதின் பொருட்டு, ப்ராயச்சித்தத்திற்கு நிகராகச் செய்யப்படும் ஸம்ஸ்காரத்திற்கு அந்தரித ப்ரதிஷ்டா என்று பெயர். 'சில்பியின் உதவியின்றி செய்யப்படும் ப்ரதிஷ்டா இது' என்பதே முன் சொன்ன மூன்று ப்ரதிஷ்டாக்களுக்கும் இதற்கும் உள்ள முக்கிய வேறுபாடு ஆகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாம் எடுத்துக்கொண்ட *ஜீர்ணோத்தாரணம்* என்ற இந்தத் தலைப்பு, மேற்சொன்ன அநாவர்த ப்ரதிஷ்டா, புநராவர்த ப்ரதிஷ்டா ஆகிய இரண்டு வகையிலும் தொடர்பு உடையது. அவ்விரண்டிலும் ஜீர்ணோத்தாரணத்திற்கு வாய்ப்பு உண்டு.

ஜீர்ணோத்தாரணம்

ஜீர்ணமானவற்றிற்கான உத்தாரணம் ஜீர்ணோத்தாரணம். அதாவது, ஆலயம், விக்ரஹம், லிங்கம் போன்றவை இறைவன் எழுந்தருளுவதற்குத் தகுந்தாற் போல் அமைக்கப்பட்டாலும், அவை காலப் போக்கில் அழியக்கூடிவை அல்லது அழிக்கப்படக் கூடியவை. ஆகையால், அவற்றினைச் சரி செய்வது அவசியமாகிறது. இதுபோன்றவற்றை இருவகையாகச் சரிசெய்யலாம். அதாவது, அவற்றினை அறவே அகற்றி விடாமல், மறுபடியும் ஸந்தாநம் செய்தல் போன்றவற்றால் சரிசெய்து, ஜீர்ணதோஷத்தினை அகற்றுவது. இது முதல் வகை.

'ஸந்தாநம் செய்தல்' போன்ற நிலையைக் கடந்த பக்ஷத்தில், ஜீர்ணமான அதுபோன்றவற்றை அறவே அப்புறப்படுத்துவது இரண்டாவது வகை. இந்த எல்லா வகை ஜீர்ணோத்தாரணமும் எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்ற விளக்கம் பல ஆகமங்களில் விளக்கப் பட்டுள்ளதுபோல, ஸ்ரீ நிகமஜ்ஞான சிவாச்சாரியாரால் *சந்த்ரிகை* என்ற உரையுடன் எழுதப்பட்ட "ஜீர்ணோத்தார *தசகம்*" என்ற நூலிலும் பத்து ச்லோகங்களில் நன்கு விளக்கப்பட்டுள்ளது. அதனையும் ஒட்டி ஜீர்ணோத்தாரணத்தினை பார்ப்போம்.

சிவக்ஷேத்ரத்தில் வசித்தல், சிவபக்தர்களைப் பேணுதல், சிவனைப் பூஜித்தல், சிவாலயம் நிர்மாணித்தல், சிவாலய ஜீர்ணோத்தாரணம் செய்தல் ஆகிய ஐவகை சிவஸேவைகளுள் சக்திக்கு ஏற்றவாறு அனைத்தையோ, ஒன்றினையோ சைவர்கள் அவசியம் செய்ய வேண்டும். அதிலும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஜீர்ணாத்யம் பூஜிதம் ஹந்தி
நிஹந்தி தத் அபூஜிதம் ।
தஸ்மாத் ஸமுத்ருரேத் ஜீர்ணம்
யதாஶாஸ்த்ரம் ஸுகாய ச ॥

[ஜீர்ணமாயிருத்தல் போன்ற தோஷமுள்ளவற்றை பூஜித்தல் அழிவினை உண்டுபண்ணும். அதுபோன்றவற்றை பூஜிக்காமலிருத்தல் பேரழிவினை உண்டுபண்ணும். எனவே, க்ஷேமத்தின் பொருட்டு, சாஸ்த்ரப்படி, அந்த ஜீர்ணமானவற்றை உத்தாரம் செய்ய வேண்டும்.]

- என்ற ஸ்ரீமத்-காமிகாகம வசனத்தின்படி ஜீர்ணமானவற்றை அலக்ஷ்யம் செய்தல் கூடாது. உடனடியாக உத்தாரம் (சரி செய்தல், மேம்படுத்துதல்) செய்தல் வேண்டும் என்பது புலனாகிறது.

முதலில், ஆலயாதிகளுக்கு ஜீர்ணோத்தாரணம், லிங்காதிகளுக்கு ஜீர்ணோத்தாரணம், விக்ரஹங்களுக்கு ஜீர்ணோத்தாரணம் என்று ஜீர்ணோத்தாரணம் மூன்று வகை.

முதல் வகையில் (1) தள வரிசை ஜீர்ணோத்தாரணம் (2) விமானம் ஜீர்ணோத்தாரணம் (3) ப்ராகாரம் ஜீர்ணோத்தாரணம் (4) கோபுரம் ஜீர்ணோத்தாரணம் (5) மண்டபம் ஜீர்ணோத்தாரணம் (6) பரிவாராலயம் ஜீர்ணோத்தாரணம் (7) வாஸ்து (பூமி) ஜீர்ணோத்தாரணம் - என ஏழு வகை கூறப்பட்டுள்ளன.

இதுபோல், லிங்காதிகளின் ஜீர்ணோத்தாரண வகையில் எட்டு உள் வகைகள் உள்ளன: (1) பிண்டிகா ஜீர்ணோத்தாரணம் (2) மூலலிங்க ஜீர்ணோத்தாரணம் (3) பாலலிங்க ஜீர்ணோத்தாரணம் (4) ஸ்வயம்புலிங்க ஜீர்ணோத்தாரணம் (5) மானுஷலிங்க ஜீர்ணோத்தாரணம் (6) பலிலிங்க ஜீர்ணோத்தாரணம் (7) பலிபீட ஜீர்ணோத்தாரணம் (8)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேற்சொன்னவற்றின் இருப்பிடத்தின் ஜீர்ணோத்தாரணம்.

அடுத்து மூன்றாவதாகிய விக்ரஹ ஜீர்ணோத்தாரண வகையில் ஆறு உள்வகைகள் உள்ளன: (1) கருங்கல் விக்ரஹ ஜீர்ணோத்தாரணம் (2) உலோக விக்ரஹ ஜீர்ணோ-த்தாரணம் (3) சித்திரம் போன்றவற்றின் ஜீர்ணோத்தாரணம் (4) சூலம் போன்றவற்றின் ஜீர்ணோத்தாரணம் (5) நித்யாக்னி குண்ட ஜீர்ணோத்தாரணம் (6) சித்தாந்த புஸ்தக ஜீர்ணோத்தாரணம்.

மேற்சொன்னவை முடிந்தவரை விளக்கப் படுகின்றன.

ஜீர்ணமானவைகளாக நாம் மேலே குறிப்பிட்ட அனைத்தும், ஆவர்த்த பிரதிஷ்டையில், தேவதை வஸிப்பதற்கு யோக்யமானவையாக நம்மால் செய்யப்பட்டவையாக இருக்கலாம். அல்லது, தானாகவே அத்தகுதியைப் பெற்றவையாக இருக்கலாம். எனவே ஜீர்ணோத்தார ஸமயத்தில், ஆங்காங்கே எழுந்தருளியுள்ள மந்த்ரவடிவான இறைவனுக்கு ஸ்பர்சம் போன்றவற்றால் சிரமமோ, அதனால் நமக்கு தோஷமோ உண்டாகாத வகையில் உத்தாரத்தை (செப்பனிடுதலை, மேம்பாட்டினை) செய்ய வேண்டும்.

எனவே, ஆங்காங்கே உள்ள இறைவனுக்கு, இறைத்தன்மைக்கு, மந்த்ரபூர்வகமான ஸம்ஸ்காரங்களால் பாதுகாப்பினைச் செய்து, பின்புதான் அவற்றின் உத்தாரத்தின் பொருட்டு, சில்பி-கார்யத்தைச் செய்விக்க வேண்டும். அல்லது ஆங்காங்கே உள்ள இறைவனை, மந்த்ரவடிவான இறைவனை மட்டும், கும்பத்தில் ஆகர்ஷணம் செய்து, பிறகு காலத்தேவைக்குத் தகுந்தாற் போல பாலாலயத்தில் சேர்ப்பித்து, பிறகு ஜீர்ணமான அவற்றை உத்தாரம் செய்து, பிறகு அந்த பாலாலயத்திலிருந்து அங்கே மறுபடியும் சேர்ப்பிக்க வேண்டும். பெரும்பாலும் எங்கும் இம்முறை சமானமாக இருக்கும்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

கர்ப்பக்ருஹத்தில் தளவரிசையின் இறுக்கம் காரணமாக, அல்லது தளர்வு காரணமாக தளம் (தரைவரிசை) சமமற்று இருக்கலாம். அல்லது, பெருச்சாளி போன்றவற்றால் உள்ளே பெரும்பொந்து ஏற்பட்டு, அபிஷேக ஜலம் அவ்வழியே சென்று ஜலம் தேங்கிவிடலாம். இதுபோன்ற சந்தர்ப்பத்தில் லிங்கத்தில் உள்ள இறைவனை, மந்த்ரரூபமான இறைவனை, அங்கிருந்து கும்பத்தில் ஆவாஹனம் செய்து, தளவரிசையை சரிசெய்து, பின்பு அங்கே இறைவனை சேர்ப்பிக்கவேண்டும்.

கர்ப்பக்ருஹத்தின் மேல்பகுதியில் வெளியே விமானம் என்று எது தெரிகிறதோ அதற்கும் "ப்ராஸாத:" என்று பெயர். உள்ளே விளங்கும் சிவலிங்கம் 'ஆன்மா' என்றும், வெளியே காணும் விமானம் 'சரீரம்' என்றும் பாவனை செய்ய சாஸ்திரம் கூறுகிறது.

சரீரமாகிய ப்ராஸாதத்தில் விரிசல், வெடிப்பு, உடைந்து விழுதல், எரிதல் போன்றவற்றால் அங்கங்களில் வைகல்யம் (குறைபாடு, மாறுபாடு) ஏற்பட்டால், முன் இருந்த அந்தந்த திரவியங்களாலேயே, முன்பிருந்தபடியே சரிசெய்ய வேண்டும். வேறுபடி செய்தால் தோஷம் கூறப்பட்டது.

'முன்பிருந்த திரவியங்களைக் காட்டிலும் உயர்ந்த திரவியங்களால் கூட உத்தாரம் செய்யலாம்" என்று சில இடங்களில் விகல்பம் (choice) கூடக் கூறப்பட்டுள்ளது.

ஆனால் அதன் அமைப்பு முன்படியேதான் இருக்க வேண்டும். விமானத்தின் சிற்சில அங்கங்கள் ஜீர்ணமானால் உத்தாரம் செய்யவேண்டிய தேவை இல்லை என்று க்ஷந்தவ்யாம்ஶ: (பொறுத்துக் கொள்ள வேண்டிய அளவு) கூறப்பட்டுள்ளது. விமானம் முழுவதுமாக ஜீர்ணாதி தோஷம் உடையதாயின், அதனை முழுவதுமாக அகற்ற வேண்டியது அவசியம். அதற்காக அவ்விமானத்தின் மந்த்ர

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவதைகளை, பாலாலயத்திலுள்ள விமானத்திலும், மூலலிங்கத்திலுள்ள மந்த்ர தேவதைகளை பாலாலயத்தில் உள்ள பால-லிங்கம் போன்றவற்றிலும் சேர்க்கவேண்டும். பின்பு, மூலலிங்கத்தினை வேறு இடத்தில் பாதுகாப்பாக வைத்தபின், அவ்விமானத்தினை அப்புறப்படுத்தி, மறுபடியும் புதிய விமானத்தினை அமைக்க வேண்டும்.

இதுபோன்ற ஸந்தர்ப்பத்தை உத்தேசித்து ஆகமாதிகளில் ஒரு வாக்கியம் காணப்படுகிறது. "ஸுஸ்தி₂தம் து₃:ஸ்தி₂தம் வாபி ஶிவலிங்கம் ந சாலயேத்" என்றும், "ஶதேந ஸ்தா₂பயேத் லிங்கம் ஸஹஸ்ரேண து சாலயேத்" என்றும் சொல்லப்பட்டுள்ளது. அதாவது, அனைத்து லக்ஷணங்களுடன் கூடியதாக இருந்தும், பூஜிக்கப்படாத லிங்கம் *து₃:ஸ்தி₂தம்* என்று பெயர்படும். ஜீர்ணாதி தோஷமுடையதாயினும் பூஜிக்கப்படுகின்ற லிங்கம் *ஸுஸ்தி₂தம்* எனப்படும். இரண்டுமே அசைக்கத் தகுந்தவை அல்ல. அதாவது, இரண்டினையுமே அசைக்கக் கூடாது.

இவ்வாறு பொதுவாக நிஷேத₄: (தடுத்தல்) செய்யப்பட்டது. சரியாக, பலமான காரணமின்றி லிங்கத்தினை அசைத்தால் அது தோஷத்தினை உண்டுபண்ணும் என்று இதனால் பெறப்படும்.

பின்பு இவ்வாறு சொல்லப்பட்டது: "லிங்கத்தினை முதன்முதலில் ஸ்தாபனம் செய்வதற்கு நூறு போதுமானது, ஆனால் பின்பு அதே லிங்கத்தில் அசைப்பதற்கு ஆயிரம் தேவைப்படுகிறது" என்று. "நூறு அல்லது ஆயிரம் என்பதற்கு இங்கு நூறு காரணங்கள் அல்லது ஆயிரம் காரணங்கள் என்று பொருள்" என்று ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த சிலர் இதற்குப் பொருள் கூறுகின்றனர்.

வ்யவஹார ரஹஸ்யமறிந்த சிலரோ, "ஸ்தாபன

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸமயத்தில் ஸாக்ஷிகளாக நூறு பேர் இருந்தால் போதும்; ஆனால் சலனம் (அசைப்பது) செய்யும் நேரத்தில் ஆயிரம் நபர்கள் ஸாக்ஷிகளாகத் தேவைப்படுகிறார்கள் என்று பொருள்" என்று கூறுகின்றனர்.

இவ்விரண்டு உரையும் பொருத்தமாக இருப்பினும், ஸித்தாந்தசேகரம் போன்றவற்றில் "ஸ்தாபன ஸமயத்தில் நூறு ஆஹுதிகள் கூட போதுமானவை; ஆனால் அசைக்கும், (அப்புறப்படுத்தும்) தருணத்தில் ஆயிரத்திற்கும் அதிகமான ஆஹுதிகள் தேவையானவை" என்று விளக்கம் உள்ளது.

எவ்வாறாக இருப்பினும் இது அவசியம் புலப்படும் - *அசைத்தல் என்பது எளிதில் நடைபெறுவது கூடாது.*

இருப்பினும், க்ஷந்தவ்யதசா (பொறுத்துக்கொள்ள வேண்டிய நிலை)-யை மீறி ஜீர்ணாதிகள் ஏற்பட்டால், "ஜீர்ணாத்யம் பூஜிதம் ஹந்தி நிஹந்தி தத் அபூஜிதம் !" என்று முன் சொன்ன வசனப்படி, சாலனம் என்ற உத்தாரணம் அவசியம் செய்ய நேர்ந்தால், ஆயிரத்திற்கும் அதிகமான ஹோமமும் மற்றும் சில வழிமுறைகளும் ஆகமங்களில் கூறப்பட்டுள்ளன.

அதிலும், மூலலிங்கம், விமானம் போன்றவற்றை அப்புறப்படுத்த நேர்ந்தால், ஈட்டி, கடப்பாறை போன்றவற்றின் உதவியோடு தன் இச்சைப்படி தானாகவே அதனைச் செய்யக்கூடாது. காளைகளின் அல்லது யானையின் உதவியுடன்தான் அந்த உத்தாரத்தை (அப்புறப்படுத்துதலை) செய்ய வேண்டும்.

அதாவது, காளையின் திமில் பகுதியில் கயிற்றின் நுனியைக் கட்டி, கயிற்றின் அடியை லிங்கம் போன்றவற்றில் கட்டி, காளையை எதிர்ப்புறமாக ஓட்டவேண்டும் என்றவாறு உத்தாரம் செய்யும் முறையைக்கூட விளக்குகிறது ஆகமம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆகமங்களின் பொறுப்புணர்வினையும், உயர் சிந்தனையையும் இங்கு நாம் உணர்ந்து இன்புற வேண்டும்.

இவ்வாறு, பார்த்துப் பார்த்து, ஆகமங்கள் விஷயங்களை விளக்கினாலும், செல்வத்தினையே பொருளாகக் கொண்டவர்களும், செறுக்குடையவர்களுமான சிலர் தன்னிஷ்டப்படி ஈட்டி போன்றவற்றால் சிவலிங்கத்தினைப் பெயர்த்தெடுப்பதை நாளேடுகளில் கண்ட நல்லோர்களின் மனம் புண்பட்டதை எவரும் எளிதில் மறக்க முடியாது.

"உண்மையில் மனிதன் லிங்கத்தினை அசைத்தாலும், காளை, யானை போன்றவற்றாலேயே அது அசைக்கப்பட்டது போல ஆகவேண்டும்; அதனால், அந்த தோஷம் அம் மனிதனுக்கு வரக்கூடாது" என்றல்லவா ஆகமத்தின் கருத்து விளங்குகிறது? எனவே, தன்னிஷ்டப்படி ஜீர்ணோத்தாரணத்தைச் செய்தல் கூடாது.

முன்பு சொன்னபடி, விமானத்தினை முழுவதுமாக அகற்றும் பக்ஷத்தில் கூட, அவற்றில் உபயோகப் படுத்தக் கூடிய கற்கள் போன்றவற்றை எடுத்துக் கொண்டு அவற்றாலும், புதிய பொருட்களாலும் புதிய விமானத்தினை அமைக்க வேண்டும். உபயோகப்படுத்த முடியாத மண்ணாங்கட்டி போன்றவற்றை, ஸமுத்ரம் போன்றவற்றில் விஸர்ஜநம் செய்ய வேண்டும். இடிக்கப்பட்ட பழைய கற்கள் போன்றவற்றிற்கும் மஹத்வம் உள்ளது என்பது இதிலிருந்து தெரிகிறது அல்லவா?

எந்த ஜீர்ணோத்தாரமாக இருந்தாலும் சரி! பழையதைக் காட்டிலும் எவ்வகையிலும் குறைபாடு என்பது கூடாது. இதனை "தஸ்மாத் ஹீநம் ந கர்தவ்யம், கர்தவ்யமதிகம் ஶுபம்" என்ற பூர்வகாரணத்தின் ஜீர்ணோத்தாரண விதியின் வரியிலிருந்து அறியலாம்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

விமானம், மூலலிங்கம் ஆகிய இரண்டுள் ஒன்றிற்கு ஜீர்ணோத்தாரணம் செய்ய ஏற்பட்டால், இரண்டிற்கும் கலாகர்ஷணம் சேர்த்தே செய்து, பாலாலயாதிகளில் ஸ்தாபனாதிகள் செய்வதே சரி எனத் தோன்றுகிறது.

"விமாநம் ஸ்தூலமித்யுக்தம் ஸூக்ஷ்மம் தந்மூலலிங்ககம் । ஸ்தூலம் விநா ந ஸூக்ஷ்மம் து ஸூக்ஷ்மம் ந ஸ்தூலமந்தரா । அங்காங்கிபாவமநயோ: பேதோநாஸ்தி த்வயோரிஹ । ஸ்தூலம் ஸூக்ஷ்மம் த்வயம் சாபி ஸமாக்ருஷ்ய யதாவிதி ॥" என்ற வாமதேவ பத்ததியின் வரிகள் இவ்வெண்ணத்திற்கு உறுதுணையாக உள்ளன.

இங்கு ஆங்காங்கே உள்ள இறைவனை ஆகர்ஷணம் செய்வது மறுபடியும் இறைவனை அந்தந்த இடங்களில் சேர்ப்பிப்பதின் பொருட்டே என்று பாவிக்க வேண்டும். எனவே, இறைவனின் இந்த ஸங்க்ரம: (இடம் பெயர்தல்) என்பது "ஸாபேக்ஷஸங்க்ரம:" என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

முன்பு சொன்னதுபோலவே, ப்ராகாரம், கோபுரம், மண்டபம், பரிவாரக்கோயில் (சன்னிதி), வாஸ்து ஆகிய ஐந்தும் ஜீர்ணமானால், அங்கங்கே உள்ள தேவசக்தியை கும்பத்தில் ஆகர்ஷித்து, பின் அவற்றினை உத்தாரம் (மேம்படுத்துதல்) செய்து, பின் அந்தந்த தேவதையை அங்கங்கே மந்த்ரப்படி ஸ்தாபிக்க வேண்டும். இவை ஐந்தும் கூட மிக மிக சிதிலமடைந்துள்ள பக்ஷத்தில், அறவே அகற்றி, ஆத்யேஷ்டகா ஸ்தாபநம் (அடிக்கல் நாட்டுதல்) முதல் அனைத்தினையும் செய்திடல் வேண்டும். இல்லையேல் சரி செய்தால் போதும்.

அந்தர்மண்டபம், அந்தர்ஹாரம், மத்யஹாரம்; மர்யாதா, மஹாமர்யாதா என்ற ஐந்து ப்ராகாரங்களின் ஜீர்ணோத்தார விஷயத்தில், மிகவும் சக்தியற்ற சந்தர்ப்பத்தில், சில குறிப்பிட்ட

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிராகாரங்களை வேறு பிராகாரங்களுடன் உசிதமாக ஒன்றுபடுத்தி ஜீர்ணோத்தாரம் செய்யும் வழியும் கூறப்பட்டுள்ளது.

அடுத்து, இரண்டாவதாகிய லிங்காதிகளின் ஜீர்ணோத்தாரணத்தைப் பார்ப்போம். லிங்கங்கள் சில ஆகமங்களில் நான்கு வகையாகவும், சிலவற்றில் ஆறாகவும், வேறு சிலவற்றில் ஏழு வகையாகவும் குறிப்பிடப்பட்டுள்ளன. "ஸ்வயம்பூ: தைவிகம் சைவ திவ்யம் மாநுஷம் ஆர்ஷகம் । ஆஸுரம் பாணலிங்கம் ச ।" என ஏழு லிங்கங்களைக் குறிப்பிடுகிறது ஸ்ரீமத்காரணம். "ஸ்வயம்பூ: தைவிகம் பாணம் காணபம் சார்ஷகம் ததா । ஶிஷ்டலிங்க-மிதிக்யாதம்..." என்ற வாக்யப்படிக்கு மானுஷலிங்கத்தினைத் தவிர பிறவற்றிற்கு ஶிஷ்டலிங்கம் எனப் பெயர்.

சிஷ்டர்களாக விளங்கும் மனிதர்களால் ஸ்தாபிக்கப் பட்டது ஶிஷ்டலிங்கம் என்று காமிகாகமத்தின்படிக்குத் தெரிகிறது. "ஶிஷ்டலிங்கே விஶேஷேண ஆவாஹநோ-த்வாஸநம் ந ஹி" என்றும் "அஸுரை: முநிபி: தேவை: தத்வவித்பி: ப்ரதிஷ்டிதம் । ஜீர்ணம் வாப்யதவா பக்நம் விஹ்நாபி ந சாலயேத்" என்றும் உள்ள காரண-காமிக வசனங்களால் என்ன புலப்படுகிறது என்றால் - ஸாமான்ய மனிதர்களைத் தவிர மஹான்கள் போன்றோர்களாலோ, ரிஷி, அஸுரர், தேவர், தேவீ போன்றோர்களாலோ ஸ்தாபிக்கப்பட்ட லிங்கங்களுக்கும், ஸ்வயம்புவிற்கும் ஜீர்ண நிலையில் கூட தோஷம் கிடையாது; எனெனில் சிவபெருமான் அங்கு நித்யவாஸம் செய்கிறார் என்று.

மேலே குறிப்பிட்ட லிங்கங்களுக்கும் கூட ஒரு குறிப்பிட்ட அளவு வரை ஜீர்ணமாவதைப் பொறுத்துக் கொள்ளலாம் என்றும் உள்ளது. அவற்றின் சில உறுப்புகள் உடைந்தாலும் கூட தங்கம், வெள்ளி, தாமிரம் போன்றவற்றின் பட்டைகளாலோ, கம்பிகளாலோ அவ்வுறுப்புகளைக் கட்டியும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூஜிக்கலாம் என்றும் உள்ளது.

எதுவரை பொறுத்துக் கொள்ளலாம் என்று உள்ளதோ அதனையும் மீறி மிகவும் க்ஷயம் அடைந்த பக்ஷத்தில்தான், சிஷ்டலிங்கங்களில் ஸம்பூர்ண கலாகர்ஷணம், அந்த லிங்கங்களை உத்பாடநம் (பெயர்த்து எடுத்தல்) போன்றவற்றைச் செய்யலாம். ஷ ஶிஷ்டலிங்கங்களின் பீட விஷயத்தில் கூட அவ்வாறுதான் உள்ளது.

மானுஷ லிங்க விஷயத்திலோ, லிங்கம் ஜீர்ணமானால் அதன் பீடத்தினையும் சேர்த்து உத்தாரம் செய்ய வேண்டும். அதன் பீடம் மட்டும் ஜீர்ணமானால் அதனை மட்டுமே உத்தாரம் செய்ய வேண்டும்; லிங்கத்தினை உத்தாரம் செய்யக்கூடாது. ஜீர்ணோத்தார தஶகத்தில் இவை இவ்வாறு உள்ளன :-

லிங்கே ஸ்வாயம்புவாக்யே பவதி யதி சிராத்
    ஜீர்ணதா தத்ர தோஷோ
நாஸ்த்யேவோக்தா து ஶாந்திர்-பவதி ச விமல
    ஸ்வர்ண பட்டாதி பத்த்வா ।
க்ஷந்தவ்யாம்ஶம் விஹாயர்ஷிகண ஸுரக்ருதாமேவ
    ஜீர்ணோத்த்ருதி: ஸ்யாத்
பீடேத்வங்காதி ஹீநே த்ரியவ பரிபவே
    மாநுஷே லிங்கபீடே ॥

மேலே நாம் கண்ட ஶிஷ்டலிங்கங்கள் கோயில் கட்டுவதற்கு முன்பே இருந்தவை. எனவே அவைகளுக்குத் தகுந்தாற்போல விமானம், கோயில் போன்றவற்றை அமைக்க வேண்டும். அவ்வாறு அமைக்கப்படும் விமானம், கோயில் போன்றவற்றில் ஆகம - சில்ப - சாஸ்திரங்களின்படிக்கு சிற்சில குறைபாடுகள் இருப்பினும் தவறேதுமில்லை. இது போன்று அமைக்கும் விமானாதிகளுக்கு "லிங்கவஶாத் ப்ராஸாத:" என்று வ்யவஹாரம் (வழங்குகிறது, வழக்கு).

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மானுஷலிங்க விஷயத்தில் மட்டுமே "ப்ராஸாத வஸாத் லிங்கம்" என்பது சம்பவிக்கும்.

மேற்கூறிய ஶிஷ்டலிங்கங்களுக்கு எந்த அளவிற்கு மஹத்வம் உள்ளதோ, அந்த மஹத்வம் அவற்றின் விமாநங்களுக்கும் உண்டு.

எனவே வேறு வழியின்றி ஶிஷ்டலிங்கங்களின் விமானங்களின் ஜீர்ணோத்தாரம் செய்யும்போது, நாகர - த்ராவிட - வேஸராதி விமான வகைகளுள் முன்பு எது இருந்ததோ அதே விமான வகையை மறுபடியும் அமைத்தல் வேண்டும்.

ஶிஷ்டலிங்கங்களுள் ஸ்வயம்புலிங்கத்திற்கு மிக மிக விசேஷத் தன்மை உண்டு. க்ஷந்தவ்யாம்ஶ: என்ற குறைபாட்டினை பொறுத்துக்கொள்ளும் அளவு ஶிஷ்டலிங்க விஷயத்தில் அதிகமாகக் கூறப்பட்டுள்ளது.

ஜீர்ணோத்தார தஶகத்தில் உள்ள உரையின் மூன்று இடங்களை இனி பார்ப்போம் :-

1. ஸ்வயம்பூ லிங்கஸ்ய பாலலிங்க நிஷேத: குத்ரசித் உக்த: । பாலலிங்கம் கர்தவ்யம் இதி ச குத்ரசித் । தத்ர ஜீர்ணாலய விஷயே க்ஷந்தவ்யாம்ஶே ச நிஷேத: இதி மந்தவ்யம் ॥ (ஜீர்ணோத்தார தஶகம், பக்கம் 50)

2. ஸ்வாயம்புவ லிங்கஸ்ய பாலலிங்க அபாவாத் ஸ்வாயம்புவே, ஸங்கோச படலே, தத்தாமோத்தார விஷயே யோஜநா ப்ரகார: உக்த: ॥

3. நநு, உக்த அநேக ஆகம வசநை:, ஸ்வாயம்புவாதி லிங்காநாம் ஜீர்ணோத்தார விதி:, தந்நிஷேத: ச தர்ஶிதே । தத் கதமத்ர ஸமாதாநம்? இதி சேத் । ஸத்யம் । ஸ்வாயம்புவாதி லிங்கேஷு ஜீர்ணோத்தார

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

விஶேஷ வசநாநாம், ஸ்வாயம்புவ லிங்கமாத்ரே ஏவ முக்யார்தத்வம், தைவிக காரணப ஆர்ஷ பாண லிங்கேஷு தந்மாஹாத்ம்ய பரத்வாத் உபசரிதார்தத்வமேவ ச । அந்யதா தேஷாம் கர்தவ்யாம்ஶ வசநை: அநர்தத்வம் ஸ்யாத் ॥

இம்மூன்று இடங்களை நன்கு பரிசீலனை செய்தால், மேலே கூறிய அனைத்தும் சரியானதே என்பதனை அறியலாம்.

மூலலிங்கத்திலிருந்து இறைவனை ஆகர்ஷணம் செய்த பிறகும் கூட, அந்த லிங்கத்தினை மரக்கூண்டு அல்லது மரப்பெட்டியால் மறைத்து, தினந்தோறும் மௌனத்துடன் பூஜிக்க வேண்டும் என்று உள்ளது. ஆகர்ஷணம் செய்த பிறகும் கூட, இறைவனின் கலை அங்கு உள்ளது என்பது இதிலிருந்து தெரிய வருகிறது அல்லவா! எனவே, இறைசக்தி அங்கு அறவே இல்லை என எண்ணி, கும்பாபிஷேகாதி காலங்களில், கண்டவர்களும் லிங்காதிகளைத் தொடுவது தவறு எனத் தெரிகிறது. பல பெரிய கோயில்களில் சுயம்பு போன்ற லிங்கங்களைக் கூட, கும்பாபிஷேக காலங்களில், கண்டவர்களெல்லாம் சட்டை, பேன்ட் போன்றவற்றைப் போட்டுக்கொண்டே, வெறும் கல் என்ற எண்ணத்தில், கண்டபடிக்கு மூர்த்தங்களைத் தொட்டதையும், பல பெண்கள் பக்திக் கோளாறின் காரணமாக, தீண்டாத் திருமேனியையும் கூட தங்கள் கூந்தல் நன்கு தீண்டும்படிக்குத் தழுவிய காட்சியையும் கண்டு பல பெரியவர்கள் மனம் வருந்தியதுண்டு. எனவே வரும் காலங்களில் இதுபோன்று நிகழக் கூடாது.

பலி பீடம் போன்றவற்றின் ஜீர்ணோத்தாரத்தினையும் முன்போலவே செய்ய வேண்டும்.

இனி, மூன்றாவதாகிய சிவ-விக்ரஹங்கள் போன்றவற்றின் ஜீர்ணோத்தாரத்தினைப் பார்ப்போம். உருவம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
கொண்ட விக்ரஹ விஷயத்திலும் அங்கம், ப்ரத்யங்கம், உபாங்கம் என்ற பெயர்களில் உறுப்புகள் பிரித்துக் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் ப்ரத்யங்கம், உபாங்கம் ஆகியவை விகலமானால் மறுபடியும் சரி செய்யலாம் அல்லது சேர்க்கலாம். அங்கம் விகலமானால் விக்ரஹத்தை விடச் சொல்லி உள்ளது.

சித்தாந்த புஸ்தகம் என்றால் இருபத்தெட்டு சிவாகம நூல்கள். தினந்தோறும் அவற்றிலும் சிவபெருமானை பூஜை செய்யவேண்டியதால், அந் நூல்கள் ஜீர்ணமானால் அவற்றிற்கும் உத்தாரம் சொல்லப்பட்டுள்ளது.

இவ்வாறு மூன்று வகையான ஜீர்ணோத்-தாரத்திலேயும், உத்தாரம் (பெயர்த்து எடுத்தல்) செய்யப் பட்ட கல், சுதை, மரம் போன்றவற்றால் ஆன லிங்க-பிம்பாதிகளை நதியிலோ, ஸமுத்ரம் போன்றவற்றிலோ இடச் சொல்லியும், பூமியில் புதைக்கச் சொல்லியும், சிலவற்றை சிவாக்நியில் எரிக்கச் சொல்லியும், இவ்வாறு சிவாகமங்கள் பலவாறாகக் குறிப்பிடுகின்றன. உலோஹ பிம்ப விஷயத்தில், அவற்றை மறுபடியும் உருக்கி, அந்த உலோஹத்தினாலேயே புதிய பிம்பத்தினைச் செய்யலாம் எனக் குறிப்பு உள்ளது.

விபு: விபவஸாரோऽபி ந குர்யாத் பக்தி வர்ஜிதः ।
ஸர்வஸ்வமபி யோ தத்யாத் ஶிவபக்தி விவர்ஜிதः ।
தநேந தர்மயுக் ந ஸ்யாத் பக்திரேவாத்ர காரணம் ॥

என்ற ஶிவதர்ம வசநங்களைக் காணும்போது, சிறந்த சிவபக்தி உள்ளவர்களுக்கு மட்டுமே இந்த ஜீர்ணோத்தாரண கைங்கர்யத்தில் அதிகாரமுண்டு என்பது புலப்படும்.

மேலும்,

பௌராண்யம் தேவஸதநம் பௌராண்யம் கூபமேவ ச ।
புராண ஸித்த வ்ருக்ஷாதீந் அச்சேத்யம் ச த்யஜேத்புதः ।

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேஷாம் பஹி:ப்ரதேஶேது குட்யம் பத்ராக்ருதிம் ந்யஸேத் ।
அஜ்ஞாநாத் குருதே தேஷாம் பங்கம், பஶ்சாத் விபத் பவேத் ।
தஸ்மாத் பரிஹரேத் தாநி பஹிராவரணம் ந்யஸேத் ॥ *

என்ற "மாநஸார" வாக்யங்களைப் பார்க்கும்போது, தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினரால் 'பழம்பொருட்களைக் காத்தல்' என்ற எந்த காரியமானது இன்று செய்யப்பட்டு வருகிறதோ, அது நம் கலாசாரத்திலேயே இருந்த ஒன்று என்பது தெரியும். எனவே, மஹிமை பொருந்திய இது போன்ற கிணறு மண்டபம் போன்றவற்றையும் கூட, தன் இஷ்டப்படி அகற்றுதல் கூடாது.

ஜீர்ணோத்தார தஶகம், அதன் உரை, வேறு பல ஆகமங்களில் உள்ள ஜீர்ணோத்தார விதி படலங்கள் ஆகியவற்றைக் காணும்போது, கடல்போலும் மலைபோலும் பெரியதொரு பொருளாகவே அது தென்படுகிறது. இக் கட்டுரை, அதற்கு ஒரு 'மாதிரி' மட்டுமே.

எனவே, சரியான, துல்லியமான விஷயங்களை ஆங்காங்கே உள்ள பெரியார்களின் சொல்படிக்குத் தெரிந்து, தெளிந்து, பின்பு ஜீர்ணோத்தாரத்தைச் செய்யக் கேட்டுக் கொண்டு, இக்கட்டுரையை முடிக்கச் செய்கிறேன்.

---

* *இந்த ச்லோகத்தின் பொழிப்புரை: புராணத்தில் ப்ரஸித்தமாக இருக்கக்கூடிய ஆலயம், புராண மஹிமை வாய்ந்த கிணறு, புராணங்களில் ப்ரஸித்தமாக உள்ள வ்ருக்ஷங்கள், இவை போன்ற அசைக்க முடியாததும் அகற்ற முடியாததுமான இடங்களுக்கு சுற்றுச்சுவர்கள் அமைத்து, அவற்றில் பத்ரம் போன்ற ஆகம-சிற்ப வேலைப்பாடுகள் செய்துவிட வேண்டும். அவற்றை அகற்றினாலோ பங்கம் விளைவித்தாலோ தோஷம் ஏற்படும்; விபத்துகள் சம்பவிக்கும். அவற்றிற்குச் சுற்றுச் சுவர் எழுப்பி அவற்றை வணங்கி வரவேண்டும்.*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

6

கும்பாலங்காரம்

கட்டுரை ஆசிரியர்: வ்யாகரண விசாரத, G.கோடீச்வர குருக்கள் M.A.(Sanskrit),, முதன்மை பரம்பரை பூஜா ஸ்தாநிகர், ஸ்ரீ தர்பாரண்யேச்வரர் ஆலயம் (ஸ்ரீ சநீச்வரர் ஆலயம்), திருநள்ளாறு.

இப்புவியில் எங்கும் நீக்கமற நிறைந்து விளங்கும் இறைவன், ஆன்மாக்களின் உணர்வுகளுக்கு புலப்படுத்தும் நிலையில், மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சந்திரன், சூரியன், ஆன்மா என எட்டு வடிவங்களாகத் தன்னை உணர்த்துகிறார். இவ்வெட்டுக்கும் வேறாக உலகில் எதையும், உணரவும் காணவும் முடியாது. இவ்வாறு எண் குணத்தானாகி எங்கும் நீக்கமற நிறைந்த பரம்பொருளை, ஓரிடத்தில் ப்ரகாசிக்கச் செய்யும் பொருட்டு, மண் வடிவாக குடத்திலும், நீர் வடிவாக கும்ப தீர்த்தங்களிலும், தீ வடிவாக ஹோம குண்டங்களிலும், காற்று வடிவாக மந்திர உச்சரிப்பிலும், ஆகாய வடிவாக ஒலியின் விரிவிலும், சூரிய வடிவாக ஒளியிலும், சந்திர வடிவாக குளிர்ச்சியிலும், ஆன்மா வடிவாக உயிர்களின் இயக்கத்திலும் வழிபாட்டு முறைகளில் காண்கிறோம். இவ்வாறு விளங்கும் இறைவனை,

"அட்டமூர்த்தியை மட்டவிழ்சோலை ஆருரானை மறக்கலுமாமே" என்கிறார் சுந்தரர்.

"பட்டியேறு கந்தேறிப் பலவில மிட்டமாக விரந்துண்டுழி தரும் அட்டமூர்த்தி அண்ணாமலை கை தொழக் கெட்டு போம் வினை கேடில்லை காண்மினே" என்றும்,

"இருநிலனாய் தீயாகி நீருமாகி யியமானனா யெறியுங் காற்றுமாகி யருநிலைய திங்களாய் ஞாயிறாகி யாகாசமாய்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அட்டமூர்த்தியாகிப் பெரு நலமுலங் குற்றமும் பெண்ணுமாணும் பிறருருவும் தம்முருவும் தாமேயாகி நெரு கலையின்றாகி நாளையாகி நிமிர்புண் சடைகளின்ற வாறே" என்றும் போற்றுகிறார் நாவுக்கரசர்.

அட்டமூர்த்தியையும் ஒரு சேர தரிசிக்கச் சிறந்த வழி கும்பாபிஷேக தரிசனமே. இறைவனை ஆன்மாக்கள் நூலறிவினால் மட்டும் காண முடியாது. நம் முன்னோர்கள் கூறியபடி பலவித வழிபாட்டு முறைகளைக் கடைப்பிடித்து ஆன்மபலம் பெற்றால்தான் காணலாம் என்பதையே,

நாநா பூசாயா: பஹவ: அப்யதிஷ்டா
மஹர்ஷிபி: தஸ்ய மஹாத்ம்யமஸ்து ।
தேஷ்வேஷு யத்ந: க்ரியதாம் மஹத்பி:
ந ஹேது வாதை: பவிதாமாத்மலாப: ॥

- என்று கூறியுள்ளார்கள்.

கும்பாபிஷேகம் என்ற கிரியை மூலமாக இறைவனைக் காண முற்படுவோருக்கு, முதற்கண் *கும்பாலங்காரம்* என்பது என்ன என்று சொல்லப்படுகிறது.

கும்பாலங்காரம் என்பதாவது இறைவனை (ஒலி வடிவாக) எழந்தருளச் செய்யும் ஆசன பூஜையாகும். கும்ப: + அலங்கார: = கும்பாலங்கார: என பத விரிவாக்கம் சொல்லப்படுகிறது. ஒரு தூணின் "நிலையாக நிறுத்தப்படுவதான அடிப்பகுதி"-யைக் கும்பக: என்ற சொல் குறிக்கிறது. ப்ராணாயாமத்தில் மூச்சுக்காற்றை உள்ளே (நிலை)நிறுத்துவதற்கும் கும்ப: என்றுதான் பெயர் வழங்குகிறது. இவ்வாறே மந்திர வடிவாக இறைவனை நிறுத்தி வைக்கும் புனித வஸ்து கும்பம் எனப்படுகிறது. வெளியிலிருந்து கும்பிடுவோருக்கு அருள, இறைவன் நிலைத்து நிற்கும் புனித கோபுர, விமானக் கலசங்களுக்கும் கும்பம் என்ற பெயரே வழங்குகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பஞ்ச பூதங்களில் ஜலத்தையே முதன்மைப் படுத்தி வேதங்கள் "ஆபோ வை ஸர்வா தேவதா:" என்பது போன்ற மந்த்ரங்களில் இயம்புகின்றன. மேலும், "காஷ்ட மத்யே யதா வஹ்நி: க்ஷீர மத்யே யதா க்ருத: கும்ப மத்யே யதா மூர்த்தி: லிங்க மத்யே ஸதாஶிவ:" என்ற வாக்யத்தால், அதாவது, கட்டையுள் தீ போல, பாலுக்குள் நெய் போல, *கும்பத்துள் மூர்த்தி* போல, லிங்கத்துள் ஸதாசிவர் இருக்கிறார் என்பதால், எந்த *மூர்த்தி*யை வழிபடுவதானாலும், அதற்குக் கும்பமே சிறந்தது எனக் காண முடிகிறது.

அப்படி மூர்த்தி வந்து நிலைகொள்ளும் கும்பத்திற்கு எவ்வாறு அலங்காரம் செய்யவேண்டும் என்பதை இனிக் காண்போம்.

யவஸ்து ப்ரஹ்ம தேவத்ய-ஸ்தண்டுலோ விஷ்ணு தைவத: ।
கோதூமஶ்சேந்த்ர தைவத்யஶ்-சாடகஞ்சாக்நி தைவத: ।
மாஷஸ்து யம தைவத்ய: ஸர்பிஷோஸுரதைவத; ।
முத்கோ வருண தைவத்யஶ்-சணகோ வாயு தைவத: ।
நிஷ்பாவஸ்-ஸோம தைவத்ய: திலஸ்த்வீஶாந தைவத: ।

– என வாமதேவபத்ததியில் சொல்லியபடி பூஜிக்கப்பட வேண்டும்.

வழக்கத்தில்:

நெல்லில்: வ்ருஷஸ்ஸோஹம் பஶுபதே ... என்ற மந்த்ரத்தைச் சொல்லி வ்ருஷப தேவரையும்,

அரிசியில்: அயம் குமாரோ ... என்ற மந்த்ரத்தைச் சொல்லி ஸ்கந்தரையும்,

பச்சைப் பயறில்: தத்த்வா யாமி ... என்ற மந்த்ரத்தைச் சொல்லி வருணணையும்,

உளுந்தில்: ஹிரண்ய வர்ணா ... என்ற மந்த்ரத்தைச் சொல்லி அக்னியையும்,

கோதுமையில்: இந்த்ரம் விஶ்வா ... என்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மந்த்ரத்தைச் சொல்லி இந்திரனையும்,

துவரையில்; ஸோமமேதேநு ... என்ற மந்த்ரத்தைச் சொல்லி ஸோமனையும்,

எள்ளில்: *ஶ*ந்நோ தேவீ ... என்ற மந்த்ரத்தைச் சொல்லி தேவியையும் ...

... பூஜிக்கிறோம். அந்தந்த தானியங்களை இலையில் இட்டு, அதன் மேல் நெற்பொரியில் ப்ரபஞ்சனையும் தர்ப்பையில் ஆகாசத்தையும் பூஜிக்க வேண்டும்.

த்ரோண த்வயா பூர்ய ஜல: *ஶி*வ கும்ப: ப்ரகீர்தித: ।
ததர்தா வர்தநீ கும்ப: வித்யே*ஶா*ஶ்ச ததர்தகா: ।
ஸப்தவிம்*ஶ*தி கும்பாஶ்ச ததர்தா: பரிகீர்திதா: ।
வித்யே*ஶ* ஸத்ரு*ஶா* சாஸ்த்ர கும்ப: ப்ரகீர்திதே: ।

-வாமதேவ பத்ததி.

என்றவாறு கும்பத்தின் கொள்ளளவு சொல்லப் படுகிறது. இரண்டு மரக்கால் அளவு சிவகும்பமும், அதில் பாதி அளவு வர்த்தனியும், அதில் பாதி அளவில் வித்யேஸ்வர கும்பங்களும் அஸ்திர கும்பமும் இருக்க வேண்டும்.

பிறகு "ஹிரண்ய பாத்ரம் ..." என்ற மந்திரம் சொல்லி சிவனை பூஜித்து, குடத்தை எடுத்து "ஸீஸேந தந்தும் ..." என்ற மந்த்ரத்தைச் சொல்லி முப்பிரி நூலால் மூன்று முறை சுற்ற வேண்டும். நூல்களின் இடைவெளி எள் அளவு இருப்பின் உத்தமம். யவை அளவு இருந்தால் மத்யமம், யானையின் கண் அளவு இருப்பின் அதமம் என்பதனை "உத்தமம் திலமாத்ரம் ஸ்யாத் ..." என்று தொடங்கும் வாக்யத்தினால் அறியலாம். சிவ கும்பத்துக்கு 16 தளமும், வித்யேச கும்பங்களுக்கு 8 தளமும், ஏனைய கும்பங்களுக்கு 4 தளமும் கொண்ட அமைப்பாக நூல் சுற்றப்பட வேண்டும்.

பிறகு அகோர மந்திரம் ஜபித்து, சங்கரனை பூஜித்து, தூபமிட வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கிழக்கு அல்லது வடக்கு நுனியாக பவித்ரத்தை கும்பத்தின் வாயிலில் "அப: ப்ரணயதி ..." என்ற மந்திரத்தினால் வைத்து, "நத்யா த்யாஹ்ருத தீர்தேந வஸ்த்ரபூத ஸுகந்திநா ..." என்ற வாக்யத்தினால், " இமம்மே கங்கே ..." என்ற மந்திரங்களைச் சொல்லி ஜலத்தை நிரப்பி, விஷ்ணுவை பூஜிக்க வேண்டும்.

கும்பத்தினுள் "ஏலா லவங்க கர்பூர ... " என்ற வாக்யத்தினால், சந்தணம், கோஷ்டம், தக்கோலம், ஏலக்காய், க்ராம்பு, விளாமிச்சை, சிறுநாவற்பூ, வெட்டிவேர், மருக்கொழுந்து, கஸ்தூரி, பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, கோரோசனை, பனிநீர் முதலியவற்றைக் குழைத்து இடவேண்டும்.

"ஷட்த்ரிம்ஶத் தர்ப ஸம்யுக்தம் ஶிவகும்பஸ்ய கூர்ச்சகம் ..." என்று தொடங்கும் வாக்யத்தில் சிவகும்பத்திற்கு 36, வர்த்தனிக்கு 25, வித்யேச்வராள், பரிவாரங்களுக்கு 15 என்று சொல்லப்பட்ட எண்ணிக்கையின் அடிப்படையில், தர்ப்பைகளால் ஒரு முழ அளவில் கூர்ச்சம் செய்து, "கூர்ச க்ரந்தி ஸரஸ்வத்யாம் ... " என்ற ச்லோகத்தினால் கூர்ச்சத்தின் முடிச்சில் ஸரஸ்வதியையும், அடியில் பார்வதியையும், நுனியில் புண்ணிய தீர்த்தங்களையும், ஸாவித்ரியை அதிதேவதையாகவும் பூஜித்து, "கோரமான அசுரர்களை அழிக்கும் பொருட்டு சமர்ப்பிக்கிறேன்" என நிறைவான பலனடைய பிரார்த்தித்து, "யோ ருத்ர ..." என்ற மந்திரத்தைச் சொல்லி கூர்ச்சத்தை வைக்க வேண்டும்.

"வஜ்ரம் வைடூர்யகம் சைவ மாணிக்யம் ... " என்ற வாக்யத்தினால், சிவகும்பத்தில் நவரத்தினங்களையும், வர்த்தனீ கலசத்தில் மாணிக்கம், வஜ்ரம், வைடூர்யம், (இந்த்ர)நீலம், பவழம் இவற்றையும், பவழம், முத்து, நீலம் இவற்றை ஏனைய கும்பங்களிலும் இடவேண்டும். இடும்போது "ஸஹி ரத்நாநி ..." என்ற மந்த்ரத்தைச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சொல்லவேண்டும். "கும்ப மத்யேஸ்திதம் தோயம் ..." என்ற ச்லோகத்தினால் சிவ கும்பத்தில் தங்கத் தாமரையும், வர்த்தனியில் தங்க அல்லி மலரையும் செய்து, அதில் அந்தந்த தேவதைகளின் பீஜாக்ஷரங்களை எழுதி, இடவேண்டும்.

"கும்பேதி சூத பத்ராணி கூர்ச துல்யாணி ..." எனத் தொடங்கும் ச்லோகத்தினால் கொத்தாக உள்ள, வளையாத, பூச்சிகளால் அரிக்கப்படாத, மிகத் தளிராகவோ அல்லது பழுத்ததாகவோ இல்லாத, நல்ல மாவிலைகளாகப் பார்த்துத் தெரிவு செய்து, "இதம் விஷ்ணுர் விசக்ரமே ..." என்ற மந்த்ரத்தினால் விஷ்ணுவை த்யானித்து, "வ்ருக்ஷராஜ ஸமுத்பூத ..." என்ற ப்ரார்த்தனையைச் சொல்லி கும்பத்தில் வைக்கவேண்டும்.

"நாளிகேரஞ்சோர்த்வ ஶிகம் மத்ய நேத்ரம் து வக்த்ரகம் ..." என்பதனால், மேல்நோக்கிய சிகை உடைய, மூன்று கண்களை உடைய, மிகுந்த இளநீர்க் காயாக இல்லாத, மிகவும் முற்றாத, நார் இல்லாத, நல்ல தேங்காயை "நாளிகேர ஸமுத்பூத த்ரிணேத்ர ஹரஸம்மத: ..." என்ற ப்ரார்த்தனையைச் சொல்லி கும்பத்தில் வைக்க வேண்டும்.

"கௌஶேயமுத்தமம் ப்ரோக்தம் ..." எனத் தொடங்கும் ச்லோகத்தில் பட்டு வஸ்த்ரம் உத்தமமாகவும், நார்ப்பட்டு வஸ்த்ரம் மத்யமாகவும், நூல் வஸ்த்ரம் அதமமாகவும் சொல்லப்பட்டுள்ளது. சிவகும்பத்திற்கு 8 முழத்திலும், வர்த்தனிக்கு 4 முழத்திலும், வித்யேச்வராள், ஸப்தவிம்சதி கும்பங்களுக்கு 2 முழத்திலும் வஸ்த்ரம் ஸமர்ப்பிக்க வேண்டும்.

"யஜ்ஞஸூத்ரம் த்வயம் தத்யாத் ஸௌவர்ணம் ரஜத தந்துநா ..." என்பதனால், தங்கத்தினாலான இழை கொண்ட பூணூலை "ஸ்வர்ஜ்யோதி ..." என்ற மந்த்ரம் சொல்லியும், பிறகு அஸ்த்ர மந்த்ரம் சொல்லியும், சாற்ற வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பின்பு "ஹ்ருதயாய நம:" எனச் சொல்லி பஹிரலங்கார கூர்ச்சம் சாற்ற வேண்டும்.

"அக்ஷதை: சந்தநேநாऽபி ஷட்கந்தைரபி தேஶிக: ..." என்பதனால், சந்தணம், பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, கோரோசனை, கஸ்தூரி இவைகளைக் குழைத்து சாற்றவேண்டும்.

"அர்க சம்பக புந்நாக ..." என்ற ச்லோகத்தினால், அஷ்ட புஷ்பங்களை "த்ர்யம்பகம் யஜாமஹே ..." என்ற மந்திரத்தினால் சாற்றி, புஷ்பமாலைகள் சாற்ற வேண்டும். பின்பு நைவேத்யம் உபசாராதிகள் செய்து, ஹம்ஸ காயத்ரி, ஸ்ரீருத்ரம் முதலானவற்றை ஜபித்து,

"வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்" என்ற நாவுக்கரசரின் வாக்குப்படி,

"பாவநயா க்ரியா உபசார: ..." என்ற பரசுராம காவ்ய ஸூத்ரத்தின்படி,

மந்த்ரம், க்ரியா, பாவனைகளினால் ப்ராண ப்ரதிஷ்டை செய்து, இறைவனின் அங்கங்களை பூஜித்து, கலைகளையும் பூஜிக்க வேண்டும்.

"ஶாந்த்யதீத கலாஶீர்ஷம் ..." எனத்தொடங்கும் ச்லோகத்தினால் பாவிக்க வேண்டும்.

கடோ மாம்ஸமிதி ப்ரோக்தம் தோயம் ரக்தமிதி ஸ்ம்ருதம் ।
ரத்நமஸ்திதி ந்யஸேத் தீமாந் ஸூத்ரம் நாடி ததைவ ச ॥
வஸ்த்ரேண த்வக் ஸமாஹ்லாதம் மந்த்ரம் ப்ராண ப்ரகீர்திதம் ।
கூர்சந்து கேஶ ஸம்யுக்தம் சூத பத்ரம் ஜடாஸ்ம்ருதம் ॥
டாடிமீ பல தந்தஞ்ச நாளிகேரம் ஶிரஸ்ததா ।
கந்த புஷ்பைரலங்குர்யாத் இத்யேதே கும்ப லக்ஷணம் ॥

என்று யோகஜாகமத்தில் கூறப்பட்டுள்ளபடி பாவிக்க வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

7

தத்வார்ச்சனை - ஸ்பர்ஶாஹுதி

கட்டுரை ஆசிரியர்: சிவாகமச்செல்வர், சிவாகமஞானபானு, ஶைவசித்தாந்த ஆகம ஸாகரம், சிவஸ்ரீ சாஸ்வ K. ராஜப்பா சிவாச்சாரியார், ஸ்ரீ கைலாஸநாதர், ஸ்ரீ ஏகாம்ரநாதர் தேவஸ்தான பரம்பரை ஸ்தாநீகர், பூஜா மிராசதார், காஞ்சீபுரம். ☎ 223948.

ஸ்ரீ காமாக்ஷிநாத ஸஹாயம்

திருவண்ணாமலை வடக்கு மாவட்டம் வந்தவாசி வட்டம் தென்னாங்கூரில், பாண்டுரங்க ஆலய வளாகத்தில், தமிழ்நாடு அர்ச்சகர் சங்கத்தின் ஆகம வித்வத் ஸதஸ் குழு, பல பெரியோர்கள் முன்னிலையில், தாரண வருஷம் ஆடி மாஸம் 20, 21 (4-8-2004, 5-8-2004) தேதிகளில் நடைபெறும் *சிவாகம வைகானஸாகம வித்வத் ஸதஸ்*ஸில் என்னையும் அழைத்து பேச வைத்ததற்கு, ஸதஸ் வித்வான்களுக்கும், மற்ற அனைவருக்கும் எனது பணிவார்ந்த, ப்ரணாம பூர்வக, அன்பினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல பண்டிதர்கள் கூடிய இந்த அவையில் உரையாற்றுவதற்கு எனக்களிக்கப்பட்ட பொருள் *தத்வார்ச்சனை*. ஏற்கனவே சில ஆண்டுகளுக்கு முன்பு காமிகம் முதலான ஆகமங்களின் அடிப்படையிலும், அகோர சிவாச்சாரிய பத்ததியில் (சிவபிரதிஷ்டை) உள்ளவைகளைத் தழுவியும் ஓர் சிறிய நடைமுறை (ப்ரயோகம்) விளக்கப் புத்தகம் வெளியிட்டிருந்தேன். பலர் அதனை வாங்கிப் பயனுற்றதாகக் கடிதங்கள் கிடைத்தபோது, அடியேனின் உழைப்புக்கு இறைவனும், அன்பர்களும் அளித்த பலனாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதைக் கருதினேன். இன்றும் இதே விஷயத்தைப் பற்றி விவரமாகப் பேசும்படி வாய்ப்பு கிடைத்துள்ளது.

கும்பாபிஷேகங்களில் மிக முக்கிய நிகழ்ச்சியாக இந்த தத்வார்ச்சனை-ஸ்பர்ஶாஹூதி உள்ளது. இது எப்போது செய்யப்பட வேண்டும், எதற்காகச் செய்யப்பட வேண்டும், நூதன முதலான எல்லா பிரதிஷ்டைகளிலும் உண்டா, எவ்வாறு ப்ரயோகம் உள்ளது, அப் ப்ரயோகத்தில் உள்ள கருத்துகள் யாவை என்பதைப் பற்றி சிறிது ஆராய்வோம்.

சென்னை, காஞ்சிபுரம், வடாற்காடு மாவட்டம் திருவண்ணாமலை, பாண்டிச்சேரி முதலான ப்ரதேசங்களில் இந்த தத்வார்ச்சனையானது கும்பாபிஷேகத்திற்கு முன் இரவே அனுஷ்டிக்கப்படுகிறது. ஆனால் தஞ்சை முதலிய தென்மாவட்டங்களிலும் சேலம், கோவை போன்ற பகுதிகளிலும் நடைபெறும் கும்பாபிஷேகங்களில் கும்பாபிஷேகத்தன்று காலைதான் இந்த தத்வார்ச்சனை-ஸ்பர்ஶாஹூதி நடைபெற்று வருகிறது. முன்காலத்தில் கும்பாபிஷேகங்கள் மிகச் சிறிய அளவில் நடைபெற்றபோது, அந்தந்த பிராந்தியங்களில் உள்ள சிவாச்சார்யர்களை வைத்துக்கொண்டு, அங்கங்கு உள்ள பெரியோர்கள், அங்குள்ளவர்கள் அனுஷ்டிக்கும் பத்ததிப்படி நடத்தி வந்தனர். எல்லோருக்கும் அனேகமாக ஒரே மாதிரியான பாடங்கள் (ப்ரயோகங்கள்) இருக்கும்போது இதில் சிக்கல் ஏதும் வருவதில்லை.

இப்போது எல்லா இடங்களிலும் நிறைய பேரை வைத்துக் கொண்டு பெரிய அளவில் கும்பாபிஷேகங்கள் நடைபெறும்போது பல இடங்களிலும் இருந்து பெரியோர்களும், பல பாடசாலை மாணவர்களும் அழைக்கப் படுகின்றனர். மாணவர்களுக்கு அவர்கள் பயிலும் பாடசாலைகளில் என்ன சொல்லிக் கொடுத்தார்களோ அதன் வழி செய்வது மட்டுமே பழக்கமாதலால் தங்களுக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பழக்கமில்லாத முறையில் ப்ரயோகம் இருக்கும் இடங்களில் ஒன்றும் புரியாது சிரமப்படுகிறார்கள். எல்லாம் தெரிந்த பெரியோர்கள் எதனையும் அனுசரித்து செய்யத் திறன் பெற்றவர்கள். ஆகையால் சிற்சில இடங்களில் வாத-பிரதிவாதங்கள் கூட நடைபெறுகின்றன.

ஆனாலும் நமக்கு ஈசன் அருளிய மூல ஆகமங்களிலும், நாம் அனைவருமே அனுசரிப்பதாகச் சொல்லிக்கொண்டு வரும் அகோர சிவாச்சார்ய பத்ததியிலும் என்ன கூறியுள்ளது என்பதனைப் பற்றி பார்ப்போம்.

தத்வார்ச்சனை-ஸ்பர்ஶாஹுதியை கும்பாபிஷேகத்துக்கு முதல் நாள் இரவில் செய்யப்படுவதற்குரிய ஆதாரங்களை முதலில் காண்போம்.

பூர்வகாமிக ஆகமம்

[சுமார் 100 வருங்களுக்கு முன்பு சென்னை சித்தாதிரிபேட்டை அழகப்ப முதலியார் அச்சுக் கூடத்திலிருந்து இந்த நூல் க்ரந்தலிபியில் வெளியிடப் பட்டுள்ளது. 1975-ம் ஆண்டு தென்னிந்திய அர்ச்சக சங்கத்தின் சார்பில், திருவாடுதுறை ஸ்வாமிநாத சிவாச்சார்யார் உதவியுடன், என். ஆர். பட் முதலியோரால் பரிசீலிக்கப்பட்டு இது மீண்டும் வெளியிடப்பட்டது. இந்த நூலில் லிங்க பிரதிஷ்டா விதியைப் பக்கங்கள் 170-177 -இல் காணலாம்].

நூதன லிங்க பிரதிஷ்டை, பக்கம் 173-ல் 100வது ச்லோகம் சொல்வது: "குசமூல அந்தர் அக்ரைஸ்து பிரம்ம பாகாதி க்ரமாத் । ஸ்ப்ருஸேயு: மூர்த்திபா: ஸ்வீய திக் ஸ்திதா நிஜஶம்பரை: ॥" தொடர்ந்து, "பூதி தர்பைஸ்திலை: க்ரூத்வா ரக்ஷாம் அஸ்த்ரேண மந்த்ரத: । பஹிரந்தர் பலிம் க்ஷிப்த்வா க்ஷேத்ரபால பலிம் க்ஷிபேத் ॥". ஸ்பர்ஶாஹுதி முடித்த பிறகு, தத: , ப்ரபாதே என வார்த்தைகள் வருவதால் இரவே

In Public domain: Digitization Muthulakshmi Research Academy

ஸ்பர்ஶாஹூதி என நிச்சயமாகிறது.

கீழே அநேக ஆகம ச்லோகங்களுடைய குறிப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வித்வான்கள் அதனை சரிபார்த்துக் கொள்ளலாம். ஜீர்ணோத்தாரண விஷயத்திலும் இரவே ஸ்பர்ஶாஹூதி என்பதற்கு பிரமாணங்கள் உள்ளது.

ஷ பூர்வகாமிகம் 126-வது ச்லோகத்தில் "சாந்தி கும்பஸ்ய ஸ்ருக் வாரி சாந்தி ஸாந்நித்ய காரணம்" என்று இருப்பதால், சாந்தி கும்பத்தில் ஸ்ருக்கினால் ஆஜ்யம் விடச் சொல்லி இருக்கிறதே தவிர, நேரடியாக பிம்பத்திற்கு அல்ல என்பதையும் கவனிக்கவேண்டும்.

192-ம் பக்கம், ப்ரதிமா பிரதிஷ்டா விதி படலம், 75-வது ச்லோகம் முதல் பார்க்க.

79-வது ச்லோகம்: "ஸ்பர்ஶநம் பூர்வவத் குர்யாத் சாந்த்யம்ப: ப்ரோக்ஷணம் தத: । அத்ரானுக்தம் து யத்ஸர்வம் லிங்க ஸ்தாபன வந்நயேத் ॥ ராத்ரி சேஷம் வ்யபோஹ்யத ப்ரபாதே விமலேததா ॥"

விமான ப்ரதிஷ்டா விதிபடலம் பக்கம் 194: "தத்வ தத்வேஶ்வராந் தஸ்ய ஹூத்வா பூர்ணாம் ஸமாசரேத் ப்ரபாதே".

மண்டப ஸ்தாபன விதி படலம், பக்கம் 196: "தத்வாத் தஸ்ய ததோஹூத்வா பூர்ணாஹூதிமதாசரேத் ப்ரபாதே குரு".

வ்ருஷப ஸ்தாபன விதி படலம், பக்கம் 206-ல் ச்லோகம் 73-லிருந்து 75 வரை பார்க்க.

<u>உத்தரகாமிக ஆகமம்</u>

பீட ப்ரதிஷ்டா விதி, 25-வது படலம், பக்கம் 142, ச்லோகம் 147 முதல் 149 வரை, தர்ப்ப ஸ்பர்சனமும், சாந்தி கும்ப ப்ரோக்ஷணமும் இரவே செய்யவேண்டும் என்றும், 143-

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ல் சாந்தி கும்ப அபிஷேகமும் சொல்லப்பட்டுள்ளது.

பாணலிங்க ஸ்தாபனம், 26-வது படலம், 144-வது பக்கம் மேற்கூறிய விஷயத்தையே சொல்லுகிறது. கீழ்வரும் பகுதிகளிலும் இது குறித்த, இதை உறுதி செய்யும், வாசகங்களைக் காணலாம்.

காம்ய லிங்க ப்ரதிஷ்டை, 27வது படலம், 153-வது பக்கம், 134-வது ச்லோகம்.

ஸதாசிவ ஸ்தாபனம், 43-வது படலம், 160-வது பக்கம், 15வது ச்லோகம்.

தேவி ஸ்தாபன விதி, 44-வது படலம், 163-வது பக்கம், 86-வது ச்லோகம்.

விக்நேச்வர ப்ரதிஷ்டா விதி படலம், 45-வது படலம், 169-வது பக்கம், 93-வது ச்லோகம்.

ந்ருத்த மூர்த்தி ஸ்தாபன விதி படலம், 46-வது படலம், பக்கம் 173, ச்லோகம் 65.

ஸோமாஸ்கந்த ஸ்தாபன விதி படலம், 47-வது படலம், பக்கம் 175, ச்லோகம் 28.

சந்த்ரசேகர ஸ்தாபன விதி படலம், 48-வது படலம், பக்கம் 176-177, ச்லோகம் 40.

புராரி ஸ்தாபன விதி படலம், 49-வது படலம், பக்கம் 177, ச்லோகம் 15.

லிங்கோத்பவ ப்ரதிஷ்டா விதி படலம், 50-வது படலம், பக்கம் 178, ச்லோகம் 22.

தக்ஷிணாமூர்த்தி ஸ்தாபன விதி படலம், 51-வது படலம், பக்கம் 180, ச்லோகம் 50.

பிக்ஷாடண ப்ரதிஷ்டா விதி படலம், 52-வது படலம், பக்கம் 182, ச்லோகம் 36.

பலிபர்த்ரு ப்ரதிஷ்டா விதி படலம், 53-வது படலம், பக்கம் 183, ச்லோகம் 19.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சரபேச ப்ரதிஷ்டா விதி படலம், 54-வது படலம், பக்கம் 185, ச்லோகம் 26.

சண்டேசாநுக்ரஹ ப்ரதிஷ்டா விதி படலம், 55-வது படலம், பக்கம் 186.

பக்தாநுக்ரஹ ப்ரதிஷ்டா விதி படலம், 56-வது படலம், பக்கம் 188, ச்லோகம் 52.

காலாரி காமாந்தக ப்ரதிஷ்டா விதி படலம், 57-வது படலம், பக்கம் 189-190, ச்லோகம் 34.

கல்யாணமூர்த்தி ப்ரதிஷ்டா விதி படலம், 58-வது படலம், பக்கம் 172, ச்லோகம் 55.

விஷ்ணுமூர்த்தி ப்ரதிஷ்டா விதி படலம், 60-வது படலம், பக்கம் 194-195, ச்லோகம் 20-38.

த்ரிமூர்த்தி ஸ்தாபன விதி படலம், 61-வது படலம், பக்கம் 196, ச்லோகம் 17, 20.

வ்ருஷாரூட: ப்ரதிஷ்டா விதி படலம், 62-வது படலம், பக்கம் 197, ச்லோகம் 22.

கங்காதர ப்ரதிஷ்டா விதி படலம், 63-வது படலம், பக்கம் 198, ச்லோகம் 19.

குஹ ஸ்தாபன விதி படலம், 64-வது படலம், பக்கம் 200, ச்லோகம் 61.

சண்டேச ஸ்தாபன விதி படலம், 65-வது படலம், பக்கம் 205, ச்லோகம் 57.

சிவபக்த ப்ரதிஷ்டா விதி படலம், 66-வது படலம், பக்கம் 208, ச்லோகம் 28.

பூர்வகாரண ஆகமம்

59-வது படலம், லிங்க ஸ்தாபன விதி படலம், பக்கம் 450-ல், "தத: ஸ்பர்ஶாஹூதிம் குர்யாத்" என ஆரம்பித்து, "ந்ருத்தகேய ஸமாயுக்தம் ராத்ரி சேஷம் வ்யபோஹ்யத: । ஏகராத்ரம் த்விராத்ரம் வா த்ரிராத்ரம் வா அதிவாஸயேத் ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தத: ப்ரபாதே" என்று காணப்படுவதும் கவனிக்கத் தக்கது.

பல இடங்களில் "த்ரவ்யாந்தே வ்யாஹ்ருதிம் ஹுத்வா ஸ்பர்ஸேயு: தந்மந்த்ரகை: । ஏவம் ஜாகரணம் ராத்ரௌ" எனவும் உள்ளது. இவ்வாறு உள்ளதைப் பின்னர் மொத்தமாகக் கூறுகிறேன்; எந்த படலம் என்பதை மாத்திரம் கீழே கூறுகிறேன். பெரியோர்கள் ஆராய்ந்து பார்க்கவும்.

1. பரிவார ஸ்தாபந விதி, 60-வது படலம்.

2. பலிபீட பிரதிஷ்டை, 470-வது பக்கம்.

3. ரத்னலிங்க ஸ்தாபன விதி படலம், 82-வது படலம், 474-வது பக்கம்.

4. சூல ஸ்தாபன விதி படலம், 492-வது பக்கம்.

5. திரிசூல ஸ்தாபன விதி படலம், 68-வது படலம், 499-வது பக்கம்.

"ப்ரம்மஜஜ்ஞாந மந்த்ரை:, இதம் விஷ்ணுர் மந்த்ரை:, த்ர்யம்பகேந மந்த்ரேண, மூல ப்ரஹ்ம ஷடங்கைச்ச" என விரிவாக, முன்னிரவே ஸ்பர்சாஹுதி பற்றிக் கூறியுள்ளது.

6. பாசுபத ஸ்தாபன விதி படலம், 69-வது படலம், 503-வது பக்கம்.

7. விமான ஸ்தாபன விதி படலம், 70-வது படலம், 509-வது பக்கம்.

8. லிங்கோத்பவ ஸ்தாபன விதி படலம், 74-வது படலம், 531-வது பக்கம்.

9. ந்ருத்தமூர்த்தி ஸ்தாபன விதி படலம், 75-வது படலம், 542-வது பக்கம்.

10. தக்ஷிணாமூர்த்தி ஸ்தாபன விதி படலம், 76-வது படலம், 550-வது பக்கம்.

11. சந்திரசேகர ஸ்தாபன விதி படலம், 77-வது படலம், 557-வது பக்கம்.

12. வைவாஹ்ய ஸ்தாபன விதி படலம், 78-வது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

படலம், 568-வது பக்கம்.

13. ஸோமாஸ்கந்த ஸ்தாபன விதி படலம், 79-வது படலம், 580-வது பக்கம்.

14. அர்த்தநாரீஸ்வர ஸ்தாபனம், 80-வது படலம், 587-வது பக்கம்.

15. கங்காள பிரதிஷ்டா, 82-வது படலம், 602-வது பக்கம்.

16. கஜஸம்ஹார பிரதிஷ்டா, 83-வது படலம், 609-வது பக்கம்.

17. காலநிக்ரஹ ஸ்தாபனம், 84-வது படலம், 614-வது பக்கம்.

18. புராரி ஸ்தாபன விதி படலம், 85-வது படலம், 622-வது பக்கம்.

19. சண்டேசர் ஸ்தாபன விதி படலம், 87-வது படலம், 631-வது பக்கம்.

20. கௌரீ ஸ்தாபன விதி படலம், 89-வது படலம், 636-வது பக்கம்.

பூர்வ காரண ஆகமத்தில், 637-வது பக்கத்தில், க்ருத சிரோர்ப்பணம் பற்றிய விவரங்கள் உள்ளன. விளக்கம் பிறகு கூறுகிறேன்.

21. துர்க்கா ஸ்தாபன விதி படலம், 98-வது படலம், 659-வது பக்கம்.

22. லஷ்மீ ஸ்தாபன விதி படலம் -

23. மோஹிநீ ஸ்தாபன விதி படலம், 101-வது படலம், 669-வது பக்கம்.

24. பாலஸ்தாபன விதி படலம், 135-வது படலம், 787-வது பக்கம்.

[தத்வார்ச்சனைக்கும் இதற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும், (பக்கம் 796-ல்) மண்டலாபிஷேத்தில் சங்காபிஷேகம் சொல்லப் பட்டுள்ளது கவனிக்கத் தக்கது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அங்கு, "சங்காபிஷேகம் கர்தவ்யம் சத்வாரிம்சத் திநாவதி" என வருவதால், மண்டலாபிஷேகத்தில் சங்காபிஷேகம் செய்யலாம் என்றாகிறது.]

25. அஷ்டபந்தன விதி படலம், 796-வது பக்கம்.

26. ஸம்ப்ரோக்ஷண விதி படலம், 137-வது படலம், 815-வது பக்கம்.

ஸுப்ரபேதாகமம்

லிங்க பிரதிஷ்டை, 36-வது படலம், 180-வது பக்கம்.

ஸகள பிரதிஷ்டை, 37-வது படலம், 190-வது பக்கம்.

சக்தி பிரதிஷ்டை, 38-வது படலம், 195-வது பக்கம் 47-வது ச்லோகம்.

வ்ருஷப ஸ்தாபனம், 40-வது படலம், பக்கம் 202.

இவைகளிலும் இரவே ஸ்பர்சாஹுதி என வருகிறது.

உத்தரகாரண ஆகமம்

அஷ்டபந்தன விதி படலம், பக்கம் 137-138.

எந்த திக்கில் அஷ்டபந்தனம் போகிறதோ, அப்பொழுதே கடத்தில் ஆவாஹித்து, யாகசாலை பூஜை யாவும் சொல்லும் தத்வார்ச்சனை ஸ்பர்சஹுதி கூறுகிறது. அதில் கூட சாந்திகும்ப ப்ரோக்ஷணம், தர்பை-ஸ்பர்சனம் மாத்திரமே சொல்லியுள்ளது.

குமார தந்திரம்

சக்தி அஸ்திர ஸ்தாபன விதி, 29-வது படலம், 155-வது பக்கம்.

மஹாவல்லி-தேவஸேநா பிரதிஷ்டா, 236-வது பக்கம்.

அசல ஸ்தாபன விதி படலம், 26-வது படலம், 141-வது பக்கம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸௌமித்ர ஸ்தாபனம், 42-வது படலம், 240-வது பக்கம்.

கஜ ஸ்தாபனம், 43-வது படலம், 242-வது பக்கம்.

ரௌரவ ஆகமம் - II

பாலஸ்தாபன விதி படலம், 27-வது படலம், பக்கம் 8.

12-வது பக்கத்தில் சொல்லியுள்ள க்ருதசிரோர்ப்பணம் என்பதை ஸ்பர்சாஹுதி என்று சிலர் தவறாக அர்த்தம் செய்து கொள்கிறார்கள். க்ருதசிரோர்ப்பணம் என்பது, கும்பாபிஷேகத்தன்று யாகசாலையிலுள்ள கும்பத்தைக் கொண்டுபோய் மூலஸ்தானத்தில் வைத்து, பிறகு, அருகு, அக்ஷதை, நெய் இவைகளால் பூஜை செய்து, சிரஸில் வைப்பது ஆகும்.

லிங்க ஸ்தாபன விதி படலம், 28-வது படலம், பக்கம் 23. (தீப்தா ஆகமத்திலுள்ள வாக்யமும் இதே போன்றே உள்ளது).

பக்கம் 24-ல் "ராத்ரிசேஷம் ஜாகரணம்" என்று கூறப்பட்டுள்ளது.

பிண்டிகா ஸ்தாபன விதி படலம், 29-வது படலம், 33-வது பக்கம்.

கௌரீ ஸ்தாபன விதி படலம், 11-வது படலம், பக்கம் 53. 54-வது பக்கத்தில் க்ருதசிரோர்ப்பணம் சொல்லப்படுகிறது.

ஸோமேச்வர ஸ்தாபன விதி படலம், பக்கம் 72,

விஷ்ணு ஸ்தாபன விதி படலம், 36-வது படலம், பக்கம் 127.

ரௌரவ ஆகமத்தில், கீழே உள்ள வீராகமக் குறிப்பும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சொல்லப்படுகிறது:

மோஹினி ஸ்தாபன விதி படலம், 37-வது படலம், பக்கம் 134.

நாகராஜ ஸ்தாபன விதி படலம், 38-வது படலம், பக்கம் 141.

ரௌரோத்தர ஆகமம்

ப்ராஸாத விதி படலம், பக்கம் 11-ல் கீழே உள்ள வ்யாக்யான குறிப்பு:

"அதிவாஸஸ்ய அதிராத்ரௌ இத்யநேந பதேந அதிவாஸꣳஹர்க ராத்ரௌ இத்யர்த்த: போத்யதே ஸாராத்ரி ப்ரதிஷ்டா திவஸாத் பூர்வ தின ராத்ரி: (ப்ரதிஷ்டா திவஸஸ்ய ஆதௌ ராத்ரௌ இதி உத்தரார்த்த:)". பிரதிஷ்டா தினத்திற்கு முன் ராத்ரியில் செய்யக்கூடிய யாகத்திற்கு அதிவாஸ யாகம் என்று பெயர், அந்த அதிவாஸ யாகத்தில்தான் ஸபர்சாஹுதி ஸ்பஷ்டமாக சொல்லியுள்ளது.

ப்ராஸாத விதி படலம், 5-வது படலம், பக்கம் 13.

சதுர்மூர்த்தி விதி படலம், 6-வது படலம், பக்கம் 16: "பிரதிஷ்டா திவஸ்ய ஆதௌ ராத்ரௌ ததராதிவாஸயேத்". பக்கம் 18: "ஹுத்வா மூர்த்திம் ஸ்ப்ருஸேத் தத: பிரதிமா வஸ்த்ராணி குசாம்ச பரிவர்ஜயேத்".

அஷ்டமூர்த்தி விதி, 7-வது படலம், பக்கம் 21-23.
பஞ்சமூர்த்தி விதி, 8-வது படலம், பக்கம் 25-27.

விக்நேச்வர பிரதிஷ்டா விதி படலம், 9-வது படலம், பக்கம் 34. அந்தந்த அங்கத்தை தர்பையில் தொடச் சொல்லியுள்ளது. மறுபடியும் ஆஹுதி செய்து த்ரவ்யத்தை குசை: ஸ்பர்சயேத். இதே போல,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தக்ஷிணாமூர்த்தி பிரதிஷ்டா விதி படலம், 10-வது படலம், பக்கம் 43.

விஷ்ணு பிரதிஷ்டா விதி படலம், 11-வது படலம், பக்கம் 50. "சர்வாங்கைது குசை ஸ்பர்சேத்".

ப்ரஹ்ம பிரதிஷ்டா விதி, 12-வது படலம், பக்கம் 56.

துர்கா பிரதிஷ்டா விதி படலம், 13-வது படலம், பக்கம் 63. பக்கம் 83: "அக்ரம் அக்ரேண ஸம்ஸ்ப்ருஶ்ய । மத்யம் மத்யேண ஸ்ம்ஸ்ப்ருஶ்ய । மூலம் மூலேந ஸம்ஸ்ப்ருஶ்ய । ஸ்வ மந்த்ரை: ஸம்ஸ்ப்ருசேத் குசை:"

முகலிங்க ப்ரதிஷ்டா விதி, 17-வது படலம், பக்கம் 94.

பாணலிங்க ப்ரதிஷ்டா விதி படலம், 18-வது படலம், பக்கம் 98.

இஷ்டலிங்க ப்ரதிஷ்டா விதி படலம், 19-வது படலம், பக்கம் 101.

ரத்ன லிங்க ப்ரதிஷ்டா விதி படலம், 20-வது படலம், பக்கம் 100.

குறிப்பு: தீப்தாகமம். காளி ப்ரதிஷ்டை பக்கம் 145. "ராத்ரௌ ஜாக்ரம் கால ச"

சந்த்ரசேகர ப்ரதிஷ்டை, பக்கம் 150

அஜிதாகமம் - II

ப்ரதிமா ஸ்தாபன விதி, 40-வது படலம், பக்கம் 102-ல், "ஆஸ்யாதிந் யதா சேஷாணி" என ஆரம்பிக்கிறது. அதில், மத்தியில், "ஆச்சார்ய: மூர்த்திபை ஸார்த்தம் சம காலேஷு ஹோமயேத் । மூர்த்தாதி பாத பர்யந்தம் மூலமந்த்ரேண ஸம்ஶ்ப்ருஸேத் தத: ப்ராகாதி ஹோதார: ஸ்ப்ருஸேயு: ததைவ ததட்பிங்கைஶ்ச ததங்கேஷு ஸம்ஸ்ப்ரஸேத் । அதிவாஸந கர்ம ஏவம் ஸமாப்ய । குருநா ஸஹ ஹோதார: ஸர்வம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காலாத்ரிபோஷம்தீ ஜாகராத் திநீத்வா ப்ராத: உத்தா" என்றெல்லாம் விளக்கப்பட்டது. ப்ரதானத்தில், ஆச்சாரியர் ருத்விஜர்கள், சம காலமாக ஹோமம் செய்யப்படவேண்டும் என்பது இதில் தெரியவருகிறது.

ஸ-அம்பிகா உபஸ்தாபன விதி, 41-வது படலம், பக்கம் 112. முன்படலத்தில் கூறியபடியே விளக்கமாக உள்ளது.

ஸ-ப்ரஹ்மா ஸ-கேஶவ ஸ்தாபனம், 42-வது படலம், பக்கம் 118.

ப்ரதிமா ப்ரதிஷ்டை, 44-வது படலம், பக்கம் 128.
வ்ருஷப ப்ரதிஷ்டை, 46-வது படலம், பக்கம் 136.
ப்ரஹ்மா ப்ரதிஷ்டை, 47-வது படலம், பக்கம் 149.
மாத்ருகா ப்ரதிஷ்டை, 48-வது படலம், பக்கம் 150.
விநாயகர் ப்ரதிஷ்டை, 47-வது படலம், பக்கம் 158.
ஸ்கந்த ஸ்தாபந படலம், 50-வது படலம், பக்கம் 167.
ஹோதார: ஸாதகா: ப்ரோக்தா: புத்ரகா: ததாந்யகே.

நிர்வாண தீக்ஷை கூட இல்லாத விசேஷ தீக்ஷை மட்டும் உள்ள புத்ரகன், ஆச்சாரியம் செய்யக்கூடிய தகுதி (விஷய ஞாநம்) உடையவனாக இருப்பின், ப்ரதான ஆசார்யன் அனுமதியுடன் ரித்விக்காக இருந்து கிரியைகளைச் செய்யலாம் என்பதற்கு ப்ரமாணமும் உள்ளது. இது கௌண பக்ஷம்.

இதிலும் ஸ்பர்ஶாஹூதி ராத்திரி செய்ய வேண்டும் (பக்கம் 168).

சண்டேச ப்ரதிஷ்டை, 51-வது படலம், பக்கம் 176. "ஸ்பர்ஶநம் புஷ்ப பாணிநா" என உள்ளது.

ஜேஷ்டா ஸ்தாபனம், 52-வது படலம், பக்கம் 182.
சூர்ய ஸ்தாபன விதி, 54-வது படலம்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

அஜிதாகமம் - III

க்ஷேத்ரபால ஸ்தாபன விதி, 56-வது படலம், பக்கம் 12. "ததங்கம் ஸ்ப்ருஶேந்மந்த்ரீ புஷ்ப பாணிநா ராத்ரிந்து தேசிக:".

பரிவார ஸ்தாபந படலம், 57-வது படலம், பக்கம் 16.

திரிசூல ஸ்தாபன விதி, 60-வது படலம், பக்கம் 34.

ஜீர்ணோத்தாரண, ப்ராயச்சித்த விதி, 74-வது படலம், பக்கம் 140. ஸ்பர்ஶாஹூதி இரவே என்று இங்கெல்லாம் காணப்படுகிறது.

75-வது படலத்தின் கீழே உள்ள உத்தரகாமிக வாக்யம்: கும்பாபிஷேகத்தில் ப்ரதி காலத்திலும் ரக்ஷை சாத்துதல் உண்டு.

இரவிலேயே தத்வார்ச்சனை-ஸ்பர்ஶாஹூதி செய்ய வேண்டும் என்பதற்கும், சாந்தி கும்பத்தில் சம்பாத ஹோமம் செய்து, ஷ கும்பத்தில் உள்ள ஜலத்தை பிம்பத்திற்கு ப்ரோக்ஷணம் செய்வதன் மூலமும் தர்ப ஸ்பர்சத்தினாலும் ஸ்பர்ஶனம் செய்ய வேண்டும் என்பதற்கும், குறிப்பிட்டுள்ள எல்லா ஆகமங்களிலும் விபரங்கள் கிடைக்கின்றன.

தத்வரூபமாக, சிலைகளை மந்த்ர ந்யாசம் செய்து, அதில் ஜீவ ந்யாசம் செய்வதற்காக இக்கிரியை செய்ய வேண்டி உள்ளது. கும்பாபிஷேகத்தன்று பகவத் சக்தியானது சித் ப்ரகாச ஆவாஹனத்தின் மூலம் சூர்ய சந்திராள் உள்ளவரை அந்த சிலையில் சாந்நித்யமாக இருப்பதற்கு ஏற்ற இடமாக செய்யப்படுகிறது. சுத்த தத்வம், மிச்ர தத்வம், அசுத்த தத்வம் - இவைகளை முதலில் ஸ்ருஷ்டி மார்க்கமாக பூஜை செய்து, பிறகு ஸம்ஹார மார்க்கமாக ஒன்றையொன்ற சந்தானம் செய்வது, சுத்த தத்வமானது அதற்கு மேலுள்ள

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தத்வங்களில் புகுந்து அந்த தத்வங்களையும் சுத்தப்படுத்துவதாக உள்ளது. அந்தந்த காரணேச்வரர்களான ப்ரம்மா, விஷ்ணு, ருத்ரன் இவர்களையும், க்ரியா, ஞான, இச்சா சக்திகளை பீடத்திலும் ந்யாசம் செய்து, அந்த சிலைக்கு தோஷம் வராமல் பாதுகாக்கும்படி ப்ரார்த்தனை செய்து, அவரவர்களது மந்த்ரங்களினாலும் மூல மந்த்ர ப்ரம்மாங்க மந்த்ரங்களினாலும் (ஹோமம் செய்து), ந்யாசம் செய்து. எட்டு திக்கிலும் அஷ்ட மூர்த்திகளையும் அதனதன் அதிபதிகளையும் மூர்த்தி சாந்நித்யத்திற்காக பூஜித்து, அக்நியில் ஹோமம் செய்து, தர்பையினால் அந்தந்த இடங்களை ஸ்பர்சித்து ரக்ஷா-அவகுண்டனம் செய்து ப்ரார்த்திப்பது இக் க்ரியையில் முக்கியமானது.

நிர்வாண தீக்ஷையில் கூட, கலா ஸோதனம் செய்யும்போது, ஸ்ருஷ்டி க்ரமமாக சிரஸ் முதல் பாதம் வரை, தத்வங்களை ஸுஷும்னா நாடி ரூபமாக உள்ள சூத்திரத்தில் ஸ்ருஷ்டி மார்க்கமாக ஆகர்ஷித்து, சாந்த்யதீத கலை முதலாக ஐந்து கலைகளிலும் க்ரந்தி மூலம் அஸ்த்ர கவசங்களினால் பந்தனம் செய்கிறோம். மறுநாள் ஸம்ஹார மார்க்கமாக ஸூத்ரங்களை அந்தந்த க்ரந்திகளுடன் அக்னியில் சமர்ப்பித்து, பாசச்சேதம் செய்வித்து, பஸ்மமாக ஆக்கி, அதிலுள்ள பவித்ரமான ஆத்மாவை க்ரஹித்து, சுத்தமாக்கி சிஷ்யனின் சரீரத்தில் மறுபடியும் சேர்க்கிறோம்.

இதே போலத்தான் சிலையில் உள்ள தோஷங்களை விலக்கி, பகவத் சக்தி மறுநாள் குடியேறத் தகுந்தபடி அதனை ஜீவந்யாச புரஸ்சரமாக செய்து வைப்பது தத்வார்ச்சனை-ஸ்பர்ஶாஹுதியின் இலக்கணமாகும்.

அகோர சிவாச்சாரிய பத்ததியில் உள்ளபடி, நூதன பிம்பமாயின் சயனத்திலோ (அல்லது) அஷ்டபந்தன சமர்ப்பணமான பிறகோ, ஜீர்ணோத்தாரண விதிப்படி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கர்ப்பகிரஹம் சென்று, பிம்பசுத்தி செய்த பின், பிம்பத்திற்கு ஆதாரசக்தி முதல் வித்யா தேஹ நேத்ர ந்யாசம் வரை பூஜை செய்து, பிறகு சிவ தத்வம் முதல் ப்ருத்வீ தத்வம் வரை பூஜித்து, அவைகளை மூன்று பாகங்களாக ஆக்கி (சிவதத்வம், வித்யாதத்வம், ஆத்மதத்வம்), அந்தந்த அதிபதிகளுடன் மூர்த்தி-மூர்த்தீச்வர-மூர்த்தீச்வரிகளையும் அஷ்ட திக்குகளில் பூஜித்து, பிறகுதான் அக்னியில் இவைகளை பூஜித்து ஹோமம் செய்து, பிறகு ஆத்ம தத்வ சுத்தி, வித்யா தத்வ சுத்தி, சிவ தத்வ சுத்தி ஆகியவைகளைச் செய்வித்து, சாந்தி கும்பத்தில் சம்பாதஹோமம் செய்து, சாந்தி கும்ப ப்ரோக்ஷணத்திலேயே அந்தந்த ஹோமம் செய்த சக்தியானது பிம்பத்தில் ந்யாசம் செய்து, ஜபம் செய்யப்பட்டு, பிம்பத்திற்கு சாந்நித்யம் ஏற்படச் செய்கிறது. "சாந்தி கும்பஸ்ய ஸ்ருக் வாரி சாந்தி ஸாந்நித்ய காரணம்" என்று பூர்வ காமிகத்தில் உள்ளது. அதை, "ஸ்ருசா ஸம்பத்தம் வாரி" என பதம் பிரிக்கவும். அக்னியில் இருந்து கும்பாபிஷேகத்தன்று மூர்த்தியினுடைய சக்தியானது எப்படி ப்ராதான கும்பத்தில் சேர்க்கப்பட்டு பிம்பத்திற்கு கும்பாபிஷேகம் மூலமாகவே செல்கிறதோ, அதேபோலதான் சம்பாதம் செய்யப்பட்ட சாந்தி கும்ப ப்ரோக்ஷணம் மூலம் அக்னியில் ஹோமம் செய்த மந்த்ர சக்தியானது பிம்பத்தை அடைகிறது. சாந்தி கும்பம் "ஸம்ஹிதயா சம்பதாஹூதம் க்ருத்வா" என்பதால் அனைத்து மந்த்ரங்களுக்கும் ஆதாரமான ஸம்ஹிதா மந்த்ரங்களின் மூலம் ஹோமம் செய்யப்பட்ட மந்த்ர சங்க்யையானது, பாசுபதாஸ்த்ர கும்பத்தில் ஸம்புடீகரணம் போல் செய்யப்பட்டு பிம்பத்திற்குள் சென்றடைகிறது.

சில இடங்களில் முதலில் அக்னியில் தத்வங்களை பூஜித்து ஹோமம் செய்து விட்டு, பிறகு சாந்தி கும்பத்துடன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உள்ளே (கர்ப்பக்ரஹம்) சென்று, பிறகு ஆத்ம தத்வம் வரை பிம்பத்திற்கு பூஜை செய்து, பிறகு ப்ரோக்ஷணமும் ஸ்பர்சநமும் செய்கிறார்கள். தத்வார்ச்சனை செய்து விட்டு வந்து, பிறகு அக்னியில் பூஜிப்பதே முறை. நான்கு முறை செல்ல வேண்டி இருக்கிறதே எனக் கருதி, மூன்றே முறையில், தத்வார்ச்சனை-ஸ்பர்ஶாஹுதியை முடிக்க எண்ணம் கொண்டு, முதலிலேயே அக்னியில் தத்வங்களையும் மூர்த்தி-மூர்த்தீச்வர-மூர்த்தீச்வரிகளையும் பூஜை செய்துவிட்டு, ஹோமம் செய்து, சாதனங்களுடன் கர்ப்பக்ரஹம் அடைந்து, அவைகளைக் கீழே வைத்துவிட்டு பிறகு பிம்பத்தில் பூஜை செய்கிறார்கள்.

இந்த முறை சரியானதா என இப்படிச் செய்பவர்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும். சாதாரணமாக வேதிகார்ச்சனை செய்த பிறகே அக்னி கார்யம் செய்கிறோம். இதேபோலத்தான் பிம்பத்திற்கு தத்வார்ச்சனை செய்தபிறகு, யாகசாலையில் பூஜை ஹோமங்கள் செய்து, அந்த சாந்நித்யத்தை பிம்பத்திற்கு ந்யாசம் செய்து, அந்தந்த இடங்களை பவித்ரமாகச் செய்யவேண்டும்.

சில இடங்களில் ஸ்பர்ஶாஹுதியின்போது "ஸ்வா" என மட்டும் கூறி, அக்னியில் தத்வ பூர்ணாஹுதி செய்துவிட்டு, பிறகு ஸ்ருக்-ஸ்ருவத்துடன் / கர்ப்பகிரஹம் சென்று இறைவனை பூஜித்து, "ஹா" என அந்த பிம்பத்தில் அந்தந்த பாகத்தில் அவசிஷ்ட ஆஜ்யத்தை விடுகிறார்கள். சம்பாத: என்ற வார்த்தைக்கு ஒன்றுடன் ஒன்றை சம்மந்தப்படுத்துவது என்று அர்த்தம். மிக அருகே உள்ள அக்னிக்கும் இன்னொரு வஸ்துவிற்கும் தான் ("ஸ்வா", "ஹா" என்ற) மந்த்ரங்களை சேர்ந்தாற்போல் ஒலிக்கச் செய்து, சம்பாதம் செய்ய முடியும். யாகசாலையில் அக்னியில் "ஸ்வா" எனக் கூறிவிட்டு பிறகு நீண்ட இடைவெளிக்குப் பிறகு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கர்ப்பக்ருஹம் அடைந்து "ஹா" எனக் கூறும்போது மந்த்ர விச்சிந்நம் ஏற்படாதா? மேலும், பூர்ணாஹுதியை "வௌஷட்" என்று சொல்லிச் செய்யவேண்டும் என வாதுளசுத்தாக்யம் கூறுகிறது. "வௌஷட்" எனக் கூறுவதற்கு பதில் "ஸ்வா" எனக் கூறினால் பூர்த்தியாகுமா? இந்த நடைமுறைப் பழக்கம் எப்படி வந்தது? இதற்கு விளக்கம் என்ன? என்பதைக், கற்றறிந்த பெரியோர்கள் தான் கூற வேண்டும்.

இனி, இரவில் தத்வார்ச்சனை-ஸ்பர்ஶாஹுதி செய்வதால் என்ன சௌகர்யம் என்பதை ஆராய்வோம்.

மூலாகம சாஸ்த்ரத்தில் உள்ளபடியும் முன் இரவில் தத்வார்ச்சனை-ஸ்பர்ஶாஹுதி செய்வது சரியாக இருக்கிறது. முன் இரவில் செய்யும்போது அவகாசம் நிறைய இருப்பதனால், இரவு பூர்ணாஹுதிக்கு முஹூர்த்தம் என்று ஒன்று கிடையாதாகையால், பத்ததியில் உள்ளபடியோ அல்லது அதில் சொல்லியுள்ள கடைசி பக்ஷ அளவிலாவது ஹோமங்கள் செய்து, ஸாவதானமாக தத்வார்ச்சனையையும் ஸ்பர்சாஹுதியையும் செய்ய முடிகிறது. மறுநாள் காலை யாகசாலை பூஜை க்ரமப்படி செய்து, ப்ராயச்சித்த ஆஹுதிகள் செய்து, சரியான முஹூர்த்தத்தில் கும்பாபிஷேகம் செய்ய சௌகர்யமாகிறது. ஆனால் கும்பாபிஷேகத்தன்று காலை தத்வார்ச்சனை-ஸ்பர்ஶாஹுதியை வைத்துக்கொண்டிருப்பவர்கள் எவ்வளவு ச்ரமப்படுகிறார்கள் என்பது அவர்களுக்கே தெரியும். போதிய அவகாசம் கிடைக்காததாலும், கும்பாபிஷேக முஹூர்த்தத்தையே கவனமாகக் கொள்ள வேண்டியுள்ளதாலும், இந்த தத்வார்ச்சனை-ஸ்பர்சாஹுதிக்குக் குறைந்த பக்ஷமாகச் சொல்லியுள்ள ஹோமங்களைக் கூடச் செய்ய முடிவதில்லை. சில இடங்களில், ப்ரமுகர்களும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொதுமக்களும் சூழ்ந்துகொண்டு இருக்கும்போது, கும்பாபிஷேகத்தன்று யாகசாலைக்கும் மூலஸ்தானத்துக்கும் மூன்று முறை போய்ப் போய் திரும்புவதற்கு நிறைய நேரம் வேறு வேண்டியிருக்கிறது. இதிலும், விடியற்கால கும்பாபிஷேக முஹூர்த்தம் என்றால் சில செளகர்யாசெளகர்யங்களால் ருத்விஜர்கள் உரிய நேரத்தில் யாகசாலைக்கு வந்து சேர முடிவதில்லை. இதனாலெல்லாம், இந்த தத்வார்ச்சனை-ஸ்பர்சாஹுதி என்ற முக்கிய க்ரியையை சரியாகச் செய்ய முடிவதில்லை என்பது அனைவரும் அறிந்த உண்மை. சாஸ்திரத்தில் இல்லாதபோதும், எந்தக் காரணத்தினாலோ இந்தத் தத்வார்ச்சனை-ஸ்பர்சாஹுதியைக் காலையில் செய்வதனால், ச்ரமங்களே தவிர, பூர்ணமாகச் செய்யவும் முடிவதில்லை. இதையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும்போது, முன் இரவே இந்தக் க்ரியையை நடத்தினால், உரிய ஹோமங்கள் செய்து, மூர்த்தி ஸாந்நித்யம் அதிகமாகும்படி செய்ய இயலும் என்பதையும் கருத்தில் கொண்டு, முன் இரவில் செய்வதே நலம் எனத் தெளிவாகிறது.

கும்பாபிஷேகத்திற்கு முதல் நாள் இரவில், முக்யஸ்தர்கள் முன்னிலையில்தான் அஷ்டபந்தனம் சாத்தவேண்டும் என்பதை சில இடங்களில் வழக்கப்படுத்தி உள்ளார்கள். இரவு வெகு நேரம் வரை விழித்திருந்து அஷ்டபந்தனம் செய்து, அது பூர்த்தியானபின் பிம்பசுத்தியும் ரக்ஷாபந்தனமும் செய்து, அதன் பிறகு தத்வார்ச்சனை-ஸ்பர்சாஹுதி செய்ய நேரம் கிடைக்குமா என்பது சிலரது கேள்வி. அஷ்டபந்தனம் பகலில்தான் சாற்ற வேண்டும் என்று வலியுறுத்தி ஆகம வாக்யம் உள்ளது. அதைப் புறக்கணித்து, அஷ்டபந்தனத்தை இரவில் செய்துவிட்டு, தத்வார்ச்சனை-ஸ்பர்சாஹுதியை கும்பாபிஷேகத்துக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முன்னாள் இரவில் செய்ய வேண்டும் என்ற ஆகம வாக்யங்களைக் கடைப்பிடிக்காது, கும்பாபிஷேகத்தன்று காலையில் ஷ க்ரியைகளை அவகாசம் இல்லாமல் ச்ரமப்பட்டுக்கொண்டு செய்ய வேண்டுமா என்பதை ஆன்றோர்கள் சிந்திக்க வேண்டும்.

எனக்களிக்கப்பட்ட தலைப்பான இந்த தத்வார்ச்சனை-ஸ்பர்ஶாஹூதி பற்றி என்னறிவிற்கு எட்டிய வரையும் ஆகமங்களில் உள்ளபடியும் விளக்கியுள்ளேன். மாறுபட்ட கருத்துள்ளவர்கள் ஆராய்ந்து பார்த்து செயல்படவும் எனக் கோருகிறேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

With Best Compliments from:

D.K.DURAISAMY SA
D.K.D.NARENDRAN B.B.A.
D.K.D.RAJENDRAN
D.K.D.SRINIVASAN

STD : 04112
Shop : 222127
Res : 226719
Cell : 98423-21105

FOR EXCLUSIVE WEDDING SILK SAREES

KUSAL SILKS

Air Conditioned Showroom

91, GANDHI ROAD,
KANCHEEPURAM-631501.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

With Best Compliments from:

Cell : 94432 - 34745
✆ : 04112 - 235745

BUVANA TEXTILES

MANUFACTURERS OF PURE HANDLOOM
COTTON DHOTIES & DRESS MATERIALS

ALL KINDS OF BRAHMIN'S WEDDING
DHOTIES & SILK DHOTIES MANUFACTURERS

No. 33-B, METTU STREET,
KANCHEEPURAM-631501.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy